# திட்டம்

## மாத இதழ்


மலர் 48
இதழ் 11

ஜூலை 2017
ஆஷாட - ஷ்ராவண் 1938-39



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**

முதுநிலை ஆசிரியர்
**ஆ.இளங்கோவன்**
**மு.பொன்னியின் செல்வன்**



- இந்தியாவில் மூத்த குடிமக்களுக்கான சமூகப்பாதுகாப்பு சவால்களும் கவலைகளும்
  - பேராசிரியர் சுமதி குல்கர்னி
- அனைவருக்கும் சுகாதாரம் கிடைக்கச் செய்தல்: இந்தியாவின் தடைபடும் பயணம்
  - பேராசிரியர் கே.சீதா பிரபு
- மாற்றுத் திறனாளிகளுக்கான சமூக பாதுகாப்பு
  - சந்தியா லிமாயி
- விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க : நிஜத்திலிருந்து தொலைநோக்கு வரை
  - நிலப்ஜா கோஷ்
- முதிர்ந்த வயதில் வருவாய்ப் பாதுகாப்பு: தேசிய ஓய்வூதிய முறை
  - டாக்டர் பத்ரி சிங் பண்டாரி
- சமூகப் பாதுகாப்பில் பன்னாட்டு நடைமுறைகளும் இந்தியா முன்னெடுத்துச் செல்லவேண்டிய பாதையும்
  - சந்திரகாந்த் லஹாரியா
- இந்தியாவின் உணவுக் கொள்கை : நிலைத்து நிற்கும் இலக்குகளை அடைய சத்துணவுக்கு முதன்மை அளிக்கும் விவசாயம்
  - Dr. மௌசுமி தாஸ்
- விளிம்புநிலை ஏழை, சிறுபான்மையினர் சமூக நலன் பெற
  - உர்மி கோஸ்வாமி
- இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத் தேசியத் திட்டம்
  - அமுதவள்ளி
- கல்வியில் மதிய உணவு மின்பதிவு விதி ஏற்படுத்தும் தாக்கம்
  - கிரண் பட்டி
- அமைப்புசாரா பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு சவால்களும் போக வேண்டிய பாதையும்
  - Dr. ரூமா கோஷ்
- நிறுவனச் சமூகப் பொறுப்புடைமை விளிம்புநிலை மக்களுக்கு சமூகப் பொருளாதாரத்தில் அதிகாரம் அளிப்பதில் முன்னோடி
  - ஜடேந்தர் சிங்



கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :

துணை இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை
சென்னை -600 006.
தொலைபேசி : 2827 2382

Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

# இந்தியாவில் மூத்த குடிமக்களுக்கான சமூகப்பாதுகாப்பு - சவால்களும் கவலைகளும்

- பேராசிரியர் சுமதி குல்கர்னி

மும்பையில் உள்ள மக்கள் தொகை அறிவியல் பற்றிய பன்னாட்டுக் கல்வி நிறுவனத்தின் பொறுப்பு இயக்குநர்

தற்காலிக அல்லது நாள்பட்ட காரணங்களால் வேலைபார்த்து பொருளீட்ட முடியாதவர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதே சமூகப் பாதுகாப்பு என்பதன் குறிக்கோள் ஆகும். அரசு இதனை வழங்குவது என்பது, வளர்ந்த நாடுகளின் வாழ்க்கைத்தரத்தின் ஒரு உள்ளார்ந்த பகுதியாகவே இருந்து வருகிறது. குறைவான வளர்ச்சி கண்டுள்ள தேசங்களில் நாள்பட்ட வேலைவாய்ப்பின்மை, குறைபாடும், பயனாளிகள் எண்ணிக்கையில் காணப்படும் அதிகரிப்பும்தான் இதற்குக்காரணம். முதியவர்கள் அதிகரித்திருப்பதும், பங்களிப்பு செய்யக்கூடிய உழைக்கும் வயதில் இருக்கக் கூடியவர்களின் சதவீதம் குறைந்துபோயிருப்பதும் ஒரு காரணம். 21ஆம் நூற்றாண்டின் மத்திய வாக்கில் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இந்த நாடுகளில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களாக இருப்பார்கள்.



அதிதீவிரமான இடர்ப்பாடுகள் என்பன இயல்பாக அமையப்பெற்றிருப்பவையாகும். சமூகப்பாதுகாப்பு வழங்குவதற்கான பொருளாதார இடர்ப்பாடுகள் வளரும் நாடுகளில் ஒரு பெரிய தடையாக இருக்கின்றன. வளர்ந்த நாடுகளும் கூட அவர்களின் பொதுமக்கள் ஓய்வூதியத்திட்டத்தை நீடித்து கொண்டு செலுத்துவதில் பிரச்னைகளை சந்தித்துவருகின்றன. அங்கு நீண்ட காலமாக நிலவும் கருவுறுதல்

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் முதியோர் சந்திக்கும் பிரச்னைகளின் தன்மை மிகவும் வேறுபட்டது. நீடித்த வறுமை, வேலை இன்மை, தகுதிக்குக்குறைவான வேலைகள், முறைசாரா பிரிவு மிகவும் பரந்ததாக இருப்பது போன்றவை அவை. சமீபத்தில், வளரும் நாடுகளில் மக்கள்தொகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடிய முதியவர்களுக்கு சமூகப்பாதுகாப்பு அளிப்பது பற்றிய அவசியத்தை

கவனத்திற்கு கொண்டுவந்துள்ளன. மொத்த மக்கள்தொகையில் வயதானவர்களின் விழுக்காடு 7%லிருந்து 14% ஆக அதிகரித்துள்ளது. இத்தகைய அதிகரிப்பு ஐரோப்பிய நாடுகளில் (பிரான்சு, சுவீடன்) நிகழ்வதற்கு 100 முதல் 120 ஆண்டுகளானது ஆனால் இது இந்தியா, சீனா, இன்னும் சில ஆசிய நாடுகளில் வெறும் 40 வருடத்திலேயே இது நிகழ்ந்து விடுகிறது. வளரும் நாடுகளில் இறப்பு விகிதம் குறைந்திருப்பதும் ஒரு காரணம்.

### I. **வயது முதிர்ந்தவர்களின் சமூகப்பாதுகாப்பு பிரச்னைகள்:**

உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு இந்தியாவில் உள்ளது. இதில் உலகில் உள்ள ஏழைகளில் மூன்றில் ஒரு பகுதியினரும், உலகில் உள்ள முதியவர்களில் எட்டில் ஒரு பகுதியினரும் உள்ளனர். அண்மைக்காலம் வரை குடும்பமும் வயது வந்த குழந்தைகளும் மூத்தோருக்கான பாதுகாப்பு அரணாகக் கருதப்பட்டனர். வாழ்நாள் அதிகரிப்பு, கூட்டுக்குடும்பமுறை சிதைவு, பராமரிப்பவர்கள் இல்லாத நிலை, விதவைகளின் எண்ணிக்கை குறைவு, இளைஞர்களின் இடப்பெயர்வு, 'தான் மட்டும்' என்ற சிந்தனை போன்ற சமூக கலாசார மாறுதல்களால் பாரம்பரியமாக இருந்து வந்த இத்தகைய பாதுகாப்பு இப்போது கேள்விக்குறி ஆகி இருக்கிறது. முதிய வயது ஏழைகளிடம் இந்த பிரச்னை மிகவும் கடுமையாக இருக்கிறது. ஆரோக்கியக் குறைவினால் அவர்களால் வேலைபார்க்க முடிவதில்லை. அவர்களிடம் சேமிப்பும் இருப்பதில்லை. ஏழைகள் விளிம்புநிலைக்கு தள்ளப்படுவது உலமயமாக்கலினால் ஏற்பட்டிருக்கும் எதிர்பாராத விளைவாகும். அதிகரித்துவரும் வறுமை முதியவர்களுக்குப் பொருத்தமான சமூகப்பாதுகாப்பு வழங்கவேண்டியதன் அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. மத்திய அரசும் மாநில அரசுகளும் இந்த திசையில் சில முன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஆனால், முன்னேறிய நாடுகளில் சமூகப்பாதுகாப்பிற்கு ஆகும் பணச்செலவுடன் ஒப்பிடும்போது இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இது ஒரு முக்கியமான தடையாகவே இருக்கிறது.

### II. **மதிப்பாய்வு:**

வயதானவர்கள் அதிகரித்துவரும் இந்தியா பற்றிய அறிவுத்தளத்தைக் கட்டமைத்தல் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக முதியவர்களின் நிலை பற்றிய மதிப்பாய்வு 2011ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. தேசிய சராசரியை விடவும் முதியவர்கள் அதிகமாக உள்ள இந்தியாவின் ஏழு மாநிலங்களில் 9,852 வயதானவர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுத்தரவுகளின் அடிப்படையில் 1. இந்தியாவில் வயது முதிர்ந்தவர்களுக்கான பாதுகாப்பு பிரச்னைகளின் பரிணாமம் 2.சமூகப்பாதுகாப்பு வழங்குவதில் அரசாங்கத்தின் முக்கியமான முயற்சிகள் 3.இந்தியாவில் பிரதானமாக உள்ள இரண்டு முக்கியமான ஓய்வூதியத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வும் பயன்பாடும் 4.வயதானவர்கள் இவற்றை குறைவாகப் பயன்படுத்துவதற்கான காரணங்கள் 5. முதியோர் அனைவருக்குமான ஓய்வூதியத்திட்டத்தின் செயலாக்கம் ஆகியவை ஆராயப்பட்டன. .

### III. **இந்தியாவில் இந்தப்பிரச்னையின் பரிணாமம்:**

i. மக்கள்தொகைக்கணக்கெடுப்பு புள்ளிவிவரப்படி

2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 104 மில்லியன் மூத்த குடிமக்கள் (60 வயதிற்கும் மேற்பட்டவர்கள்) இந்தியாவில் இருந்தனர். 2026இல் இந்த எண்ணிக்கை 173 மில்லியனைத்தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2000க்கும் 2050க்கும் இடையில் இந்தியாவில் மூத்த குடிமக்களின் அளவு 360% அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு நேர் எதிராக அவர்களுக்கான ஆதரவு விகிதம் 2001இல் 8.4இல் இருந்து 2011இல் 7ஆக குறைந்தது. 2026இல் இது 5.6% ஆக குறையும் (60 வயதுக்கும் அதிகமானவர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய 15 முதல் 59 வயது வரை உள்ள பணிபுரிவோர் எண்ணிக்கையே ஆதரவு விகிதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது).

வயதான பெண்களின் அதிகரிப்பு: 2050வாக்கில், 60 அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்களின் எண்ணிக்கை வயதான ஆடவர்களின் எண்ணிக்கையான 18.4 மில்லியனைக்காட்டிலும் அதிகரிக்கும். விதவையான இந்தியப்பெண்களின் சதவிகிதம் 60-64 வயதில் 44.5%. 80 அதற்கும் மேற்பட்ட வயதில் 86.8%. இதற்கு மாறாக, 60 முதல் 64 வயதுடைய 10 ஆடவரில் ஒருவர் விதவையர். 80 வயதிற்கும் மேற்பட்ட ஆடவரில் மூன்றில் ஒருவர் விதவையர்.

அதிர்ஷ்டவசமாக, 70% முதியோர் தங்கள் குழந்தைகளுடன் வசிக்கின்றனர். 6% பேர் மட்டுமே தனியாக வாழ்கின்றனர். தனியாக வாழும் முதியவர்களில்மூன்றில் ஒருவர் ஏழையர்.

தனியாக வாழ்பவராயினும், துணையோடு வாழ்பவராயினும் மிகக்குறைந்த சொத்துடையவர்கள் சமூகப் பாதுகாப்பின் தேவையை நாடுகின்றனர். வயதான ஆண், பெண்களில் ஐந்தில் ஒருவர் வயதான காலத்தில் அரசு தங்களுக்கு உதவிடவேண்டும் என்று விரும்புகின்றனர்.

**IV. அரசின் முன் முயற்சிகள்:**

இந்தியாவில் மத்திய, மாநில அரசுகள் முதியோருக்கு ஓய்வூதியத்திட்டங்கள் மூலமாக பண உதவி செய்து வருகின்றன. (இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத்திட்டம், இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத்திட்டம்) பொருள்கள், உணவுப்பாதுகாப்பு சேவைகள் மூலமும் சலுகைகளும் உதவிகளும் தரப்படுகின்றன. முதியோருக்கான தேசியத்திட்டங்களின் மூலம் பல்வேறு அமைச்சகங்கள் இதனை செய்துவருகின்றன. இவற்றோடு கூட , மாநிலங்கள் பல திட்டங்களை செயல்படுத்திவருகின்றன. கேரளாவிலும், தமிழகத்திலும் உள்ள தொழிலாளர் நல வாரியங்கள் ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர் ஆகிய எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடியவர்களுக்கு மதிய உணவுத்திட்டம், ஓய்வூதியத்திட்டங்களை செயல்படுத்துகின்றன. மேற்கு வங்காளத்தில் பிருந்தாஸ்ரீ, சஞ்பதி திட்டங்கள், ஒடிசாவின் மதுபாபு ஓய்வூதியத்திட்டம், ஸ்வரன்பால் ஓய்வூதியத்திட்டம், மஹாராஷ்டிராவின் சஞ்சய் காந்தி கைவிடப்பட்டப் பெண்கள் ஓய்வூதியத்திட்டம், பஞ்சாபில் அட்டாதல் திட்டம் போன்றவை இவை. மாநில ஓய்வூதியத்திட்டங்களில் பல இந்திராகாந்தி ஓய்வூதியத்திட்டங்களுடன் இணைக்கப்பட்டுவிட்டன.

**(i) இந்திராகாந்தி தேசிய ஓய்வூதியத்திட்டம் (IGNOAPS):**

மத்திய அரசால் 1995ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் ஆதரவற்ற விதவைகளுக்கு உதவுவதை இலக்காகக் கொண்டது. ஏப்ரல் 2011இல், ஓய்வூதியத்தொகை 60 - 79 வயதுடைய முதியோருக்கு மாதம் ரூ.200 ஆகவும், 80 வயதுக்கும் மேலுள்ளவர்களுக்கு ரூ.500ஆகவும் உயர்த்தப் பட்டுள்ளது. இதற்கான ஒட்டுமொத்த நிதி உதவியும் மாநிலங்களுக்கு மத்திய அரசினால் வழங்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வசிக்கும் 65 வயதிற்கும் மேற்பட்டவர்களில் (இப்போது 60) பாதி பேருக்கு மட்டுமே இது பயனளித்துவருகிறது. பயனாளிகள் தேர்வு கிராமப்பஞ்சாயத்துக்கள் மூலம் செய்யப்பட்டு மாநில அரசுகளின் மூலம் மத்திய அரசுக்கு தெரிவிக்கப்படுகிறது. அதிகபட்சப் பயனாளிகளின் எண்ணிக்கையும் மாநிலங்கள் நிதி உரிமை பெறும் அளவும் பின்வரும் முறையில் நிர்ணயிக்கப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள 65 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் பாதியை அந்த மாநிலத்தின் வறுமை விகிதத்தால் பெருக்கி பயனாளிகள் எண்ணிக்கை முடிவு செய்யப்படுகிறது. 6.5 மில்லியன் முதியோர் இந்தத்திட்டத்தால் பயன் பெற்றுள்ளனர். 2011 புதிய பென்சன் கொள்கையின் கீழ் மூத்த குடிமக்கள் பெறும் ஓய்வூதியம் மாதத்திற்கு ரூ.1000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**(ii). இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத்திட்டம் (IGNWPS):**

இந்தத்திட்டம் 2009இல் அறிமுகமானது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 40 முதல் 59 வயதுடைய விதவையர் ஒவ்வொருவருக்கும் மாத ஓய்வூதியமாக ரூ.200 வழங்கப்படுகிறது. அவர்கள் 60 வயதை எட்டியதும் இந்திராகாந்தி தேசிய ஓய்வூதியத்திட்டம் மூலம் ஓய்வூதியம் பெறும் தகுதியைப்பெறுகின்றனர்.

**V. இந்தத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வும் பயன்பெறுவோரும்:**

உதவி தேவைப்படும் முதியோரை, இலக்காகக் கொள்ளப்படுபவர்களை இது சென்று சேர்கிறதா என்பது ஒரு சிக்கலான கேள்வி. BKPAI ஆய்வு இவ்விரு ஓய்வூதியத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு 72 முதல் 79% வரை இருப்பதாகவும், அதிகபட்சமாக 13% முதியோரும் 20% விதவையரும் மட்டுமே இதன் பயனைப்பெறுகின்றனர் என்றும் தெரிவிகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழிருக்கும் ஏழை விதவையர்களிடம் இது பற்றிய விழிப்புணர்வு ஆடவரில் 81% பெண்களில் 71%. அதிகபட்சமாக 22% பேர் மட்டுமே இதன் பயனைப்பெறுகின்றனர். பெண்களில் இது 15% விதவையர் ஓய்வூதியத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் இருக்கும் 70% முதியோர் இது பற்றி அறிந்துவைத்துள்ளனர். 20% பேர் பயன் பெற்று வருகின்றனர். மாநிலங்களில் இந்த எண்ணிக்கை வேறுபடுகிறது. இந்திராகாந்தி தேசிய ஓய்வூதியத்திட்டம் மூலம் பஞ்சாப், ஒடிசா, ஹிமாசலபிரதேசம் ஆகிய மாநிலங்கள் பயன்

பெறுகின்றன. இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத்திட்டம் மூலம் ஒடிசா, கேரளா, மேற்குவங்கம், ஹிமாசலபிரதேசம் ஆகிய மாநிலங்கள் சிறப்பான பயன் பெற்று வருகின்றன.

### VI. குறைந்த எண்ணிக்கையினரே பயன் பெற்று வருவதற்கு BKPAI ஆய்வும், மற்ற சில ஆய்வுகளும் தெரிவிக்கும் காரணங்கள்:

படிப்பறிவற்ற ஏழை முதியோரால் அவருக்கான அடையாளம், வயது, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நிலை, பஞ்சாயத்து உறுப்பினர் பரிந்துரை போன்ற ஆவணங்களை தருவதற்குமுடிவதில்லை. இதன் காரணமாக இடைத்தரகர்கள், இலஞ்சம், சாதிப்பாகுபாடு போன்றவை வளர்கின்றன.

BPL பட்டியலின் நம்பகத்தன்மையில் உள்ள பிரச்னைகள் பொய், ஏமாற்று ஆகியவற்றிற்கு இட்டுச் செல்கின்றன. ஓய்வூதியம் பெறுவதற்கு காத்திருக்க வேண்டிய கால நீட்சி, பற்றாக்குறை ஓய்வூதியத்தொகை, பொருத்தமான பயனாளிகளை அடையாளம் காணத்தவறுதல் ஆகியவற்றால் இதற்கென ஒதுக்கப்படும் நிதியை மாநிலங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் போகிறது.

இவைபோன்ற சங்கடங்களுக்கு இடையிலும் சில ஆய்வாளர்கள் நம்பிக்கையை விதைக்கின்றனர். ஒடிசா, தமிழகம் போன்ற மாநிலங்களில் இந்த ஓய்வூதியத்திட்டங்கள் பொருத்தமான பயனாளிகளைக் கண்டறிவதில் புதுமையான அணுகுமுறைகளையும், சிறப்பான மேற்பார்வையையும் கொண்டுள்ளன.

தற்போதைய மதிப்பீட்டின்படி இந்தியாவில் 6 மில்லியன் முதியோர் ஓய்வூதியம் பெறுகின்றனர். 3 மில்லியன் பேர் விதவை ஓய்வூதியம் பெறுகின்றனர். தேசிய அளவில், சராசரியாக 7% பேர் பயன் பெற்றுவருகின்றனர்.

### VII. அனைவருக்கும் ஓய்வூதியத்திட்டம் அதற்கான தேவை:

பணம் ஏதும் செலுத்தாத, அனைவருக்குமான ஓய்வூதியத்திட்டம் தேவை என்று ஓய்வூதிய பரிஷத் கோரிக்கை வைத்துள்ளது. 55 வயதுக்கு மேற்பட்ட



பெண்டிர், வருமான வரி செலுத்தும் அளவுக்கு வருமானம் உடைய முதியோர், பிறவகை ஓய்வூதியங்களைப் பெறுவோர் இந்த திட்டத்திலிருந்து விலக்கப்படுவர்.

60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து முதியோருக்கும் மாதம் ரூ.2000 ஓய்வூதியம் கொடுத்தால் அதற்கு ரூ.24,9238 கோடி தேவைப்படும் என்று சாதரண கணக்கீடு தெரிவிக்கிறது. அதிகம் பேரை சேர்ப்பதும், அதிக ஓய்வூதியத்தை அறிவிப்பதும் அரசுகளின் மீது சுமையைக்கூட்டும். இதனால் வரிவிதிப்பு அதிகரித்து பணவீக்கம் கூடி முதியோரையும் அது பாதிக்கும். பொருத்தமான நீக்கல்/ விலக்கல் அடிப்படைகள் தேவை. தற்போது முன்மொழியப்படும் அனைவருக்குமான ஓய்வூதியத்திட்டமும் கூட வருமான வரி செலுத்துவோர் போன்ற சிலரை நீக்கி வைத்துள்ளது. ஆனால், ஊரகப்பகுதிகளிலும், விவசாயிகள் மத்தியிலும் நீக்கல் என்பது கடினமான செயலாக இருக்கும். முதியோருக்கு வருமானம் கிடைக்கவேண்டியது அவசியமே என்றாலும் உணவு, உடல் நலப்பாதுகாப்பு கருதி ஏழைகளுக்கு வழங்கப்படும் நேரடி சலுகைகளுக்கு மாற்றாக ஓய்வூதியத்திட்டம் இருக்க முடியாது.

### VIII. தற்போதைய அரசாங்கத்தின் அண்மைக்கால முன் முயற்சிகள்:

தற்போதைய அரசு நடைமுறைப்படுத்தி உள்ள அடல் பென்சன் திட்டம் (APY), பிரதமமந்திரி ஜன்தன் திட்டம், ஜீவன் ஜோதித்திட்டம், பிரதமரின் ஜன் சுரக்ஷா பீம் யோஜ்னா திட்டம் ஆகியவை இதுவரை விவாதிக்கப்பட்ட ஓய்வூதியத்திட்டங்களோடு ஒப்பிட்டு நோக்கக் கூடியவை அல்ல. இவை பணம் செலுத்தி பயன் பெற வேண்டியவை. இவை முதியோருக்கு மட்டுமான திட்டங்கள் இல்லை. எனினும் இவை எதிர்கால முதியோருக்கு உதவக்கூடியவை.

முறைசாரப்பிரிவில் பணிபுரிவோருக்கு மாத ஓய்வூதியம் ரூ.1000 முதல் 5000 வரை கிடைப்பதற்கு APY திட்டம் வகை செய்கிறது. ஆனால் இதற்கு சந்தாப் பணம் செலுத்தவேண்டும். சந்தா கட்டுவோரின் தொகையில் பாதி அல்லது ஆண்டுக்கு ரூ.1000/- இவற்றில் எதுகுறைவோ அதனை அரசு தனது பங்களிப்பாகத்தரும். மற்ற பென்சன் திட்டங்களால் பயன் பெறாதவர்கள் மட்டுமே இதன் மூலம் பயன் பெற முடியும். ஜூன்1 முதல் டிசம்பர் 31, 2015 வரை இந்தத்திட்டதில் சேர்ந்தவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு அரசு தனது பங்களிப்பை நல்கும்.

ஜன்சுரஷா பீம் யோஜ்னா 2015இல் கொண்டுவரப்பட்டது. அரசு ஆதரவுடன் கூடியது இந்தத்திட்டம். இதில் விபத்துக்காப்பீடும் உள்ளது. 18 முதல் 70 வயது வரை உடைய வங்கிக்கணக்கு வைத்துள்ள எவரும் இதில் பயன் பெறலாம். ஆண்டு பிரிமியம் 12 ரூபாய். விபத்தினால் உயிர் இழப்போ, குறைபாடோ ஏற்பட்டால் இறப்புக்கு ரூ.2 இலட்சமும், உடல் ஊனத்திற்கு ரூ.1 இலட்சமும் வழங்கப்படும். இந்தத்திட்டம் 2014இல் கொண்டுவரப்பட்ட பிரதம மந்திரி ஜன்தன் யோஜ்னா உடன் இணைக்கப்பட்டுள்ளது. ஜன்தன் யோஜ்னா திட்டத்தின் கீழ் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு பல்வேறு நிதி சேவைகளை அணுகக்கூடிய வாய்ப்பை அளிக்கிறது. தேவையின் அடிப்படையிலான கடன், காப்பீடு, பணம் அனுப்புதல், மிகைப்பற்று வசதிகளை இது அளிக்கிறது. இந்தத்திட்டத்தின் கீழ் உள்ள கணக்குகள் பணம் ஏதும் இன்றியும் ஆரம்பிக்கப்படலாம். கணக்கு தொடங்கும் நடைமுறைகள் மிக எளிமையானவை. ரூ.1 இலட்சம் விபத்துக்காப்பீட்டையும், 30 ஆயிரம் இறப்புக்காப்பீட்டையும் இந்தத்திட்டம் தருகிறது. பிப்ரவரி 2017 வாக்கில் 27 கோடி கணக்குகள் தொடங்கப்பட்டிருந்தன. இந்த கணக்குகளில் ரூ.665 பில்லியன் பணம் போடப்பட்டிருந்தது. மிகைப்பற்று போன்ற சில வசதிகளைப்பெறுவதற்காக பொய்யான கணக்குகள் பல ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பொதுத்துறை வங்கிகளின் மீது குற்றச்சாட்டு உள்ளது.

இந்தத் திட்டங்களின் செயல் திறனை அளவிடுவது மிக முந்தைய பழக்கம். இதன் மூலம் முதியோர் சிலரும் பயன்பெறக்கூடும். வருமானமே இல்லாத, பிறரை முழுமையாக சார்ந்திருக்கும், எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய ஏழைகளுக்குப் பாதுகாப்பு தருவது என்பதுதான் முக்கியமான பிரச்னை. பொருத்தமான நீக்கல் முறைகளைக் கையாள்வதன் மூலம் சரியான பயனாளிகளை அடையாளம் காண்பதும், விண்ணப்ப நடைமுறைகளை எளிதாக்குவதும், திறம்பட பட்டுவாடா செய்வதும் பெரிய சவால்களாகும். இறுதியாக, பணம் சம்பந்தப்பட்ட எந்தத் திட்டமும் எவ்வளவு சிறப்பாக சிந்தித்து வடிவமைக்கப் பட்டிருந்தாலும் கூட சிறப்பான கண்காணிப்பு இல்லாத பட்சத்தில், அரிய வளங்களை வீணாக்குதல் போன்றவற்றிற்கு இட்டுசெல்லும் வாய்ப்பு உள்ளது.

●

# அனைவருக்கும் சுகாதாரம் கிடைக்கச் செய்தல்: இந்தியாவின் தடைபடும் பயணம்

- பேராசிரியர் கே.சீதா பிரபு
மும்பையில் உள்ள சமூக அறிவியலுக்கான டாட்டா கல்வி நிறுவனத்தின் பேராசிரியர்

## சமூகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு

பொருளாதார நிலைத்தன்மை இல்லாத சமயங்களிலும் நெருக்கடி காலகட்டங்களிலும் சமூகப் பாதுகாப்பு என்ற மையக்கருத்தாக்கம் எப்போதும் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க பெவெரிட்ஜ் கமிட்டி அறிக்கை(1942)யானது பரந்துபட்ட கருத்தாக்கத்தில் சமூகப் பாதுகாப்பு என்பதை ''தேவைவிலிருந்து இருந்து விடுதலை'' என வரையறுத்துள்ளது. ஆனால் இந்த வரையறை தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படவில்லை. அதற்குப் பதிலாக சமூகப் பாதுகாப்பு என்பதற்கு 1950களில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் கழகத்தின் மாநாடுகளில் நடைமுறைக்கு ஏற்ற மற்றும் குறிப்பிட்ட வரையறை உருவாக்கப்பட்டது. வளரும் நாடுகளின் சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதன் பின்னணியில் 1989இல் ட்ரெஜ் மற்றும் சென் ஆகியோர் சமூகப் பாதுகாப்பை மறுவரையறை செய்தனர். இதனைத் தொடர்ந்து பிரபு என்பார் சமூகப் பொருளாதார பாதுகாப்பு என்ற கருத்தாக்கம்தான் இந்தியாவுக்கு பொருத்தமானது எனத் தெரிவித்தார். இதுதான் சமூகத் திறன்களையும் பொருளாதாரப் பாதுகாப்பையும் மேம்படுத்தும் என அவர் கூறுகிறார் ''மறைமுகமான வறுமை நிலவும் சூழலில் சமூகப்பொருளாதாரப் பாதுகாப்பு: இந்தியாவை முன்வைத்து மேற்கொண்ட ஆய்வு'' என்ற நூலைப் பார்க்கவும். இதை ஜெனிவாவில் உள்ள சர்வதேசத் தொழிலாளர் கழகம் வெளியிட்டுள்ளது). சமூகப் பாதுகாப்பு குறித்த இந்தப் பரந்துபட்ட கருத்தாக்கத்தின் ஒருங்கிணைந்த அங்கமாக சுகாதாரப் பாதுகாப்பு என்பதும் உள்ளது.



## அனைவருக்கும் சுகாதாரம்

சுகாதாரப் பாதுகாப்பு என்பது அனைவருக்கும் சுகாதாரப் பராமரிப்பு என்ற கருத்தாக்கத்துடன் நீக்கமற இணைந்துள்ளது. 2000ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதாரம் என்ற இலக்கை அடைய வேண்டும் என்பதற்கான 1979ஆம் ஆண்டின் அல்மா ஆட்டா பிரகடனத்தைத் தொடர்ந்து சுகாதாரப் பாதுகாப்பு முதன்மை இடத்தையும் முக்கியத்துவத்தையும் பெற்றது. இந்த இலக்கால் இந்தியா உந்துதல் பெற்றது. மேலும் 1981ஆம் ஆண்டின் ஐசிஎஸ்எஸ்ஆர் - ஐசிஎம்ஆர் அறிக்கையின் பல விவரங்கள் இந்திய அரசுக்கு உந்து சக்தியாக இருந்தன. இவற்றின் பலனாக இந்திய அரசு 1983இல் தேசிய சுகாதாரக் கொள்கையை அறிவித்தது. பிறகு இதற்குப் பதிலாக 2002இல் தேசிய சுகாதாரக் கொள்கை அறிவிக்கப்பட்டது. நம் நாட்டில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பை ஊக்குவிப்பதற்காக 2005இல் தேசிய ஊரக சுகாதார இயக்கம் (என்.ஆர்.எச்.எம்) தொடங்கப்பட்டது. இத்தகைய கொள்கை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் கூட, அனைவருக்கும் சுகாதாரப் பராமரிப்பு கிடைத்தல் என்பது நிறைவேறாத செயல்திட்டமாகவே இருக்கின்றது. குறைந்த வருவாய் உள்ள வங்கதேசம் போன்ற நாடுகளைவிட இந்தியா சுகாதாரத்துக்கான அடிப்படை குறிகாட்டிகளில் பின்னடைந்தே உள்ளது. (இந்தியா நடுத்தர வருவாய் நாடு என்ற நிலையை அடைந்துள்ளது. ஆனால் வறுமை மற்றும் நோயின் சுமை தாளமுடியாத அளவில் உள்ளது. பொருளாதாரச் செயல்திறனுக்கும் சமூக வளர்ச்சிக்கான குறிகாட்டிகளில் மேம்பாட்டு

நிலைக்கும் தொடர்பில்லை என்பது வெளிப்பட்டுள்ளது). உலக சுகாதாரம் தொடர்பான மில்லினியம் வளர்ச்சி இலக்குகள் எட்டப்படவில்லை. வங்கியின் எம்.டி.ஜி. அறிக்கை இலக்குகளை நிர்ணயித்தது. 1992-93 காலகட்டத்துக்கும் 2014-15 காலகட்டத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது என தேசிய குடும்பநல அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இந்த விகிதம் உயிருடன் பிறக்கும் 1000 குழந்தைகளுக்கு இறப்பு விகிதமானது 109 என்பதில் இருந்து 50 ஆகக் குறைந்துள்ளது. எனினும் எம்.டி.ஜி இலக்கான 27 என்பதை அடைய இந்த வேகம் போதாது.

உலக சுகாதார நிறுவனம் 2008ஆம் ஆண்டில் 5.2 மில்லியன் இந்தியர்கள் தொற்றாத நோய்களால் இறந்துள்ளனர் என மதிப்பிட்டுள்ளது. நாட்டில் நிகழ்ந்த மரணங்களில் இது 53 சதவிகிதமாக இருக்கிறது (உலக சுகாதார நிறுவனத்தின் "தொற்றாத நோய்கள்: நாடுகளின் விவரங்கள் 2014" என்ற அறிக்கையை http://www.who.int/nmh/countries/ind_en.pdf என்ற வலைத்தளத்தில் பார்க்கவும்). வருமானம், செல்வவளம் இரண்டிலும் நிலவும் பாகுபாடுகள் சுகாதார சேவைகளில் உள்ள வித்தியாசங்களிலும் வெளிப்படுகின்றன. ஊரகம் மற்றும் நகரப் பகுதிகள், மாநிலங்கள் மற்றும் சமூகக் குழுக்கள் என அனைத்திலும் வித்தியாசம் உள்ளது



இந்தியாவின் சுகாதார அமைப்பானது நாட்டில் ஏற்பட்டு வரும் அபிவிருத்தியின் அநீதியான போக்கைப் பிரதிபலிக்கிறது. அதிக வருமானம் மற்றும் செல்வவளத்தில் உள்ள சமச்சீரின்மை ஆகியன சுகாதார பராமரிப்பின் அமைப்பு முறையில் வேறுபாட்டை ஏற்படுத்தி உள்ளன. இவை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சிகிச்சை சேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. ஏழைகளின் வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படையான முன்தடுப்பு மற்றும் ஆரம்ப சுகாதாரச் சேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

(அதிக வருவாய்ப் பிரிவினரோடு ஒப்பிட குழந்தை இறப்பு விகிதமானது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினரிடம் முறையே 14 மற்றும் 8 சதவிகிதம் அதிகமாக உள்ளது. கேரளாவில் பிறக்கும் ஒரு குழந்தை 74.9 வயது வரை உயிர் வாழக்கூடும் என எதிர்பார்க்கலாம். அதே சமயம் பீகாரின் ஊரகப் பகுதியில் பிறக்கும் குழந்தையின் எதிர்பார்க்கப்படும் ஆயுள்காலம் 67.8 ஆண்டுகள் மட்டுமே ஆகும். இந்த உண்மை 2010-14ஆம் ஆண்டுக்கான எஸ்.ஆர்.எஸ்சின் சுருக்கமான வாழ்நாள் அட்டவணைகளில் இருந்து தெரிய

வருகிறது. இதில் பாலினப் பாகுபாடும் உள்ளடங்கி உள்ளது. செல்வச் செழிப்புடன் இருப்பவர்களிடமும் பாலினப் பாகுபாடு உள்ளது. 2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பெண் குழந்தைகளின் எண்ணிக்கை அதிக அளவில் குறைந்துள்ள மாநிலங்களாக பணக்கார மாநிலங்கள் எனக் கருதப்படும் அரியானா மற்றும் பஞ்சாப் ஆகியவையே உள்ளன. அரியானாவில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 1000 ஆண் குழந்தைகளுக்கு 800 பெண் குழந்தைகளே உள்ளனர். அதே போன்று பஞ்சாப்பில் 906 பெண் குழந்தைகளே உள்ளனர். 2015ஆம் ஆண்டில் சுகாதாரச் சேவையில் உள்ள சமச்சீரின்மையானது இந்தியாவின் சுகாதாரக் குறியீட்டு மதிப்பில் 24 சதவிகித இழப்புக்குக் காரணமாகிவிட்டது. யு.என்.டி.பி. தொகுத்த, சமச்சீரின்மைக்கு ஏற்ப நேர்செய்யப்பட்ட மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு அட்டவணை மூலம் இது தெரிய வந்துள்ளது.

அடிப்படையான ஆரம்ப மற்றும் முன்தடுப்பு சுகாதாரச் சேவைகள் கிடைப்பதை உறுதிப்படுத்தக் கூடிய அரசியல் அர்ப்பணிப்பு குறைவாக இருக்கும் சூழலில் கல்விக்குத் தருவது போன்ற முக்கியத்துவம், அனைவருக்கும் சுகாதாரம் என்பதற்கான முக்கியத்துவம் தேர்தலில்கூட தரப்படுவதில்லை. அப்படி முக்கியத்துவம் தரப்பட்டால் தேர்தலில் பயன் கிடைக்கும் வாய்ப்பு அதிகம் என்பது ஆந்திரப்பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தலில் ஆரோக்கிய ஸ்ரீ திட்டமானது ஆளும் கட்சிக்கு 5% வாக்குகள் கிடைக்க காரணமாக இருந்தன என்று ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டுவதை உதாரணமாகக் கூறலாம். மேலும் தகவலுக்கு புதுதில்லி ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் எஸ்.ராவ் எழுதி 2017இல் வெளியிட்டுள்ள “நாம் பொருட்படுத்துகிறோமா: இந்தியாவின் சுகாதார அமைப்பு” என்ற நூலைப் பார்க்கவும்). சுகாதாரத்துறை மீது நாம் காட்டும் பொதுவான அக்கறையின்மை என்பது அத்துறைக்கு ஒதுக்கப்படும் குறைந்த பட்ஜெட் தொகையே எடுத்துக்காட்டுகிறது. குறிப்பிடத்தக்க அளவு பொருளாதார வளர்ச்சி இருந்தபோதிலும் கூட கடந்த பத்தாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி) 1.5 சதவிகிதத்துக்கு மேல் அரசுப்பணம் சுகாதாரத் துறைக்குச் செலவிடப்படவில்லை. அதாவது இது எதை உணர்த்துகிறது என்றால் மக்கள் சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளுக்காகத் தங்கள் பணத்தில் இருந்து 75% செலவிடுகின்றனர் என்பதையே ஆகும். இதனால் ஏற்படும் அபரிதமான மருத்துச் செலவுகள் பலரை வறுமைக்கோட்டுக்குக் கீழே தள்ளிவிடுகின்றன.

## இந்தியாவில் சுகாதாரக் காப்பீடு

பிரேசில், பொலிவியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளில் சுகாதாரச் சேவைகளை அணுகுவதிலும் பெறுவதிலும் சமச்சீரின்மையும் ஏற்றத்தாழ்வுகளும் முன்பு நிலவின. இந்த நாடுகளில் 1980களில் இருந்து அனைவருக்குமான சுகாதாரச் சேவை என்ற குறிக்கோளை நோக்கி கொள்கைகள் வகுக்கப்பட்டன. தாய்லாந்தில் 30 பாட் திட்டம்; இந்தோனேசியாவில் அதிகாரப் பரவல் சீர்திருத்தங்கள் மற்றும் சமூக சுகாதாரக் காப்புறுதி; பிரேசிலில் ஒருங்கிணைந்த சுகாதார அமைப்பு போன்றவை நாட்டின் ஒட்டுமொத்த மக்கள் தொகைக்கும் அடிப்படையான சுகாதாரத் தேவைகளை அளிப்பதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதாரணங்கள் ஆகும். இத்தகைய நாடுகளின் உதாரணங்கள் அனைவருக்கும் சுகாதாரச் சேவைகள் கிடைக்கச் செய்வதற்கு முன்னோடியாக ஆரம்ப சுகாதாரச் சேவையை வலுப்படுத்தியாக வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. (புதுதில்லியில் உள்ள உலக சுகாதார நிறுவனம் 2003இல் வெளியிட்டுள்ள பிராந்திய நிபுணர் குழுக் கூட்டத்தின் அறிக்கையான “சமூக சுகாதாரக் காப்பீடு” என்பதைப் பார்க்கவும். மேலும் இந்தியத் திட்டக்குழு 2011ஆம் ஆண்டில் புதுதில்லியில் வெளியிட்ட “இந்தியாவில் அனைவருக்கும் சுகாதாரச் சேவை கிடைக்கச் செய்தல் என்பது குறித்த உயர்மட்ட நிபுணர் குழு அறிக்கை” என்பதையும் பார்க்கவும்).

இந்தியாவில் சுகாதாரக் காப்பீடு வரலாறானது தொழிலாளர் அரசு காப்புறுதித் திட்டம் (ஈ.எஸ்.ஐ.எஸ்) மற்றும் மத்திய அரசு ஊழியர்களுக்கும் அவரைச் சார்ந்திருப்போருக்கும் சேவை அளிக்கும் மத்திய அரசு சுகாதாரத் திட்டம் (சி.ஜி.ஹெச்.எஸ்) ஆகியவற்றோடு தொடங்குகிறது. இந்தத் திட்டங்கள் மேல்நிலையான இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பையும் சிகிச்சையையும் கவனத்தில் கொள்கின்றன. இவை இரண்டும் சேர்ந்து

பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் இந்திய மக்கள் தொகையில் 10 சதகவிகிதத்துக்கும் குறைவான நபர்களுக்கே சேவை அளிக்கின்றன. (2011ல் த லான்செட் இதழில் குமார் மற்றும் பலர் சேர்ந்து எழுதிய "அனைவருக்குமான சுகாதாரச் சேவைக்கு நிதியளித்தல்: சவால்களும் வாய்ப்புகளும்" என்ற கட்டுரையைப் பார்க்கவும். மேலும், 2012இல் எக்கனாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி இதழில் எஸ்.செல்வராஜ் மற்றும் ஏ.கே.கரண் இணைந்து எழுதி உள்ள "நிதி நெருக்கடியில் பாதுகாப்பு அளிப்பதில் பொது நிதி சார்ந்த சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள் ஏன் பலன் அளிப்பதில்லை" என்ற கட்டுரையையும் பார்க்கவும்).

எல்.டான்டோனா, ஜே.ஏ.ஹோசிங்க்டன், எஸ். எல்.ஜேம்ஸ், எம்.சி.ஹோகன் ஆகியோர் சேர்ந்து எழுதியுள்ள ''இந்தியாவின் ஜனனி சுரக்ஷா யோஜனா: மருத்துவமனைகளில் பிரசவம் செய்து கொள்வதை அதிகரிப்பதற்கான நிபந்தனைகளுடன் கூடிய மானிய நிதி பரிமாற்றத் திட்டம்'' என்ற கட்டுரையைப் பார்க்கவும். மேலும் பிளோஸ் ஒன் 2013இல் பி.ரன்திவே, வி.திவான் மற்றும் ஏ.தெ.கோஸ்ட்டா ஆகியோர் இணைந்து எழுதிய ''மருத்துவமனைகளில் பிரசவத்தை அதிகரிப்பதற்காக இந்தியாவின் நிபந்தனையுடன் கூடிய மானிய நிதி பரிமாற்றத் திட்டம் (ஜே.எஸ்.ஒய்): மருத்துவமனைகளில் பிரசவம் நடப்பதற்கும் பேறுகால தாய் இறப்பு விகிதத்துக்கும் விகிதாச்சார அளவில் ஏதும் தொடர்பு இருக்கின்றதா?'' என்ற கட்டுரையையும் பார்க்கவும்).



ஊரகப் பகுதிகளில் உள்ள ஏழைப் பெண்கள் பிரசவத்தை மருத்துவமனைகளில் பார்த்துக் கொள்வதை ஊக்கப்படுத்தும் வகையில் 2005ஆம் ஆண்டில் நிபந்தனையுடன் கூடிய மானிய நிதிப் பரிமாற்றத் திட்டமான ஜனனி சுரக்ஷா யோஜனா அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் பேறுகால தாய் இறப்பு விகிதத்தைக் குறைப்பதில் பெரும்பங்களிப்பை செய்துவிடவில்லை என்றாலும் ஏழ்மை நிலையிலான மாநிலங்களில் இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தி உள்ளது (2010ஆம் ஆண்டில் த லேன்செட் இதழில் எஸ்.எஸ்.லிம்,

2008ஆம் ஆண்டில் ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா தொடங்கப்பட்டது. அதிக அளவில் மருத்துவச் செலவு செய்ய வேண்டிய நிலைமையில் இருந்து நலிவடைந்த பிரிவினரைப் பாதுகாப்பதற்காக அவர்களுக்கு நிதி உதவி செய்யும் வகையில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. மேலும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்குத் தரமான ஆரோக்கிய பராமரிப்பு கிடைப்பதை உறுதிப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தொடங்கும் போது இத்திட்டமானது வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு மட்டுமே என்று இருந்தது. பிறகு இது ரிக்ஷா, ஓட்டுநர்கள், குப்பை பொறுக்குபவர்கள் என முறைசாரா பிரிவில் உள்ள நலிவடைந்த பிரிவினர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தில் சேருபவர் தமது குடும்பத்துக்காக ஒரு ஆண்டுக்கு பதிவுக்கட்டணமாக ரூ.30 செலுத்த வேண்டும். அப்படி செலுத்தி இருந்து மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சேர்ந்து சிகிச்சைப் பெற்றால் ரூ.30,000 வரை கிடைக்கும். இந்த நிதி வரம்பு அண்மையில் ரூ.30 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆர்.எஸ்.பி.ஒய் திட்டத்தின் கீழ் மார்ச் 2016வரை தகுதி பெற்ற 72.8 மில்லியன் குடும்பங்களில் 41.3 மில்லியன் குடும்பங்களே இணைந்துள்ளன. (கூடுதல் தகவலுக்கு http://www.rsby.gov.in/Overview.aspx என்ற வலைத்தளத்தைப் பார்க்கவும்). இத்திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் உள் நோயாளியாகச் சேர்ந்தவர்கள் 11.8 மில்லியன் நபர்களாவர். இத்திட்டத்தை குறைந்த அளவில்தான் மக்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

ஆர்.எஸ்.பி.ஒய் திட்டத்தின் மூலம் ஏழைகளுக்கான மருத்துவ சிகிச்சை செலவுச் சுமையைக் குறைக்க வேண்டும் என்ற முழுமையான நோக்கம் எட்டப்படவில்லை. ஓ.ஓ.பி எனப்படும் சொந்தச் செலவுகள் குறையவே இல்லை. மருந்துகள், நோய் கண்டறிவதற்கான பரிசோதனைகள், ஆர்.எஸ்.பி.ஒய் திட்டத்தின் கீழ் வராத உள்நோயாளி சேவைக் கட்டணங்கள், போக்குவரத்து செலவுகள் மற்றும் இதர செலவினங்களுக்கு ஏழைகள் பணம் செலுத்த வேண்டிய தேவையானது இருந்து கொண்டுதான் இருக்கிறது. (சோஷயல் சயின்ஸ் அண்ட் மெடிசன் என்ற இதழில் ஏ.கரன், டபிள்யூ. யிப் மற்றும் ஏ.மகால் ஆகியோர் இணைந்து எழுதி உள்ள ''இந்தியாவின் ஏழை மக்களுக்கு சுகாதாரக் காப்பீட்டை விரிவுபடுத்துதல்: சுகாதாரப் பராமரிப்புக்கு சொந்தப் பணத்தைச் செலவு செய்தல் மீது ராஷ்ட்ரிய ஸ்வஸ்திய பீமா யோஜனாவின் தாக்கம் குறித்த மதிப்பீட்டு ஆய்வு'' என்ற கட்டுரையைப் பார்க்கவும்). கேரளா போன்ற மாநிலங்களில் ஆர்.எஸ்.பி.ஒய் திட்டத்தின் செயல்பாடு சிறப்பாக உள்ளது. இங்கெல்லாம் சிறப்பான சுகாதாரச் சேவை கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்களை குறைந்தபட்சம் எட்டு மாநில அரசுகளாவது செயல்படுத்தி வருகின்றன. அவற்றில் குறிப்பிடத்தகுந்த திட்டங்கள் எவை எனில்:

1. கர்நாடகாவில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கான வாஜ்பாய் ஆரோக்கிய ஸ்ரீ திட்டம் (வி.ஏ.எஸ்) மற்றும் யெஷ்ஷாஸ்வினி கூட்டுறவு விவசாயிகளுக்கான சுகாதாரச் சேவைத் திட்டம்.
2. ஆந்திரப்பிரதேசத்தில் (தெலுங்கானாவிலும் கூட) ராஜீவ்காந்தி ஆரோக்கியத் திட்டம்
3. தமிழ்நாட்டில் முதலமைச்சரின் ஆரோக்கியக் காப்பீட்டுத் திட்டம்
4. மகாராஷ்டிராவில் ராஜீவ்காந்தி ஜீவன்தயி ஆரோக்கிய திட்டம்
5. குஜராத்திய முக்கிய மந்திரி அம்ருதம் திட்டம்
6. சட்டீஸ்கரில் சஞ்சீவினி கோஷ்

இவற்றில் ஆந்திராவில் செயல்படுத்தப்பட்டு வரும் ராஜீவ்காந்தி ஆரோக்கியஸ்ரீ திட்டத்தில் 85 சதவிகித பயனாளிகள் உள்ளடக்கப்பட்டு உள்ளனர். இதுதான் அனைவருக்கும் சுகாதாரச் சேவை என்ற இலக்கை நெருங்கி வந்துள்ள திட்டமாக உள்ளது. எனினும் இதன் கவனம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சிகிச்சை என்ற அளவிலேயே உள்ளது. அதனால் இத் திட்டத்திற்காகத் தரப்படும் பணப்பட்டுவாடாவில் பாதிக்கும் மேல் இருதயநோய், புற்றுநோய், சிறுநீரகச் செயலிழப்பு போன்றவற்றுக்கே செலவாகி விடுகிறது. மக்கள் தொகையில் 40 சதவிகிதம் உள்ள ஏழைகளுக்கு பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. கீழ்ப்பகுதி சுவாச மண்டல நோய்த் தொற்றுகள், வயிற்றுப்போக்கு நோய்கள், காசநோய், இருதயரத்த நாள அடைப்பு நோய்கள் போன்றவற்றால் ஏற்படும் மரணம் மற்றும் ஊனங்கள் இப்பொழுதும் தொடர்கின்றன. இவை எல்லாம் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியவை ஆகும். ஆரம்ப சுகாதார நிலையிலேயே இவற்றுக்குச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். (முன்னர் சுட்டிக்காட்டிய எஸ்.ராவின் 2017ஆம் ஆண்டு நூலைப் பார்க்கவும்). ஒட்டுமொத்தமாகப் பார்த்தால்,

2015ஆம் ஆண்டின் நிலவரப்படி 280 மில்லியன் நபர்களுக்கு ஏதோ ஒரு வகையில் சுகாதாரப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அதாவது மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் சுகாதாரப் பாதுகாப்பைப் பெற்றுள்ளனர். சி.ஜி.ஹெச்.எஸ், ஈ.எஸ்.ஐ.எஸ். போன்ற மத்திய அரசின் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள், மாநில அரசுகளின் குறிப்பிட்ட சுகாதாரக் காப்பீட்டுத் திட்டங்கள் மற்றும் ஆர்.எஸ்.பி.ஒய் போன்றவற்றின் மூலம் இது சாத்தியமாகி உள்ளது. என்றாலும் மத்திய அரசின் எந்தவொரு திட்டமாக இருந்தாலும் அல்லது மாநில அரசின் காப்புறுதித் திட்டமாக இருந்தாலும் அவை தனது திட்டத்தில் ஆரம்பசுகாதாரச் சேவைகளை உள்ளடக்கியதாக இல்லை. விதிவிலக்காக மேகாலயா மாநிலத்தில் மட்டும் ஓரளவிற்கு ஆரம்ப சுகாதார சிகிச்சை உள்ளடக்கப்பட்டு உள்ளது.

**செல்ல வேண்டிய பாதை**

இந்தியாவின் புதிய தேசிய சுகாதாரக் கொள்கை 2017 குறிப்பிடத்தக்க மடைமாற்றங்களைக் கொண்டுள்ளது. விரிவான ஆரம்ப சுகாதார பராமரிப்பு தொடர்பான அரசு கொள்கையில் மாற்றம் இருக்கின்றது. இந்தக் கொள்கை இரண்டு காரணங்களால் முக்கியமானதாகின்றது. முதலாவது இக்கொள்கையானது ஆரோக்கியம் என்பதை நோய் இல்லாத நிலை என வரையறுப்பதற்குப் பதில் நல்வாழ்வுநிலை என வரையறுக்கின்றது. இரண்டாவது ஆரம்ப சுகாதாரப் பராமரிப்புக்கு மீண்டும் கவனம் செலுத்துவதோடு பொதுத்துறைக்கும் முக்கிய பங்கை அளிக்கிறது. இக்கொள்கையானது 2025ஆம் ஆண்டில் சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீடு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் (ஜிடிபி) 2.5% இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. எனினும் சுகாதாரத்துறையின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. நிதிப் பற்றாக்குறை மற்றும் நிதி நெருக்கடியில் இருந்து விடுபட பொதுத்துறைதனியார் இரண்டும் இணைந்து பங்கேற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் இது தொடர்பான ஆதாரங்கள் ஊக்கம் அளிப்பவையாக இல்லை. மிகக் கவனமாக இந்தத் தனியார் பங்கேற்புத் திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். இல்லை என்றால் அரசின் மானியங்களைச் செலவழித்து தனியார் துறை வளம்பெற்று விடும் அபாயம் உள்ளது. அடிப்படை சுகாதாரக் கட்டமைப்பு முழுமையாக இருந்தால்தான் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் செயல்பட முடியும் என்பதையே சர்வதேச அனுபவம் எடுத்துக்காட்டுகின்றது. இதனை அரசாங்கம் மட்டுமே நிறைவேற்ற முடியும். அனைவருக்கும் சுகாதாரம் என்பது நடைமுறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்றால் சுகாதாரத் துறைக்கான செலவினத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நிதி ஆதாரத்தை அரசு உருவாக்கியே தீர வேண்டும் என்ற உண்மையை மறைத்துவிட முடியாது. அதேசமயம் அதிக அளவு திறனுடன் செயல்படும் வகையில் சுகாதாரத் துறையை சீரமைக்கவும் வேண்டும்.

இந்த நோக்கத்துக்காகத் தேவைப்படும் நிதியை உருவாக்குவதற்கு ராவ் ஒரு யோசனையை முன்வைக்கிறார். அவரது மதிப்பீட்டின்படி, சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்துவதற்கு மூலதன முதலீடாக உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 1 முதல் 1.5 சதவிகிதம் வரை தேவைப்படும். இது போதுமான சுகாதார உள்கட்டமைப்பை உருவாக்கி உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நிதி ஆகும். அதேபோன்று விரிவான ஆரம்பநிலை, இரண்டாம் நிலை சிகிச்சை பராமரிப்பை வழங்குவதற்கு ஜி.டி.பியில் மேலும் 1 சதவிகிதம் நிதி தேவைப்படும். மக்கள் தொகையில் 60 சதவிகிதம் பேருக்கு சில குறிப்பிட்ட மூன்றாம்நிலை சிகிச்சை பராமரிப்பு வழங்குவதும் இதில் அடங்கும். பொது சுத்திகரிப்பு, கழிவு மேலாண்மை, ஊட்டச்சத்து மற்றும் வீட்டுவசதி போன்ற தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கத் துணை நிற்பதற்கு மூலதன முதலீடாக குறைந்தபட்சம் ஜி.டி.பியில் 2 சதவிகித நிதியாவது தேவைப்படும் (முன்னர் குறிப்பிட்டுள்ள எஸ்.ராவின் 2017ஆம் ஆண்டு வெளிவந்த நூலைப் பார்க்கவும்).

2030ஆம் ஆண்டில் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் என்பதில் அனைவருக்கும் சுகாதார வசதி கிடைக்கச் செய்தல் என்பது 38ஆவது இலக்காக உள்ளது. உலகளாவிய இந்த இலக்கை அடைவதில் இந்தியாவின் செயல்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. 2030ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் சுகாதாரப் பாதுகாப்பு என்ற நீண்டகாலமாக நிறைவேறாமல் இருக்கும் இலக்கை அடைய வேண்டுமானால் அது தேசிய சுகாதாரக் கொள்கை 2017ஐ இந்திய அரசு திறம்பட நடைமுறைப்படுத்துவதில்தான் உள்ளது. ●

# மாற்றுத் திறனாளிகளுக்கான சமூகப் பாதுகாப்பு

- சந்தியா லிமாயி

மும்பையில் உள்ள டாட்டா சமூக அறிவியல் கல்வி நிறுவன மாற்றுத்திறனாளி ஆய்வு மற்றும் செயல் மையத்தில் கூடுதல் பேராசிரியர்

இந்தியாவில் பாரம்பரியமாகவே குடும்பம் என்பது முறைசாரா சமூகப் பாதுகாப்பு அமைப்பாக இருந்து வந்துள்ளது. அனைவரும் ஒன்றாக வாழ்ந்து உதவிகள் தேவைப்படுவோருக்கு அவற்றை உறுப்பினர்களே அளிக்கும் கூட்டுக் குடும்ப அமைப்பு இருந்தது. தொழில் புரட்சி, நவீனமயமாக்கல் மற்றும் நகர்ப்புறமயமாதல், நகர்ப்புறங்களில் வேலை வாய்ப்புகள் ஆகியவை கூட்டுக் குடும்ப அமைப்பைச் சிதைத்து சமூகப் பாதுகாப்பை பெரிதும் பாதித்தன. எனவே குடிமக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசே மேற்கொள்ள வேண்டிய நிலை உருவானது.

சமூகப் பாதுகாப்பு என்பது மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக அரசு மேற்கொண்ட செயல்திட்டமாகும். அதன்படி சமூகப் பாதுகாப்பு என்பதன் நோக்கம் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு வகையான ஆதரவு மற்றும் ஆதாரங்களை அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும். இந்தியாவில் சமூகப் பாதுகாப்பு என்பது சமூகக் காப்பீடு, தேசிய சேம நல நிதி, சமூக உதவி, பணியமர்த்துவோர் கடன் திட்டம், உலகளாவிய சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

நாட்டு மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பதில் அரசின் பொறுப்பு குறித்து இந்திய அரசியல் சட்டப்பிரிவு 43இல் கூறப்பட்டுள்ளது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது எந்த நபருக்கும் மறுக்கப்படாது என அரசியல் சட்டம் 14 (ஏழாவது பட்டியல்) உத்தரவாதம் அளிக்கிறது. மாற்றுத் திறனாளிகள் மற்றும் வேலையற்றோருக்கு நிவாரணம் மற்றும் உதவிகளை அளிக்க அரசுகளுக்கு உததரவிடப்பட்டுள்ளது. மாநில அரசுகள் தங்களது பொருளாதாரத் திறன்கள் மற்றும் வளர்ச்சிக்கு உட்பட்டு வேலை செய்வதற்கான உரிமை, கல்விக்கான உரிமை மற்றும் பொது உதவிக்கான



உரிமை ஆகியவற்றை வேலையற்றோர், வயது முதிர்ந்தோர், நோய் பாதிப்பு மற்றும் இயலாமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உரிய திறன்மிக்க விதிமுறைகளை மாநில அரசுகள் உருவாக்க வேண்டும் என்று அரசியல் சட்ட விதி 41 கூறுகிறது. மாற்றுத்திறன் கொண்ட நபர்கள் சட்டம், 1995, மாற்றுத்திறன் கொண்ட நபர்களின் உரிமைகள் சட்டம், 2016) ஆகியவற்றில் தாய் மற்றும் குழந்தைக்கான பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய பராமரிப்பு, போன்றவற்றில் தடுப்பு சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைக்கான அம்சங்கள் உள்ளன. வேலையில்லா படி மற்றும் காப்பீடு போன்ற சமூகப் பாதுகாப்பு அம்சங்கள் பற்றிக் குறிப்பிடுவதுடன் மாற்றுத்திறன் பெற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட மாற்றுத்திறனாளிகள் சுதந்திரமான முறையில் வாழ்க்கையை நடத்துவதற்கான உரிமைகளை ஆதரித்து, அவர்களை அனைத்து விதமான வன்முறைகளில் இருந்தும் பாதுகாக்கிறது.

### சமூகப் பாதுகாப்புத் திட்டம்

ஏழ்மை நிலையில் உள்ள, தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளும் நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் உள்ளன. அந்தந்த மாநிலங்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் விண்ணப்பதாரரின் வருடாந்திர வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசிய விருதுகள் திட்டம், மாற்றுத்திறன் படைத்த மாணவர்களுக்கான கல்வி ஊக்கத்தொகைத் திட்டம், முக்ய மந்திரி நிஷாக்திகரன் சிக்ஷா திட்டம், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கான உதவி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு போன்ற பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளன.

**I. தடுப்பு சமூக பாதுகாப்புத் திட்டங்கள் சுகாதார பராமரிப்பு, நோய்களுக்கான தடுப்பு ஊசிகள், பிரசவத்திற்கு முன் மற்றும் பிந்தைய தாய், சேய் பராமரிப்பு உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன.**

**II. மாற்றுத்திறன் பெற்றவர்களின் சுகாதாரம், கல்வி, மறுவாழ்வுச் சேவைகள், மாற்றுத்திறனாளிகள் சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை சாத்தியமாக்கும் வகையில் இடஒதுக்கீடு என பல்வேறு திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மேம்பாட்டுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.**

1. வரி : **மாற்றுத்திறனாளிகளுக்கு வருமான வரிச் சட்டப் பிரிவு 80யுவின் கீழ் தொழில் வரி மற்றும் வருமான வரிக் கழிவுக்கு தகுதி உள்ளது என்பதுடன், மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டிய மாற்றுத்திறன் பெற்றவர்களின் சட்டப்பூர்வமான பாதுகாவலர்களுக்கு 80டிடி பிரிவின் கீழ் வருமான வரிக் கழிவு அளிக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளியின் உடல் நிலைத் தாக்கத்தின் அடிப்படையில் இந்தக் கழிவு முடிவு செய்யப்படுகிறது.**

**2. கல்வி :**

a. மெட்ரிக் படிப்பிற்கு மேல் / தொழில் / தொழில்நுட்பக் கல்விப் படிப்புகளை ஓராண்டு கால கட்டத்திற்கு மேல் பயிலும் மாற்றுத்திறன் பெற்ற மாணவர்களுக்கான தேசிய கல்வி ஊக்கத்தொகை. மன இறுக்கம் / மூளை வாதம் / மன வளர்ச்சி குன்றியவர்கள் / பல்வேறு குறைபாடுகள் உள்ளவர்களுக்கு 9ஆம் வகுப்பு முதலே கல்வி ஊக்கத்தொகை அளிக்கப்படுகிறது. இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு மாற்றுத்திறனாளிகளின் பாதிப்பு 40 சதவீதத்துக்கு அதிகமாக இருக்க வேண்டும் என்பதுடன் அவர்களின் குடும்ப மாத வருமானம் ரூ. 15,000க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

b. பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் / காது கேளாமை பாதிப்பு உள்ளவர்கள் பட்டப்படிப்பு / பட்டமேற்படிப்பு தொழிற்படிப்புகளை மேற்கொள்ளும் போதும் மூளை வாத நோய் பாதிப்பு உள்ளவர்கள் மென்பொருள்களை அணுக உதவும் வகையிலும் எடிட்டிங் மென்பொருள் கொண்ட கணினிகளை வாங்குவதற்கான நிதி உதவி.

c. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் மாற்றுத் திறன் பெற்ற மாணவர்களுக்கு மூன்று சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

d. மாற்றுத்திறன் பெற்ற குழந்தைகளுக்கான முழுமையான கல்வித் திட்டம்: இந்தத் திட்டம் மாற்றுத்திறன் பெற்ற குழந்தைகளுக்கு அணுகத்தக்க மற்றும் தடைகளற்ற உள்கட்டமைப்புகள் மற்றும் போக்குவரத்து வசதிகள், புத்தகங்கள், சீருடைகள் மற்றும் எழுதுபொருட்கள், சிறப்பு கற்றல் உதவிகள் மற்றும் கல்வி உதவித்தொகை ஆகியவற்றை அளிக்கிறது. பார்வைக் குறைபாடு உள்ள மாணவர்களுக்கு கணிதம் மற்றும் படம் சார்ந்த கேள்விகளில் இருந்து விலக்கு, பார்வைக் குறைபாடு உள்ள மாணவர்கள் உதவிக்கு எழுதுவோர் / படிப்போரை வைத்துக் கொள்வது, மாற்றுத்திறன் பெற்ற மாணவர்களுக்கு கூடுதல் தேர்வு எழுதும் நேரம், மூன்றாவது மொழிப் பாடத்தில் இருந்து விலக்கு மற்றும் உள்ளடக்கிய கல்விக்காக பாடத்திட்டத்தில் திருத்தம் ஆகிய இதர அம்சங்களும் இந்தத் திட்டத்தில் உள்ளன.

e. இடைநிலை மட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளடக்கிய கல்வி மாற்றுத்திறன் பெற்ற குழந்தைகள் 14 மற்றும் அதற்கு மேல் உள்ள வயதில் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையிலான இடைநிலைக் கல்வியை அரசு, உள்ளாட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் முடிப்பதற்கான ஆதரவை இந்தத் திட்டம் அளிக்கிறது.

f. தொடக்கப்பள்ளியில் இருந்து இடைநிலைக் கல்விக்கு முன்னேறும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் அடையாளம் காணப்பட்டு அவர்களது இயலாமையைப் போக்கும் வகையில் கருவிகள் மற்றும் உபகரணங்கள் அளிப்பது, கற்றல் பொருட்களை அவர்கள் அணுகச் செய்வது, போக்குவரத்து வசதிகள், விடுதி வசதிகள், கல்வி ஊக்கத்தொகை, புத்தகங்கள், உதவி தொழில்நுட்பங்கள், படிப்பதற்கு மற்றும் உதவியாளர்கள் ஆகியோரை ஏற்படுத்திக் கொடுப்பது ஆகியவற்றை இந்தத் திட்டம் அளிக்கிறது.

g. ராஜீவ் காந்தி ஊக்கத்தொகைத் திட்டம்: மாற்றுத் திறன் கொண்டவர்கள் எம்.ஃபில், பி.ஹெச்டி போன்ற உயர்கல்வியை 5 ஆண்டுகளுக்கு மேற்கொள்ள இந்தத் திட்டம் உதவித்தொகை அளிக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பல்கலைக்கழக மானியக் குழுவில் உள்ளடக்கப்பட்ட அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் ஆண்டுதோறும் 200 பேருக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன.

### 3. வேலைவாய்ப்பு

a. மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு என்று க்ரூப் ஏ, பி, சி, மற்றும் டி பதவிகளுக்கு அரசுப்பணி, பொதுத் துறை வங்கிகள் மற்றும் அரசு நிறுவனங்களில் ஐந்து சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

b. அரசுப் பணியில் இருக்கும் மாற்றுத்திறனாளிகள் ஓய்வுபெறுவதற்கான அதிகபட்ச வயது உச்சவரம்பை பத்து வருடங்களுக்கு அரசு உயர்த்தியுள்ளது. அவர்களுக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணங்களில் இருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

c. பதவியில் செயல்படுவதற்குத் தேவைப்படும் திறன் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளை நியமிப்பதற்கான இடஒதுக்கீடு அளிக்கும் வகையில் பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் குறித்து அரசு அடையாளம் கண்டுள்ளது.

d. க்ரூப் சி மற்றும் க்ரூப் டி பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு அந்தப் பிராந்தியத்தில் உள்ள அவர்களின் சொந்த ஊர்களுக்கு அருகில் வேலைகளை அரசு அளிக்கிறது. மாற்றுத்திறன் பெற்ற பணியாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு அருகில் உள்ள அலுவலகங்களுக்கு பணியிட மாற்றம் கோரும் போது அது பரிசீலிக்கப்படுவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

e. மாற்றுத்திறன் பெற்ற நபர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசுப் பணியிடங்களுக்கு அவர்களைத் தேர்வு செய்ய வசதியாக சிறப்பு வேலைவாய்ப்பகங்களை அனைத்து மாநிலத் தலைநகரங்கள் மற்றும் சிறப்பு வேலை வாய்ப்புப் பிரிவுகளை அனைத்து மாவட்டங்களிலும் அரசு உருவாக்கியுள்ளது. சிறப்பு வேலைவாய்ப்பகங்கள் அமைக்கப்படாத இடங்களில் வழக்கமான வேலைவாய்ப்பகங்களில் சிறப்பு வேலைவாய்ப்புப்

பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இட ஒதுக்கீட்டின் கீழ் அரசு வேலைகளைப் பெற மாற்றுத்திறன் பெற்றவர்கள் தங்களை சிறப்பு வேலைவாய்ப்பகங்கள்/ பிரிவுகளில் தாங்களாகவே பதிவு செய்து கொள்ள வேண்டும். வேலை பெறுவதற்கான இந்த சிறப்புப் பதிவுகளை 17 தொழில்பயிற்சி மறுவாழ்வு மையங்களிலும் பதிவு செய்து கொள்ளலாம்.

f. தனியார் துறையிலும் மாற்றுத்திறனாளிகளை வேலைக்கு நியமிக்கும் நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை அளிப்பதன் மூலம் தனியார் துறையிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்புக்களை அளிக்கிறது. குறைந்தபட்சம் மாதம் ரூ. 25,000 ஊதியத்துடன் மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்தும் நிறுவனங்களுக்கு வருங்கால வைப்பு நிதி மற்றும் அரசு காப்பீட்டுக்கான பணியமர்த்துவோர் செலுத்த வேண்டிய பங்கினை அரசே ஏற்கிறது.

g. பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் அனைத்து வகையான முகமைகள் வழங்கப்படுவதில் மாற்றுத்திறனாளிகளுக்கு 7.5 சதவீத இடஒதுக்கீட்டை பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் அளிக்கிறது.

h. மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் தொடங்க தேசிய உடல் ஊனமுற்றோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் கடன் அளிக்கிறது. சேவை/ வர்த்தகம்/தொழிற்சாலை அமைக்க, உயர்கல்வி/ தொழில்பயிற்சி பெற, மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் உபகரணங்கள் தயாரிக்க/உற்பத்தி செய்ய, வேளாண் செயல்பாடுகளுக்காக, மூளை வளர்ச்சிக் குறைபாடு கொண்டவர்கள் சுய தொழில் தொடங்க கடன் ஆகியவை இந்தத் திட்டத்தில் அடங்கும்.

i. பொதுத்துறை வங்கிகள்: இந்தத் திட்டத்தின் கீழ் அனாதைகள், பெண்கள் விடுதிகள் மற்றும் உடல் ஊனமுற்றவர்கள் பயன் பெறும் வகையில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வுக்காக செயல்படும் அமைப்புகளுக்கு மாறுபட்ட வட்டி விகிதத்தில் கடன் அளிக்கப்படுகிறது. சமூக நோக்கங்களைக் கருத்தில் கொண்டு ஆண்டுக்கு 4 சதவீதம் என்ற அளவில் சீரான வட்டி இருக்கும். மாற்றுத்திறனாளிகள் சிறு தொழிற்சாலைகள் தொடங்க வட்டி விகிதத்தில் (0.5 சதவீத சலுகை) சிறப்பு வசதி அளிக்கப்படுவதுடன் ரூ. 25,00,000 வரை மூலதனக் கடன் அளிக்கப்படும்.

4. மாற்றுத்திறனாளிகள் உதவிக்கான உபகரணக்கள் வாங்க/பொருத்திக் கொள்ள உதவி: மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவைப்படும் நம்பகமான, அதிநவீன மற்றும் அறிவியல்பூர்வமாக தயாரிக்கப்பட்ட அவர்களது உடல்ரீதியான சமூக மற்றும் உளவியல் ரீதியான மறுவாழ்வை மேம்படுத்தி அதன் மூலம் அவர்களது உடல்நிலை காரணமாக ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்து அவர்களது பொருளாதார வாய்ப்புக்களை மேம்படுத்த நவீன, தரமான உதவிப் பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பெற உதவி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

5. இந்திரா வீட்டு வசதி திட்டம்: வீட்டு வசதிக்கான மைய அரசின் இந்த வீட்டு வசதித் திட்டம் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் கிராமப்புற ஏழைகளுக்கு சமநிலைப் பகுதிகளில் ரூ. 20,000 மற்றும் மலை/கடினமான பகுதிகளில் ரூ. 22,000 மதிப்பிலான வீடுகளை இலவசமாக அளிக்கிறது. கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாற்றுத்திறனாளிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் மூன்று சதவீத நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

6. மாற்றுத்திறன் பெற்றோருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தேசிய விருதுகள் அளிக்கும் திட்டம்: மாற்றுத் திறன் பெற்றவர்களின் முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையிலும் இந்தத் துறையில் மற்றவர்களும் சாதனைகள் புரிவதை ஊக்குவிக்கும் வகையிலும், மிகச் சிறந்த/சிறப்புக்குரிய மாற்றுத்திறன் பெற்ற பணியாளர்கள், சிறந்த நிறுவனங்கள், சிறந்த வேலைவாய்ப்பு அளிக்கும் நிறுவனம்/அதிகாரி, தனித்தன்மையான தனிநபர்கள் தனித்தன்மையான நிறுவனங்கள், முன்மாதிரிகள், மாற்றுத்திறன் கொண்ட தனித்தன்மையான படைப்பாளிகள், தனித்தன்மையான் தொழில்நுட்பப் புதுமை, குறைந்த செலவிலான தொழில்நுட்பத்தை அளிக்க புதுமைகளை ஏற்றுக்கொள்வது என பல்வேறு விருதுகள் தனித்தனியாக வழங்கப்படுகின்றன.

7. மாற்றுத் திறனாளிகளுக்கு தடையற்ற சூழலை உருவாக்கும் அரசுத் துறை, பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்காக செயல்படும் சிறந்த மாவட்டம், தேசிய அறக்கட்டளையின் சிறந்த உள்ளூர் மட்டத்திலான குழு, மற்றும் தேசிய உடல் ஊனமுற்றோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் சிறந்த மாநில வழிகாட்டும் முகமை ஆகியவற்றுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாற்றுத் திறன் பெற்ற பெண்களுக்கு, குறிப்பாக, கிராமப்புற பெண்கள் மற்றும் சுய தொழில் புரியும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

வசூலிக்கும் வங்கிகள் அந்தத் தொகையை அறக்கட்டளை ஒன்றுக்கு மாற்றி அது மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்வுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சிவில் மேல்முறையீட்டு மனு எண் 4655 மற்றும் 5218 ஆகியவற்றை விசாரித்த உச்சநீதிமன்றம் கடந்த 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உத்தரவிட்டுள்ளது. மூளை பாதிப்பு, மனவளர்ச்சி குன்றிய மற்றும் பல்வேறு பாதிப்புகளின் நல்வாழ்வுக்குப் பயன்படுத்தப்படும் வகையில் இந்த நிதியை தேசிய அறக்கடளைக்கு மாற்ற உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலை அமைச்சகம் கேட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சகத்தின் கோரிக்கை குறித்து




8. மாற்றுத்திறன் பெற்றவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் அறக்கட்டளை நிதி: கடன் தாரர்களிடம் இருந்து வட்டிக்கான வரியையும் சேர்த்து ஆண்டுக்கு ரூ. 723.25 கோடிக்கும் கூடுதலாக

உச்சநீதிமன்றம் இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்ற போதிலும், அறக்கட்டளை ஒன்று உருவாக்கப்பட்டு அறக்கட்டளையின் கணக்கில் அந்தத் தொகையை முதலீடு செய்ய

அனைத்து வங்கிகளையும் நிதி அமைச்சகத்தின் வங்கிகள் பிரிவு கேட்டுக்கொண்டுள்ளது.

9. இயந்திர கதியில் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டங்கள்: தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உரிய மற்றும் குறைந்த விலையிலான கருவிகள் மற்றும் உபகரணங்களை அளிக்கும் நோக்கத்துடனும் அவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரித்து மாற்றுத்திறனாளிகளின் சமூகத்தை ஒருங்கிணைக்க மேற்கூறப்பட்ட திட்டம் கடந்த 1990-91இல் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் உரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு கருவிகள் மற்றும் உபகரணங்கள் உருவாக்குவதற்கான நிதி அளிக்கப்பட்டுள்ளது.

III. சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு விளக்கியுள்ள வறுமையை எதிர்கொள்வதற்கான அல்லது சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான பாதுகாப்பான சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. முதியவர்களுக்கு ஓய்வூதியம், மருத்துவக் காப்பீடு, இழப்புக்கான இழப்பீடு ஆகியவற்றை இந்தத் திட்டங்கள் கவனித்துக்கொள்கின்றன.

a. இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம்: இது தேசிய சமூக உதவித் திட்டத்தின் ஒரு பகுதியாக கடந்த 2009, பிப்ரவரி 17ஆம் தேதி ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின் செயலரால் இணைக்கப்பட்டது. இந்திரா காந்தி தேசிய மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு சார்பில் ரூ. 300 நிதியுதவி 18 முதல் 79 வயது வரையிலான, வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தைச் சேர்ந்த பல்வேறு குறைபாடுகள் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மத்திய அரசு விதித்த விதிமுறைகளின் கீழ் அளிக்கப்படுகிறது.

b. மாற்றுத்திறன் பயன் - வேலை செய்வோர் இழப்பீட்டு சட்டம் 1923 என்று அழைக்கப்பட்ட பணியாளர் இழப்பீட்டு சட்டம் 1923 மரணம் அல்லது உறுப்பு இழப்பை ஏற்படுத்தும் பணி தொடர்பான காயங்கள் ஏற்படும் போது, பணியாளர் அல்லது அவரது குடும்பத்தினருக்கு பணி அளிக்கும் நிறுவனம் இழப்பீடு அளிக்க வேண்டும் என்கிறது. பணியாளர் ஒருவருக்கு அவர் செய்யும் பணி தொடர்பான நோய் பாதிப்பு ஏற்படும் போது அல்லது விபத்து ஏற்படும் போது அவருக்கு பணி அளித்த நிறுவனம் இழப்பீடு அளிக்க வேண்டும். முழுமையான மற்றும் பகுதி பாதிப்பு ஏற்பட்டு நிரந்தர ஊனம் ஏற்படுத்தும் காயங்கள் பணியாளர் இழப்பீடு சட்டத்தில் பட்டியல் ஒன்றின் முதல் மற்றும் இரண்டாம் பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. தொழில்சார்ந்த நோய்கள் குறித்து பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் பட்டியல் 3ல் உள்ள ஏ, பி மற்றும் சி ஆகிய பகுதிகளில் விளக்கப்பட்டுள்ள போதிலும் இது அமைப்பு சார்ந்த துறைகளுக்கு மட்டுமே பொருந்தும்.

## சவால்கள் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்

இந்தியாவில் சமூக பாதுகாப்புத் திட்டங்கள் மாற்றுத்திறன் பெற்றவர்களை போதுமான அளவு சென்றடையாத நிலை உள்ளது. மாற்றுத்திறனாளிகளைச் சுற்றியுள்ள சமூக மற்றும் உடல் சார்ந்த தடைகள் காரணமாக இந்தியாவில் பெரும்பாலான வளர்ச்சித் திட்டங்கள் அவர்களுக்கு அணுகத்தக்கதாக இல்லை. மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு குறிப்பிட்ட உதவித் திட்டங்கள் நாட்டில் உள்ளன என்றபோதிலும் அவற்றின் உள்ளடக்கம் மற்றும் இந்தத் திட்டங்கள் முழுமையாக இல்லை என்பதால் இவை மாற்றுத்திறன் பெற்றவர்களின் பிரச்சினைகளை முழுமையாக கவனிப்பதில்லை. தகவல் மற்றும் உதவிகளை அளிப்பதற்கான ஒற்றைச் சாளர அணுகுமுறை இல்லை என்பதால் தங்களுக்காக என்னென்ன பயன் அளிக்கும் திட்டங்கள் உள்ளன என்பதை மாற்றுத்திறனாளிகளால் தெரிந்து கொள்ள முடியாத நிலை உள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவு மற்றும் பயன்கள் விநியோகிக்கப்படுவதற்கான தற்போதைய நிர்வாக ஏற்பாடுகள் சிதறிப்போய் உள்ளன. சீரான பயன்கள் அளிக்கும் மற்றும் திட்டங்களை நிர்வகித்து வழிநடத்த ஒற்றை முகமை அமைப்பு இல்லை. மாற்றுத்திறனாளிகளுக்குப் பயன் தரக்கூடிய பல்வேறு முகமைகள் அல்லது துறைகள் உள்ள தற்போதைய நிலை மாற்றப்பட்டு அவை அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு முழுமையான திட்ட வடிவமைப்பைக் கொண்டு கொள்கைகளை

ஒரு குடையின் கீழ் முதன்மை செயல் அதிகாரி ஒருவரின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என யோசனை அளிக்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சகங்களிலும் பட்ஜெட் ஒதுக்கீட்டின் போது மாற்றுத்திறனாளிகளுக்கான ஒன்றுபட்ட செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் நிதி போதுமான அளவு ஒதுக்கப்பட வேண்டும் என்று பத்தாவது திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. ஆனால் இடைக்கால ஆய்வு அறிக்கையில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் இந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் எதையும் செய்யவில்லை என்று கூறியுள்ளது. சம்பந்தப்பட்ட அமைச்சகமே இது தொடர்பாக எதுவும் செய்யவில்லை என்பது சோகமான தகவலாகும். இதுதவிர பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் பல்வேறு கொள்கைகளின் கீழ் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஒதுக்கப்பட்ட நிதியில் வெறும் 31 சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என்பது மாற்றுத்திறனாளிகளின் மீது அரசு கொண்டிருந்த மோசமான அணுகுமுறை பிரதிபலிப்பதாக உள்ளது.

இயலாமைகளின் இயக்கநிலையைப் புரிந்துகொண்டு அனைவரையும் உள்ளடக்கிய யுக்திகள் வடிவமைப்புடன் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்றும், அதன் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான பாதுகாப்பான சமூகப் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் என்றும் கருதப்படுகிறது. இதற்கு முதலாவதாக மாற்றுத்திறனாளிகள் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளைக் கொண்ட பெற்றோர், பணியமர்த்துவதற்கான தகுதி பெற்ற பயின்ற வேலையில்லா மாற்றுத்திறனாளிகள், நிலையான ஆதரவு தேவைப்படும் மோசமான பாதிப்பு கொண்ட மாற்றுத்திறனாளிகள், 60 வயதைப் பூர்த்தி செய்துள்ள மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறன் கொண்ட பெண்கள், முறைசாராத் துறையில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை உள்ளிட்டவை கொண்ட விரிவான தகவல் சேகரிக்கப்பட வேண்டும்.

முழுமையான நிர்வாக ஏற்பாடுகள், பல்வேறு ஆதாரங்களில் இருந்து நிதி பெறுவது மற்றும் நிபுனர்களின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் பயன்கள் விநியோகம் செய்யப்படுவது உடனடியாக




மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளாகும். இதுதவிர உள் மாநில, தேசிய மற்றும் சர்வதேச முகமைகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் இருந்து கூடுதல் ஆதாரங்கள் பெறப்பட்டு மாற்றுத் திறன் பெற்ற மக்களுக்கு பயன்கள் சென்றடைவது உறுதி செய்யப்பட வேண்டும்.

•

# விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க : நிஜத்திலிருந்து தொலைநோக்கு வரை

- நிலப்ஜா கோஷ்

- பேராசிரியர் பொருளாதார வளர்ச்சி கழகம், டெல்லி

அரசின் அமைச்சகங்கள் அவ்வப்போது சில பிரிவுகளாக பிரிந்தும், சில அமைச்சகங்கள் இணைந்தும் புதிய வடிவில் உருவாகின்றன. ஆனால், விவசாய அமைச்சகத்தை விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம் என்று 2015இல் மாற்றி அமைத்தது வெறும் செயல்முறைக்காக மட்டும் அமைக்கப்பட்டதல்ல. விவசாயம் வெறும் உணவு உற்பத்தி செய்யும் அமைப்பு மட்டுமல்ல - அவற்றை உற்பத்தி செய்யும் விவசாயிகள், சமுதாயத்தின் மற்றவர்களோடு ஒப்பிட்டு பார்க்கும், போது நல்ல வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற தொலை நோக்கை ஏற்றுக்கொள்வதாகும்.

பசுமைப் புரட்சி மற்றும் புதிய கொள்கைகளினால் அடிப்படை உணவு பொருட்களின் உற்பத்தி பல மடங்கு உயர்ந்துள்ளது. 1960களில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறை காலங்களிலேயே இந்தியா அரிசி மற்றும் பால் உற்பத்தியில் உலகத்தில் முதல் இரண்டு இடத்தில் இருந்தது. பிறகு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது. பிறகு, கொள்கையின் அடிப்படையில் பருப்புகள், பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற உணவு பொருட்களுக்கும் கவனம் செலுத்தப்பட்டது.

ஆனாலும், இந்த வளர்ச்சி நிலையில் பெரும்பான்மையான அடிப்படை விவசாயிகள் ஏழ்மையிலும், ஏமாற்றத்திலுமே வாழ்ந்தனர். விவசாயத்திலிருந்து கிடைக்கும் வருமானம் ஏற்கனவே குறைந்த நிலையில், பொருளாதார நிச்சயமற்றத் தன்மை ஏற்படும் போது, விவசாயிகளே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். 2003-04 மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி வாய்ப்பு இருந்தால் 40 சதவிகித விவசாய குடும்பங்கள் பிற தொழிலுக்கு செல்ல விரும்பினார்கள். (தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு 2005). பிறகு, 2014இல் மேற்கொள்ளப்பட்ட இந்த அமைப்பின் ஆய்வில் விவசாயிகள் தங்களுடைய குறைந்தபட்சத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகக் கூட விவசாயம் அல்லாத பிற தொழில்களை நாட வேண்டியுள்ளது என்று தெரிய வந்துள்ளது. மிக உயர் அளவு உணவு உற்பத்தியிருந்தும் விவசாயிகள் ஏன் வறுமையிலும், பாதிப்புகளிலும், குறைந்த வளத்திலும் வாழ்கிறார்கள் என்பதை இந்தக் கட்டுரை ஆய்வு செய்து இந்த நிலைமையை மாற்ற, மாற்றங்களைத் தெரிவிக்கிறது.

## விவசாயிகளின் வருமானமும், பாதிப்புத் தன்மையும்

விவசாயிகளுக்கு ஏற்பட்ட தொல்லைகள் காரணமாகவும் 2022 வாக்கில் விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாகும் என்று பிரதமர் கூறியதாலும் விவசாயிகளின் வருமானம் பற்றிய ஆர்வம் ஏற்பட்டது. இதனால், விவாதங்களின் மையமாக விவசாயிகள் காணப்பட்டார்கள். விவசாய வருமானத்திற்குப் பல காரணிகள் உண்டு. உயர் வருமானத்திற்கு முக்கிய காரணி அவருடைய நிலத்தின் செழுமையாகும். விவசாயத்திற்குத் தேவைப்படும் அனைத்து இடு பொருட்களுக்குமான உற்பத்தித் திறனை மேம்படுத்த வேண்டும். ஏனென்றால், நீர் மற்றும் உரங்கள் மிகவும் விலை உயர்ந்தவை. தொழில்நுட்ப மேம்பாட்டால் உற்பத்தியும் திறமையும் வலுக்கிறது. சந்தையில் உபரி மற்றும் விவசாயப் பொருட்கள் வீணாகுதல் ஆகியவையும் அந்த பொருட்களின் மதிப்பை நிர்ணயிக்கின்றன. ஆனால், இந்தப் பொருட்களின் விலையும், அவைகளை உற்பத்தி செய்யத் தேவையான இடுபொருள்களின் விலையும் விவசாய வருமானத்தை நிர்ணயிக்கின்றன.

இந்தியாவில் விவசாயம் சார்ந்த பருவநிலையில் பகுதிக்கு பகுதி மாற்றங்கள் உள்ளன. அதைப்போலவே, மாநிலங்களுக்கிடையேயான கொள்கைகளும். இதனால் பயிர் விளைச்சல் சதவிகிதங்கள், உள் கட்டமைப்பு வசதிகள் மற்றும் விவசாயம் சார்ந்த அமைப்புகள் மாநிலங்களுக்கிடையே வேறுபடுகின்றன. விவசாய நிலம் சிறியதாக இருந்தால் அதனால், நல்ல வரவு இருக்காது. ஜனத்தொகை வளர்ச்சி மற்றும் தொழிற்கூடங்களில் மிகக் குறைந்த அளவே வேலை வாய்ப்பு உருவாகுதல் ஆகியவை காரணமாக நிலத்தில் அதிக மக்கள் வேலை செய்து விவசாய தனி நபர் வருமானம் மிகவும் தாழ்ந்துள்ளது. இயற்கை, ஜனத்தொகை மற்றும் நிர்வாக மாற்றங்களினால் ஓரிடத்தை விட மற்றொரு இடத்தில் விவசாயம் அதிகம் பயனளிக்கக்கூடியதாக உள்ளது. வேலையாட்கள் இடம் விட்டு இடம் பெயர்வதால் ஒவ்வொரு குடும்பத்தின் வருமானம் உயரவும் விவசாயத் துறைக்கு புதிய உத்திகளையும், திறமைகளையும் கொண்டு வரவும் வாய்ப்புள்ளன. விவசாய வருமானம்

பெருகும் போது, மக்களின் தேவை அதிகரித்து விவசாயம் அல்லாத துறைகள் பயன் பெறுகின்றன.

விவசாயத்திற்கு மிகப்பெரிய ஆபத்து வானிலை ஆகும். பருவமழை பொய்த்தால் இந்த ஆண்டு உற்பத்தி பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் அணைகள், நதிகள், கால்வாய்கள், கிணறுகள் மற்றும் நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்பட்டு, வரும் ஆண்டுகளிலும் பாதிப்பு இருக்கும். 2014-15 ஆண்டுகள் போல், பருவநிலை தொடர்ந்து பொய்த்தால் விவசாயிகள் தங்களுடைய முதலீடுகளை இழந்து கடனிலும் தொல்லைகளிலும் வீழ்கிறார்கள். பொதுவாக சாதாரணமான மழைப் பொழிவு இருந்தாலும், ஓர் ஆண்டிற்கு சில மாதங்களிலும், சில பகுதிகளிலும் பற்றாக்குறை இருக்கும். கூடுதலான மற்றும் காலம் தவறிப் பெய்யும் மழையாலும் பாதிப்புகள் உண்டு. வெள்ளங்களினால் பேராபத்து ஏற்படலாம். 2014இல் பருவமழை இயல்பாக இருந்தாலும் ஒன்பது மாநிலங்களில் வெள்ளம் ஏற்பட்டது. பீகார் நதிகளில் வெள்ளம் ஏற்பட்டபோது, ஐந்து இலட்சம் மக்களும் மூன்று இலட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டன.

விலையில் ஏற்றத் தாழ்வுகளாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரணமான சூழ்நிலைகளிலும், விவசாயிகள் அறுவடைக்குப்பின் விற்பனை செய்யும் சில மாதங்களில் பாதிப்புகள் ஏற்பட்டு பிறகு விலைகள் உயர்கின்றன. அதற்காக விவசாயிகள் தங்களுடைய உற்பத்தியை விற்காமல் வைத்துக்கொள்ள முடியாது. அவர்களே பிறகு அதிக விலை கொடுத்து உணவுப் பொருட்களை வாங்க நேரிடுகிறது. குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகள் அதிக உணவு பொருட்களை உற்பத்தி செய்து அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும். ஆனால், இந்த நிலை தொடர அரசு போதுமான அளவு கொள்முதல் செய்ய வேண்டும். அதிக உணவுப் பொருட்கள் உற்பத்தியால் விலைகள் சரிகின்றன. 2016-17இல் பருப்பு வகைகளின் அதிக உற்பத்தியால் குறைந்த பட்ச ஆதரவு விலை குறைக்கப்பட்டும் விலைகள் சரிந்தன. பொருட்களின் தேவைகளின் ஏற்றத்தாழ்வுகளும் உலகளாவிய போட்டியாலும். விவசாய பொருட்களின் நிச்சயமற்றத் தன்மை நிலவுகிறது.

**கிராமப்புற வசதிகள் :**

உற்பத்தி மற்றும் விலைகளின் அடிப்படையில் மட்டும் விவசாயிகளின் நலன்களை கருதுவது தவறாகிறது. பலவகையான சேவைகள் அன்றாட வாழ்க்கைக்கு உதவுகின்றன. புதிய வாய்ப்புக்களை உருவாக்கி திறமைகளை வளர்க்கின்றன (சென் 2005) இதனால், தொழில்நுட்ப மேம்பாடுக்களின் பயன்கள் அவர்களுக்குக் கிடைக்கும். இப்படிப்பட்டவைகளை குடிமக்களின் உரிமைகளாகவும் வழங்குவதை அரசின் கடமையாகக்கூட கருதலாம். ஆனால், துரதிஷ்டவசமாக நகர்ப்புற மக்களை சார்ந்த கொள்கைகளால் இந்தியாவில் மற்றவர்களைவிட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

பல ஆண்டுகளாக ஏழைமக்களின் மனித வள மேம்பாடு, கவனிக்கப்படவே இல்லை. கிராமங்களில் பெருமளவு வசிக்கும் ஏழைமக்கள் கவனிக்கப்பட வில்லை. கிராமங்களில் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது துவங்கப்பட்ட பின்பும் அங்கு தரமான கல்வியும், திறன் வளர்ப்பும் இல்லை. இதற்கு முக்கிய காரணங்களாக பட்ஜெட் நெருக்கடி, தளர்ந்த கொள்கை செயல்பாடுகள் மற்றும் இலஞ்சம் ஆகியவை பலகாலமாகக் கூறப்படுகின்றன. இதனால், பொது சுகாதாரமும் பாதிக்கப்பட்டு விவசாயிகளும் பாதிக்கப்படுகிறார்கள். பொது விநியோகத் திட்டம் முதலில் எல்லோருக்குமாக செயல்பட்டு, பிறகு ஏழைகளுக்காக செயல்படுத்தப்பட்ட நிலையில் மக்கள் உயிர்வாழ அன்றாடத் தேவைகள் இல்லாத நிலையில் அது பயனளித்தது. ஆனால், பல குற்றச்சாட்டுக்கள் காரணமாக, 1980 முதல் பொது விநியோகத் திட்டத்தில் பலவகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த பல ஆண்டுகளாக எல்லா பகுதிகளின் சாலைகள், இரயில்வே மற்றும் மெட்ரோ இரயில் மூலம் இணைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் 14 சதவிகித இந்திய கிராமங்களுக்கு எல்லா பருவ நிலைகளிலும் சென்றடையக்கூடிய சாலைகள் இல்லை. (அஷர் மற்றும் நோவாசாத், 2017). மின்சாரத்தால் வாழ்க்கை எளிதாகிறது. பலவகையான பொருளாதார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஏதுவாகிறது. சுகாதாரத்திற்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் வீடு, நீர் மற்றும் வடிகால் வசதிகள் அவசியமாகின்றன. மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தகவல்களின்படி 45 முதல் 70 சதவிகிதம் வரையிலான கிராமப்புற வீடுகளுக்கு மின்சார வசதியோ, தண்ணீர் வசதியோ கழிவிடங்களோ இல்லாமல் உள்ளன. 18 சதவிகித வீடுகளுக்கு இந்த மூன்று வசதிகளும் முற்றிலுமாக இல்லை (மிஷ்ரா மற்றும் சுக்லா, 2013) விரைவாக தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள ஏதுவான இணையதளம் மற்றும் விண்வெளித் தொழில்நுட்பத்திற்கு குறைந்த பட்ச அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகள் தேவை. ஆகவே, இப்படிப்பட்ட உள் கட்டமைப்பு வசதிகளினால் விவசாயிகளின் சமூக வாழ்க்கை மேம்பட்டு அவர்களின் உற்பத்தித் திறன் பெருகி விற்பனைகள் எளிதாகி பொருட்கள் இழப்பு குறைந்து அவர்களுடைய பொருட்களுக்கு மதிப்பு கூடி சமுதாய உள் கட்டமைப்பு வசதிகள் சிறப்பாகச் செயல்படும்.

## பெண்களுக்கான தனித்தேவைகள் உண்டு

விவசாயக் குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு ஊதியம் கிடைப்பதில்லை. சிறிய நிலத்தில் உள்ளவர்கள் மிகவும் கடினமான நெல் நாற்று நடும் பணிகள் போன்றவற்றை மிகக் குறைந்த ஊதியத்தில் ஏற்றுக் கொள்கிறார்கள் (கோஷ் 2010). புதிய தொழில்நுட்ப மாற்றங்களினாலும் அதிக வருமானமுள்ள வேலை வாய்ப்புகளினாலும் பெண்கள் விவசாயப் பணியிலிருந்து விடுபடுகிறார்கள் (போஸ்ரப் 1970). ஆண்கள் இயற்கையாகவே விவசாயம் அல்லாத பிற வேலைகளுக்கு செல்ல விரும்புவதால் ஏழைப் பெண்கள் வற்புறுத்தி விவசாயத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். (ஜிகின்ஸ், 1998). விவசாய பெண்களின் மேம்பாட்டிற்குப் பயிற்சி, திறன் வளர்ப்பு, பெண்களுக்குத் தேவையான நல்வாழ்வு வசதிகள், குழந்தைகள் பராமரிப்பு வசதிகள், பெண்கள் உடலமைப்பிற்கு ஏற்ற இயந்திரங்கள், தகவல்களைப் பெறும் வசதி ஆகியவை தேவை.

## விவசாயிகள் நலனுக்கான புதிய வழிகள்

பல ஆண்டுகளாக இந்தியாவில் விவசாய மேம்பாட்டில் தரமான விதைகள் உரமானியம், மலிவு விலை எரிசக்தி, நீர்ப்பாசன வேலைகளுக்குக் குறைந்த விலையில் கடன், உணவு தானியங்கள் பொது கொள்முதல், குறைந்தபட்ச ஆதரவு விலை ஆகியவைகளை அளித்து உணவுப் பொருட்களை பயன்படுத்துபவர்களுக்கு உணவுப் பாதுகாப்பும், விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தையும் கொடுத்திருந்தது. இந்தச் சலுகைகளும் ஆதரவும் பெரும்பாலும் உபரி உணவு உற்பத்தி செய்யும் பகுதிகளுக்கு சென்றுவிட்டதால் பிறகு மற்ற பயிர்களுக்கும் சேமிப்புக் கிடங்குகளுக்கும் மழை சார்ந்த விவசாயப் பகுதிகளுக்கும் குறிப்பாக கிழக்கு மாநிலங்களில் அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. நிலைத்து நிற்கும் செயல்முறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பாரிஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள இந்தியா உலகளாவிய பருவநிலை மாற்றத்திற்கு எதிரான முயற்சிகளில் பங்கு பெற்று நிலைத்து நிற்கும் மேம்பாட்டிற்கும், உயர் வளர்ச்சிக்குமான வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்துள்ளது. விவசாயிகளை அதிகமாக பாதிக்கும் பருவநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கைப் பேரிடர் சார்ந்த விழிப்புணர்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆபத்துக்களை சமாளிப்பதற்கு காப்பு வசதியே இயற்கையான தீர்வாகும். ஆனால், பல ஆண்டுகளுக்குப் பிறகே இந்தியாவில் பயிர்க் காப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன (மிஷ்ரா 1996, ஹசல், மற்றவர்கள் 1986). 1999-2000மாவது ஆண்டில் தேசிய விவசாயக் காப்புத் திட்டம், பகுதி சார்ந்த பயிர் விளைச்சல் காப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குத் தேவையான தகவல்கள் மிகவும் குறைவானவை. ஏனெனில் ஒரு பகுதியில் உள்ள விவசாயிகள் அனைவருக்கும் ஒரே மாதிரியான விபத்துக்கள்தான் ஏற்பட வாய்ப்புண்டு. நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெறுபவர்களுக்கு இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பயிர்க் காப்புத் திட்டத்தினால், சிறிய பகுதிகள் சார்ந்த தகவல்கள் இல்லாததால் அங்கு ஏற்படும் பேரிடர்களுக்குப் பயன் கிடைக்காமல் நஷ்டம் ஏற்பட்டு தோல்வியயை நேரிட்டது. இதனால், பயிர்க் காப்பு திட்டத்தில் பலவகையான மாறுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஜனவரி 2016இல் அரசு பிரதமமந்திரி பயிர்காப்புத் திட்டம் ஒன்றை துவக்கியது. அதில் வானிலை, பூச்சிகள், நோய்கள், விதைக்க இயலாமை மற்றும் விளைந்த பயிர்களுக்கு நாசம் ஆகிய இழப்புகளுக்கு காப்பு வழங்கப்பட்டன. அரசு விவசாயிகளின் பயிர்க் காப்புத் தவணைகளுக்கு மானியம் அளித்தாலும் தனியார் காப்பு நிறுவனங்களையும் இந்த திட்டத்திற்குக் கொண்டு வந்தது. பயிர் விளைச்சல் சார்ந்த தகவல்களை சேகரிப்பதில் நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதால் குறிப்பிட்ட பகுதியில் ஒரே மாதிரியான பயிர் விளைச்சல்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயிர்க்காப்பு மூலம் பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள இயலும். ஆனால், வானிலை சார்ந்த பேரிடர்களால் பெரிய நிலப்பரப்புக்களையும் அதிகப்படியான விவசாயிகளையும் பாதிக்கமுடியும். நாட்டின் செயற்கைக் கோள்களும், வானிலை அறியும் திறன்களும் வலுவாக்கப்பட்டு நம்பகமான தகவல்களைத் திரட்ட முடியும். 2005இல் பேரிடர் மேலாண்மைச் சட்டம் இயற்றப்பட்டு பேரிடர் மீட்புப் படைகள் துவக்கப்பட்டன. இவை, மாநிலங்களில் அவ்வப்போது ஏற்படும் பேரிடர்களை சமாளிக்க உதவுகின்றன. ஒரு மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டால் இது ஒரு பேரிடராகக் கருதப்பட்டு நீர்ப்பாசனம் சார்ந்த சிறப்பு மானியங்கள் அளிக்கப்படுகின்றன.

பாரம்பரிய ஒழுங்குமுறைகள் சரியாக இயங்காத நிலையில் விவசாயப் பொருட்களின் சந்தை நிலைமை சீரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இந்த சந்தைகள்,

போட்டிமிக்கதாகவும், திறன் கொண்டதாகவும் இருக்க விவசாயப் பொருட்கள் விற்பனை குழுச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு, விவசாயிகளுக்கு மேலும் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அரசு தலையிட்டு விலைகளைக் கட்டுப்படுத்த ஏதுவாக விவசாயப் பொருட்கள் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் விநியோக முறைகள் மிகவும் சிறப்பாக இருக்க வேண்டும். ஆனால் அவைகள் கண்காணிப்பு மற்றும் நிதி சார்ந்த சவால்களினால் பாதிக்கப்பட்டுள்ளன. இடுபொருள்கள், உணவுக்கான மானியங்கள் மற்றும் 2013இல் இயற்றப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவைகளினால் ஒருவருக்கு கிடைக்க வேண்டிய உணவு அளவு சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனாலும் அதிக நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. ஆனால், தற்போது, மிக உயர்ந்த அளவில் உலகச்சந்தையே விவசாயப் பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கிறது. ஆகவே, சில சமயங்களில் அரசு இந்த விஷயத்தில் குறுக்கிடும் போது, விவசாயிகளுக்குத் தவறான தகவல்களை அளித்து பற்றாக்குறையையும், உபரியையும் ஏற்படுத்திவிட முடியும். இதற்கிடையே, இந்தியாவின் மானிய முறைகளும் மாறிவருகின்றன. ஏற்கனவே வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ள இயற்கை எரிவாயுவுக்கான மானியம் நேரடியாக வழங்கப்படுவதைப் போல தனிநபர் சிறப்பு அடையாள முறையும், ஜன்தன் வங்கி திட்டம் மூலமும் விவசாயிகளுக்கான பயன்கள் அவர்களுடைய கணக்குகளுக்கு நேரடியாக செலுத்த முடியும். இது அல்லாமல் 2016-17 ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையில் எல்லோருக்குமான அடிப்படை வருமானக் குறியீடு எல்லாவகையான மானியங்களுக்கு பதிலாக இருக்க முடியும் என்ற ஒரு கருத்தை ஒரு முழு தொகுப்பாக வெளியிட்டுள்ளது. தனி மனித அடிப்படை வருமானம் மனித உரிமையாகக் கருதப்பட்டு அதற்குண்டான விவரமான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. தேசிய ஊரக வாழ்வுரிமைத் திட்டம், மின்னணுசார் விலை அறிமுகத் திட்டம், தேசிய சமுதாய உதவித் திட்டம், இந்திரா வீட்டுவசதி திட்டம், பிரதம மந்திரி தேசிய ஊரகச் சாலை மேம்பாட்டுத் திட்டம், தேசிய கிராமப்புற நல்வாழ்வுத் திட்டம் போன்றவைகள் மூலம் முதலீடுகள் செய்தும், மானியங்கள் வழங்கியும் கிராமப்புற மக்களின் வாழ்வுத்தரம் உயர்த்தப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஏற்றுக்கொள்ளக்கூடிய விலையில் பாசனம் கிடைத்தால் வறட்சியின் பாதிப்பைக் குறைக்க முடியும். 2005முதல் செயல்படுத்தப்பட்டு வரும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் கிராமப்புற மக்களுக்கு குறைந்தபட்ச வருமானத்தை அளிப்பதில் மிக முக்கியப் பங்காற்றியுள்ளது. மக்களுக்கு வேலை செய்யும் சட்ட உரிமை உள்ளதை அது தெளிவுபடுத்துகிறது. இந்தத் திட்டங்கள் செயல்படுவதில் குறைபாடுகளும், போதிய உற்பத்தியும் இல்லாமல் இருந்தாலும் கிராமப்புறங்களில் சில கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. தேசிய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுக் கொள்கைத் திட்டம் 2015இல் செயல்படுத்தப்பட்டு மக்களின் வேலை வாய்ப்பு உற்பத்தித் திறன், தொழில்முனைவு மற்றும் நிலையான திறன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**முடிவாக**

பல ஆண்டுகளாக நுகர்வோர் நலனே விவசாயிகளின் வருமானப் பாதுகாப்பை நிர்ணயித்தது. தற்போதுள்ள சந்தை சீர்திருத்தங்களினாலும், பட்ஜெட் பற்றாக்குறைகளினாலும் இந்த நிலைமையில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. சமூகப் பாதுகாப்பு அமைப்பில் பெரிய அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டு ஒரு குடிமகனின் குறைந்தபட்ச நலன் என்பது உரிமையாக கருதப்பட்டுள்ளது. அரசு, ஒரு சந்தை சிறப்பாக செயல்படுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள முடியும். ஆனால், வெளிப்படையான சந்தையில் அது விலைகளையும், விவசாயிகளின் வருமானங்களையும் ஓரளவுதான் கட்டுப்படுத்த முடியும்.

ஆனாலும் ஒரு அரசு, மக்களின் உணவுப் பாதுகாப்பிற்கு எப்படிப் பொறுப்பேற்கிறதோ அப்படித்தான் விவசாயிகளின் சமுதாயப் பாதுகாப்பிற்கும் பொறுப்பேற்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்படும் இயற்கை பாதிப்புகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல், உள் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய வசதிகளை ஏற்படுத்துதல், விழிப்புணர்வை வளர்த்தல், தகவல் பரிமாற்றங்களை சீர் செய்தல், ஆகியவை அரசின் முக்கியமான கடமையாக கருதப்பட்டாலும் உணவுப் பாதுகாப்பு பயன்பெறும் வரி செலுத்தும் மக்களும் விவசாய உற்பத்தியால் பயன்பெறும் தனியார் துறையும் இந்த நடவடிக்கைகளில் பங்கு பெற வேண்டும். இனிவரும் காலங்களில் விவசாயமும் ஒரு தொழில் முனைவாக வளரும். மற்ற துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் மக்கள் நிலத்தை நம்பி வாழ்வது குறையும். தொழில்நுட்ப முனைப்போடு செயல்படும் நிர்வாக புதிய முயற்சிகள் மூலம் அரசு கண்காணிப்பில் இருக்கும் சில பிரச்சினைகள் களையப்படும். ஒரு விவசாயி சமுதாயத்தில் ஒரு சுமாரான வாழ்க்கையை நடத்துவதற்கு உரிமை பெறும் அதே நேரத்தில் சந்தையில் ஒரு திறமையான பங்காளியாக இருப்பார். ●

# முதிர்ந்த வயதில் வருவாய்ப் பாதுகாப்பு: தேசிய ஓய்வூதிய முறை

- டாக்டர் பத்ரி சிங் பண்டாரி
முழுநேர உறுப்பினர் (பொருளாதாரம்)
பி.எஃப்.ஆர்.டி.ஏ.

ஓய்வூதியம் அல்லது முதிர்ந்த வயதில் வருவாய் என்பது சமூகப் பாதுகாப்பு வலையின் முக்கியமானதொரு உறுப்பாகும். முதிர்ந்த வயதில் ஏழ்மையை போக்குவது அல்லது குறைப்பதற்கான நுணுக்கத்தை அது அளிப்பதுடன் ஓய்வுக்குப் பிறகு வாழ்க்கைத் தரத்தை பராமரிப்பதற்கான வாழ்நாள் நுகர்வை மென்மையாக்குகிறது. ஓய்வூதியம் என்பது சந்தாதாரர்களுக்கு மலிவானதாகவும், நிதி அடிப்படையில் சிறந்ததாகவும் நீடித்திருக்கக்கூடியதாகவும் அனைத்து தொழில் குழுக்கள் மற்றும் வருவாய்ப் பிரிவுகளில் பரவலான உள்ளடக்கம் கொண்டதாகவும் இருக்க வேண்டும். உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் ஓய்வூதிய முறைகள் கடந்த முப்பது ஆண்டுகளில் சீர்திருத்தப்பட்டு அதன் மூலம் அவை நிதி ரீதியாக நீடித்திருக்கக்கூடியதாகவும், அதிகரித்து வரும் மக்கள் தொகை சவால்கள் காரணமாக போதுமானதாக இருக்கும் விவகாரத்தை எதிர்கொள்வது மற்றும் அமைப்பு சாரா / முறைசாரா துறைகளையும் உள்ளடக்குவது ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2. பாரம்பரியமாகவே இந்தியாவில் வயதானவர்களின் வருவாய்ப் பாதுகாப்பு என்பது கூட்டுக் குடும்ப முறையால் அளிக்கப்பட்டு வந்ததுடன் சில ஆண்டுகள் முன்பு வரை அவை பண்புகளில் ஆழமாக மூழ்கியிருந்தது. எனினும் தொழில் சார்ந்த மாற்றங்கள், நகர்மயமாதல் மற்றும் தனிக் குடித்தன முறை அதிகரித்து வருவதால் பாரம்பரியமாக இருந்த குடும்ப ஆதரவு முறை என்பது கொஞ்சம் கொஞ்சமாக நம்மிடமிருந்து விலகிப் போய் விட்டது. மேலும் பிறப்பு மற்றும் இறப்பு விகிதம் ஆகிய இரண்டும் படிப்படியாக சரிந்து வருவது மற்றும் மருத்துவ அறிவியலின் மேம்பாடு காரணமாகவும் வருவாய் உயர்வு காரணமாகவும், உயிர் வாழும் கால எதிர்பார்ப்பு அதிகரித்து கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட மக்கள் ஓய்வுபெற்ற பின்னர் அதிக ஆண்டுகள் வாழ்ந்து வருகின்றனர். அதிகரித்து வரும் மக்கள் தொகை மாற்றங்கள் மற்றும் விளக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதிய முறையின் நிதிச் சுமை ஆகியவை பல நாடுகளில் ஓய்வூதிய சீர்திருத்தங்களுக்கான முக்கிய ஊக்கிகளாக இருந்து வந்துள்ளன.

3. ஓய்வூதியம் அல்லது வருங்கால வைப்பு நிதி அல்லது வயது முதிர்வு நிதி அல்லது ஓய்வுக்குப் பிந்தைய பலன்கள் என்பது முதிர்ந்த வயதில் வருவாய்ப் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் பல பெயர்கள் என்பதுடன் முன்பு அமைப்புசார்ந்த தொழிலாளர்களுக்கு மட்டுமே, அதாவது அரசுப் பணி, பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையில் உள்ள சில பெரிய நிறுவனங்களில் பணியாற்றியவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டு வந்தன. 2004ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஓய்வூதிய சீர்திருத்தத்திற்கு முன்பு இந்திய ஓய்வூதிய நிலப்பரப்பு என்பது கீழ்க்காணும் ஓய்வூதியம்/ வருங்கால வைப்பு நிதி/வயது முதிர்வுத் திட்டங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

(i) வரி மூலம் நிதி அளிக்கப்பட்ட சமூக ஓய்வூதியம் மூலம் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் மற்றும் 60 வயதைக் கடந்தவர்கள், இயலாமை கொண்டவர்கள் அல்லது விதவைகளுக்கு தேசிய சமூக உதவித் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வந்தது.

(ii) மத்திய குடிமைப் பணிகள் ஓய்வூதியத் திட்டம் 1972 என்பது விளக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதிய திட்டமாகும். இது 2004ஆம் ஆண்டுக்கு முன் மத்திய அரசுப் பணியில் இணைந்தவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதே போன்ற திட்டம் மாநில அரசுகள் மற்றும் பல்வேறு பொதுத் துறை நிறுவங்கள்/வங்கிகள்/காப்பீடு நிறுவனங்கள் உள்ளிட்டவைகளில் உள்ளன.

(iii) பொது மற்றும் தனியார் துறையில் அறிவிக்கப்பட்ட 20 அல்லது அத்றகு மேல் பணியாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் ஊழியர் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஊழியர் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றை ஊழியர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் பராமரித்து வருகிறது.

(iv) நிலக்கரிச் சுரங்க பிஎஃப், கடல் பணியாளர்கள் பி.எஃப்., ஆசாம் தேயிலைத் தோட்ட பி.எஃப். உள்ளிட்டவை சட்டபூர்வமான தொழில்சார்ந்த வருங்கால வைப்பு நிதியாகும்.

(v) ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் பரஸ்பர நிதி நிறுவனங்கள் அளிக்கும் வயது முதிர்வு/ ஓய்வூதியத் திட்டங்கள் மற்றும் வங்கிகள், தபால் அலுவலங்கள் மூலம் இந்திய அரசு அளிக்கும் பொது வருங்கால வைப்பு நிதி ஆகியவற்றில் எந்தவொரு தனி நபரும் தானாக முன்வந்து சேரலாம் என்பதுடன், இவற்றில் அவர்களின் பங்களிப்பு நிதிக்கு வருமான வரிக் கழிவுகள் முதன்மையாக அளிக்கப்படுன்றன.

4.இந்தியாவில் ஓய்வூதிய சீர்திருத்ததிற்கான அவசியம் என்பது நிதி ஒதுக்கப்படாத சிவில் சேவை, விளக்கப்பட்ட பயன்கள், நீங்கள் செல்லும் போது செலுத்துங்கள் முறை ஆகியவற்றால் ஒருபுறம் இயக்கப்பட பணியாளர்களின் 84 சதவீதம் பேர் இடம்பெற்றுள்ள பரந்து விரிந்துள்ள அமைப்புசாரா துறையில் இருப்பவர்களுக்கும் வயது முதிர்வு வருவாய் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம் மறுபுறம் இயக்குவதாக அமைந்தது. முதிர்ந்த வயது சமூக மற்றும் வருவாய்ப் பாதுகாப்புக்கான குழுவின் பட்டாச்சார்யா, ரெங்காச்சாரி போன்றவர்கள் உள்ளிட்ட பல்வேறு நிபுணத்துவக் குழுக்கள் நிதி அவசியங்கள் மற்றும் மக்கள் தொகை போக்குகளுக்கு ஏற்ப ஓய்வூதிய முறை ஏற்கப்பட வேண்டும் என அளித்த பரிந்துரைகளின் தொடர்ச்சியாக விளக்கப்பட்ட பயன் நீங்கள் செல்லும்போது செலுத்துங்கள் நிதியற்ற ஓய்வூதிய முறையில் இருந்து மாற இந்தியா முடிவு செய்து, விளக்கப்பட்ட பங்களிப்பு நிதி ஓய்வூதிய முறைக்கு மாற முடிவு செய்தது. முதலில் இது புதிய ஓய்வூதியத் திட்டம் என அழைக்கப்பட்டு பின்னர் தேசிய ஓய்வூதியத் திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தேசிய ஓய்வூதிய முறை என்பது இந்திய ஓய்வூதிய நிதி வரன்முறை மற்றும் வளர்ச்சி ஆணையத்தால் நிர்வகித்து வரன்முறைப்படுத்தப்படும் விளக்கப்பட்ட பங்களிப்பு ஓய்வூதிய முறையாகும். தேசிய ஓய்வூதிய முறை என்பது 2004 ஜனவரி 1ஆம் தேதிக்குப் பின்னர் பணியில் இணைந்த அரசு ஊழியர்களுக்காக (ராணுவம் தவிர) முதலில் கட்டாய முறையில் அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் அந்தந்த மாநிலங்களால் ஏற்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட மாநில அரசு ஊழியர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு பின்னர் 2009 மே 1ஆம் தேதி முதல் தன்னார்வ அடிப்படையில் பொது மற்றும் தனியார் துறைகளில் சுய தொழில் புரியும் நபர்கள் உள்ளிட்டோருக்கும் அறிமுகம் செய்யப்பட்டது. இப்போது 18 முதல் 60 வயது வரை உள்ள அனைத்து இந்தியக் குடிமக்களுக்கும் தேசிய ஓய்வூதிய முறை கிடைக்கிறது. இதன் மூலம் தீவிரமாகப் பணிபுரியும் காலத்தில் தங்களது ஓய்வுக்குப் பின்னர் வருவாய்க்கு முறையான முதலீடுகளைச் செய்யலாம். அரசுப் பணியாளர்களுக்கு தேசிய ஓய்வூதிய முறை கட்டாயம் என்பதுடன் அவர்களது ஊதியத்தில் (அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி சேர்த்து) பிடித்தம் செய்யப்பட்டு அதற்கு இணையான தொகை நிறுவனத்தால் அளிக்கப்பட்டு அது பணியாளரின் நிரந்தர ஓய்வூதியக் கணக்கு எண்ணில் செலுத்தப்பட வேண்டும். தேசிய ஓய்வூதிய முறையில் தானாக முன்வந்து இணையும் நபர்கள் சேரும்போது அவர்கள் கட்டாயமாகக் குறைந்தபட்சம் ஆண்டுக்கு ரூ. 1000 முதலீடு செய்யவேண்டும் என்பதுடன் அவரது வருவாய்க்கு ஏற்ப அதனை அதிகரித்துக் கொள்ளலாம். இதன் மூலம் சேரும் தொகை பி.எஃப்.ஆர்.டி.ஏ. வழிகாட்டுதலின்படி அரசு பத்திரங்கள், நிறுவனப் பங்குகள்/ பங்குச் சந்தைகள் போன்ற நிதிச் சொத்துக்களில் முதலீடுக் செய்யப்படுகிறது. ஓய்வூதிய நிதியைத் தேர்வு செய்து பரவலான முதலீட்டு கலவையை (பங்குகள், பத்திரங்கள்/கடன் பத்திரங்கள் அரசு பத்திரங்கள்) முதலீடு செய்யலாம். அகண்ட சொத்துக்களில் தனி முதலீடு குறித்து ஓய்வூதிய நிதி நிர்வாகிகளே முடிவு செய்யலாம்.

5. தேசிய ஓய்வூதிய முறையில் சந்தாதாரர்களை சேர்ப்பது மற்றும் பதிவு செய்வது, கால அடிப்படையிலான ஓய்வூதிய சந்தாவை வசூலிப்பது, தனிநபர் சந்தாதாரர்களின் ஆவணங்களைப் பராமரிப்பது, சந்தாதாரர்களின் நிதியை இணைத்தல், நிதிச் சந்தையில் அவற்றை முதலீடு செய்வது, அதற்கான ஆவணங்களைப் பராமரிப்பது, கால அடிப்படையிலான ஓய்வூதியம் / ஆண்டுத் தொகைக்கான ஏற்பாடு உள்ளிட்டவற்றை பல்வேறு நிறுவனங்கள்/இடைத்தரகர்களிடம் அளிப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

கட்டுப்பாடற்றக் கட்டமைப்பு உள்ளது. இதற்கான நிறுவனங்கள் அவர்களின் நிபுணத்துவம் மற்றும் துறை அறிவாற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுகிறது. இது அரசு அலுவலகங்களின் தொகுப்பை உள்ளடக்கியதாகும். இந்த அலுவலகங்கள் தேசிய ஓய்வூதிய முறை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை அரசு ஊழியர்கள், வங்கிகள், வங்கியல்லா நிறுவனங்களுக்காக மேற்கொள்வதுடன் இவை தேசிய ஓய்வூதிய முறை கணக்குகளைத் தொடங்கவும் சந்தாதாரர்களிடம் இருந்து அவர்களின் பங்களிப்பை வசூலிக்கவும் என்.ஆர்.எஸ். அறக்கட்டளைக் கணக்கில் அவற்றை வரவு வைக்க டிரஸ்டி வங்கியில் அவற்றை செலுத்துவது போன்ற பணிகளை மேற்கொள்ளவும் அவற்றுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய ஆவணப் பாதுகாப்பு முகமை தனிநபர், சந்தாதாரர்களின் ஆவணங்களைப் பராமரிப்பதுடன் இந்த முறையில் உள்ள பல்வேறு அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பையும் மேற்கொள்கிறது. மத்திய ஆவணப் பாதுகாப்பு முகமை சி.ஆர்.ஏ. தனித்தன்மை கொண்ட நிரந்தர ஓய்வுக் கணக்கு எண்ணை ஒவ்வொரு சந்தாதாரருக்கும் அளித்து, அளிக்கப்பட்ட அனைத்து கணக்கு எண்களின் தகவல்கள் மற்றும் அனைத்து சந்தாதாரர்களின் பரிவர்த்தனைகள் தொடர்பான ஆவணங்களை நிர்வகிக்கிறது. மேலும் என்.பி.எஸ். அறக்கட்டளை மற்றும் இதர என்.பி.எஸ். இடைத்தரகர்களான அரசு அலுவலகங்கள், பி.ஏ.ஓ.க்கள், டி.டி.ஓ.க்கள், பி.ஓ.பி.க்கள், திரட்டிகள், ஓய்வு ஆலோசகர்கள், டிரஸ்டி வங்கி, ஓய்வூதிய நிதிகள், பாதுகாவலர், வருடாந்திர நிதிச் சேவை அளிப்போர் மற்றும் சந்தாதாரர் போன்றவர்களுக்கு இடையே செயல்பாட்டு இணக்கம் உள்ளது. என்.பி.எஸ். குறித்த மையப்படுத்தப்பட்ட ஆவணக் காப்பக முறை இருப்பதால் தனி நபர் ஓய்வூதியக் கணக்கு முற்றிலும் பூகோள இடங்கள் அடிப்படையில், நிபுணத்துவம் மற்றும் வேலை ஆகியவற்றுக்கு இடையே நகர்த்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது. என்.பி.எஸ். அதிக அளவு தொழில்நுட்பத்தால் இயக்கப்படுவதால் தகவல் மற்றும் நிதி மின்னணு முறையில் பரிமாற்றப்படுவதால் விரைவு, துல்லியம் மற்றும் திறன் உறுதி செய்யப்படுகிறது. பி.எஃப். ஆர்.டி.ஏ.வில் பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய நிதிகள் சந்தாதாரர்களின் ஓய்வூதியத் தொகுப்பை பி.எஃப். ஆர்.டி.ஏ. வகுத்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் சந்தாதாரர்களின் நலனுக்கான முதலீட்டு வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்வகிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

6. அரசுத் துறையில் உள்ள நபர் என்.பி.எஸ்› கணக்கு ஒன்றை தங்களது பெறும் மற்றும் விநியோகிக்கும் அதிகாரி அல்லது செலுத்தும் மற்றும் கணக்கு அதிகாரியின் மூலம் தொடங்கலாம். நிறுவனத் துறை அல்லது அமைப்பு சாரா துறையில் இருப்பவர்கள் நாடு முழுவதும் 60 ஆயிரம் அலுவலகங்களைக் கொண்ட பொது மற்றும் தனியார் துறை வங்கிகள், அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் சில வங்கியில்லா நிதி நிறுவனங்கள் கொண்ட பி.ஓ.பி.க்கள் மூலம் அதற்கான விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் என்பதற்குத் தேவைப்படும் அடையாள மற்றும் முகவரி ஆவணங்களை அளித்து கணக்குகளைத் தொடங்கலாம். சில பி.ஓ.பி.க்களுக்கு வெளிநாடுகளில் கிளை அலுவலங்கள் அல்லது பிரதிநிதி அலுவலகங்களும் உள்ளன. www.pfrda.org.in <http:// www.pfrda.org.in> மற்றும் www.npscra.nsdl.co.in <http:// www.npscra.nsdl.co.in> இணையதளத்தில் பி.ஓ.பி.க்களின் விரிவான பட்டியல் உள்ளது. என்.பி.எஸ். டிரஸ்ட் இணையதளமான www.npstrust. org.in?? <http://www.npstrust.org.in?ல் உள்ள என்.பி.எஸ். தளத்தின் மூலமாகவும் ஒருவர் என்.பி.எஸ். கணக்கை ஆன்லைனில் தொடங்கலாம். இஎன்.பி.எஸ். மூலமாக ஒருவர் தனது ஆதார் அல்லது நிரந்தரக் கணக்கு எண் மற்றும் வங்கிக் கணக்கு ஆகியவற்றை உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் ஆவணங்களாக பயன்படுத்தி என்.பி.எஸ்› கணக்கை ஆன்லைனில் தொடங்கலாம். சில பி.ஓ.பிக்கள் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது இணையதளத்தில் அளிக்கும் ஆன்லைன் பதிவு வசதிக்கு கூடுதலாக அளிக்கப்படுகிறது. என்.பி.எஸ்.சில் இணைந்த பிறகு சந்தாதாரருக்கு நிரந்தர ஓய்வுக் கணக்கு எண் பெற்று அதில் அவரது அனைத்து பங்களிப்புகளும் வரவு வைக்கப்படுவதுடன் இது அனைத்து பகுதிகள் மற்றும் வேலைகளுக்கும் கிடைக்கிறது. இது தொழில்நுட்பத்தால் இயக்கப்படுகிறது என்பதால் சந்தாதாரர்கள் தங்கள் கணக்கை என்.பி.எஸ். மொபைல் செயலி உட்பட ஆன்லைனில் பார்க்கலாம்.

7.மத்திய அரசு ஊழியர்களுக்கு என்.பி.எஸ்.ஐ நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசின் நிதி அமைச்சகம் 2003 டிசம்பர் மாதம் அறிவிக்கை ஒன்றை வெளியிட்டது. இதன் நடைமுறைக்காக தலைமைக் கணக்குக் கட்டுபாட்டாளர் 2004 ஜனவரி மாதம் ஓ.எம். ஒன்றை வெளியிட்டார். 2004 ஜனவரி முதல் 2008 மார்ச் வரை பணியாளர்களின் என்.பி.எஸ்› பங்களிப்புகள் பொதுக் கணக்கில் வைக்கப்பட்டு மத்திய ஓய்வூதியக் கணக்கு அலுவலகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. முதலில் அரசு கூறிய முதலீட்டு வழிகாட்டுதலின்படி சந்தையில் முதலீடு செய்வதற்காக 2008 மார்ச் மாதம் இந்த நிதி பி.எஃப்.ஆர்.டி.ஏ. நியமித்த டிரஸ்டி வங்கிகளில் செலுத்தப்பட்டது. டிரஸ்டி வங்கியில் செலுத்தப்படும் வரை இந்த நிதிக்கு அரசு ஆண்டுக்கு 8 சதவீத வட்டியை அளித்தது. செலவினத் துறையின் தலைமைக் கணக்கு கட்டுபாட்டு அலுவலகம், மத்திய ஆவணக் காப்பக முகமை மற்றும் டிரஸ்டி வங்கிகளிடம் என்.பி.எஸ். பங்களிப்புகளைத் தயாரித்து, பதிவேற்றி செலுத்துவதற்கான நடைமுறைகள் மற்றும் காலக்கெடுவை 2008 செப்டம்பர் மாதம் வெளியிட்டது. இதே போல் அகில இந்திய சேவை அதிகாரிகளுக்கு பணியாளர் அமைச்சக வழிகாட்டுதல்கள் அனைத்து மாநிலங்களின் தலைமைச் செயலர்களுக்கும் 2008 செப்டம்பர் மாதம் அனுப்பியது.

8. அடுக்கு 1 மற்றும் அடுக்கு 2 என இரண்டு விதமான கணக்குகளை என்.பி.எஸ். அளிக்கிறது. அடுக்கு 1 கணக்கு என்பது கட்டாயமாகத் தொடங்கப்பட வேண்டிய ஓய்வூதியக் கணக்காகும், அடுக்கு 2 கணக்கு என்பது விருப்பப்பட்டால் தொடங்கும் முதலீட்டுக் கணக்காகும். அடுக்கு 1 கணக்கில் இருந்து சந்தாதாரர் தமது பங்களிப்பில் இருந்து 25 சதவீதத்தை குழந்தைகளின் உயர்கல்வி அல்லது திருமணம், வீடு வாங்க / கட்ட மற்றும் தனது, கணவன்/மனைவி, குழந்தைகள் அல்லது தன்னை சார்ந்திருக்கும் பெற்றோரின் மருத்துவ செலவுகளுக்காக திரும்பப் பெறலாம். எதிர்பாரா விபத்துக்கள் அல்லது வாழ்வை அச்சுறுத்தும் நோய்கள் ஏற்பட்டாலோ கூட பகுதிப் பணத்தை திரும்பப் பெறலாம். கணக்கு வைத்திருக்கும் காலத்தில் அதிகப்பட்சமாக 3 முறை பணத்தை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. என்.பி.எஸ். கணக்கு தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து மூன்றாண்டுகள் கழித்து முதல் தடவை எடுக்கலாம். அடுக்கு 1 கணக்கில் இருந்து எடுக்கப்படும் ரொக்கத்திற்கு முழுமையான வரி விலக்கு உண்டு. தானாக முன்வந்து சேமிப்பதற்கான அடுக்கு 2 கணக்குகள் பங்களிப்பை செலுத்துவதற்கும் ரொக்கத்தை எடுப்பதற்குமான இணக்கத்தை அளிக்கிறது. எனினும் அடுக்கு 2 கணக்குகளில் செலுத்தப்படும் பங்களிப்புகள் மற்றும் எடுக்கப்படும் ரொக்கத்திற்கான வரிக் கழிவுகள் கிடையாது.

9. வயது முதிர்வு அடையும் போது அல்லது 60 வயதை அடையும் போது, சந்தாதாரர் தனது நிரந்தர ஓய்வுக் கணக்கு எண்ணில் குறைந்தபட்சம் 40%த்தை ஓய்வூதியமாக மாதந்தோறும் பெறவும், எஞ்சிய 60% தொகையை ஒரே முறையில் பெறலாம். ஒரே முறையில் பெறப்படும் தொகையில் 40% தொகைக்கு வரி விலக்கு அளிக்கப்படும். ஓய்வூதியமாக பெறும் தொகைக்கு வரி விலக்கு உண்டு. 60 வயதை எட்டும் முன் இதிலிருந்து விலகினால் சேர்ந்துள்ள இருப்பில் குறைந்தபட்சம் 80 சதவீதத்தை வருடாந்திரப் பயன்கள் கிடைக்கும் வகையில் முதலீடு செய்ய வேண்டும் என்பதுடன் எஞ்சிய 20 சதவீதத்தை ஒரே முறையில் பெறலாம். இந்தக் கணக்கு முதிர்வை எட்டும் முன் அல்லது சந்தாதாரர் 60 வயதை அடையும் முன் இறக்க நேரிட்டால், அவரால் நியமிக்கப்பட்டவர், கணக்கில் உள்ள இருப்பு அனைத்தையும் ஒரே நேரத்தில் வரி இன்றி பெறலாம். சந்தையின் நிலையைப் பொறுத்து அதாவது உரிய நேரத்தில் சந்தாதாரர் தனது என்.பி.எஸ். நிதிப் பத்திரங்களை 70 வயதுக்குள் விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம். அவர் 60 வயதை அடையும் அல்லது கணக்கின் முதிர்வுக்கு பின் அதிகபட்சமாக மூன்று ஆண்டுகளுக்குள் இது செய்யப்பட வேண்டும். இந்த ஒத்திவைப்புக் காலக்கட்டத்தின் போது ஒருவர் விரும்பினால் அந்தக் கணக்கில் தொடர்ந்து தனது பங்களிப்பையும் செலுத்தலாம்.

**என்.ஆர்.ஐ.களுக்கான என்.பி.எஸ்.**

10. வெளிநாடு வாழ் இந்தியர்கள் தங்களது பயன்களை இந்தியாவிலேயே கிடைக்கும் வகையிலும், வெளிநாடுகளில் கிடைக்கும் வகையிலும் என்.பி.எஸ். கணக்குகள் தொடங்கி தங்களது பங்களிப்பை என்.ஆர்.இ./எஃப்.சி.என்.ஆர்./என்.ஆர்.ஓ.

கணக்குகளின் மூலம் செலுத்தலாம். பயன்கள் வெளிநாட்டிலேயே கிடைக்கும் வகையில் என்.பி.எஸ். கணக்கு தொடங்கப்பட்டால், முதிர்வின் போது அல்லது ஒரு பகுதி திரும்பப்பெறும் போது என்.பி.எஸ். நிதி அவர்களது என்.ஆர்.ஓ. கணக்கில் மட்டுமே முதலீடு செய்யப்படும். என்.பி.எஸ். கணக்கை தனிநபர் பெயரில் மட்டுமே தொடங்கலாம் என்பதுடன் அங்கீகாரம் பெற்ற நபரின் கீழ் (பவர் ஆஃப் அடார்னி) இயக்க முடியாது. பி.ஓ.பி. சேவை அளிப்பவரின் மூலம் வெளிநாட்டில் கணக்கு தொடங்கப்பட்டால் தொடக்கத்தின் போது குறைந்தபட்ச பங்களிப்பு முதல் அடுக்கு கணக்கிற்கு ரூ. 6000 மற்றும் இரண்டாம் அடுக்கு கணக்கிற்உ ரூ. 2000 ஆக இருக்க வேண்டும். தொடர்ச்சியான பங்களிப்புகளை சந்தாதாரரின் வசதிக்கு ஏற்ப வருடாந்திர அடிப்படையில் அல்லது குறுகிய இடைவெளிகளில் அளிக்கலாம். சந்தாதாரர் பதிவுக்கான பி.ஓ.பி. சேவைக் கட்டணங்கள் 8 அமெரிக்க டாலர் அல்லது அதற்கு இணையான உள்ளூர் நாணயம் மற்றும் கணக்கு தொடங்குவதற்கான மற்றும் தொடர்ச்சியான பங்களிப்புகள் செலுத்துவதற்கான கட்டணங்கள் குறைந்தபட்சம் 1 அமெரிக்க டாலர் அல்லது அதற்கு இணையான உள்ளூர் நாணயம் மற்றும் அதிகபட்ச கட்டணம் 8 அமெரிக்க டாலர் அல்லது அதற்கு இணையான உள்ளூர் நாணயமாக இருக்கும். அனைத்து நிதி அல்லாத பரிவர்த்தனைகளுக்கான கட்டணம் 1 அமெரிக்க டாலர் அல்லது அதற்கு நிகரான உள்ளூர் நாணயமாக இருக்கும். இந்தக் கணக்குகள் இந்தியாவில் தொடங்கப்பட்டால் அடுக்குக் கணக்கிறகு குறைந்தபட்ச தொடக்க மற்றும் வருடாந்திர பங்களிப்புகள் முறையே ரூ. 500 மற்றும் ரூ. 1000 ஆக இருக்கும். இந்தியாவிலேயே தொடங்கப்பட்டு சேவை அளிக்கப்படும் கணக்குகளுக்கு கணக்கு தொடங்கும் மற்றும் பங்களிப்புக் கட்டணம் இந்தியர்களுக்கு விதிக்கப்படுவதற்கு இணையாகவே இருக்கும், அதாவது, ரூ. 125 மற்றும் பங்களிப்புத் தொகையின் 0.25% குறைந்தபட்சம் ரூ. 20 மற்றும் அதிகபட்சமாக ரூ. 25,000 ஆக இருக்கும். நிதி அல்லாத பரிவர்த்தனைகள் அனைத்திற்கும் ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் தலா ரூ. 20 வசூலிக்கப்படும்.

### என்.பி.எஸ். கீழான வரிப் பயன்கள்

11. என்.பி.எஸ்.க்கான பணியாளரின் பங்களிப்பான ஊதியத்தில் (அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி) 10% வரையிலான தொகைக்கு வருமான வரிச் சட்டம் 80சி.சி.டி.(1) பிரிவின் கீழ் கழிவு அளிக்கப்படுகிறது, பிரிவு 80சி.சி.இ.யின் கீழ் இதற்கான உச்சவரம்பு ரூ. 1,50,000 ஆகும். நிறுவனத்தின் பங்களிப்பாகக் கிடைக்கும் அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10% வரையிலான 10%த்திற்கும் வருமான வரிச் சட்டம் 80சி.சி.டி.(2)ன் கீழ் உச்சவரம்பு எதுவும் இன்றியும் வருமான வரிக் கழிவு கிடைக்கும். மேலும் என்.பி.எஸ்.சிற்கு அளிக்கப்படும் தொகையானது முதலீடு செய்யப்படும் போது அதற்கும் வருமான வரிச் சட்டம் 80சி.சி.டி.(1பி)யின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ரூ. 1,20,000த்திற்கு மேல் ரூ. 50,000 வரையிலான தொகைக்கு கூடுதலாக வருமான வரிக் கழிவு கிடைக்கும். எனவே ரூ. 2 இலட்சம் வரையிலான முதலீடுகளுக்கு மொத்தமாக வருமான வரிக் கழிவு கிடைக்கும். இதுதவிர பணியாளராக இருக்கும் தனிநபர் மற்றும் சுயதொழில் செய்யும் தனிநபர் இடையே வேறுபாட்டை அளிக்கும் வகையில் பணியாளர்களுக்கு 10% ஆக உள்ள கழிவு சுயதொழில் புரிபவர்களுக்கு 20% ஆக இருக்கும் என்று நிதிச் சட்டம் 2017 கூறுகிறது. நிறுவனங்களும் பணியாளர்களின் அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10% பங்களிப்பை அளிக்கும் போது அதனை வர்த்தக செலவுக் கணக்கில் காட்டி வருமான வரி சட்டப் பிரிவு 80(1) (வீஸ்)(ஏ)வின் கீழ் வருமான வரிக் கழிவு பெறலாம்.

### என்.பி.எஸ். கீழான கட்டணங்கள்

12. தேசிய ஓய்வூதிய முறையில் முதலீடு செய்வதற்கான செலவுகள், கணக்கு தொடங்குதல் மற்றும் பி.ஓ.பி.களின் செலுத்தும் கட்டணங்கள், சி.ஆர்.ஏ.வின் கணக்கு பராமரிப்பு மற்றும் பரிவர்த்தனைக் கட்டணங்கள், ஓய்வூதிய நிதிகளின் முதலீட்டு நிர்வாகக் கட்டணம், பாதுகாவலரின் சொத்து நிர்வாகக் கட்டணங்கள் மற்றும் என்.பி.எஸ்.சின் சேவைக் கட்டணங்கள் ஆகிய அனைத்தையும் சேர்த்து நிர்வாகத்தில் உள்ள சொத்துக்களின் மதிப்பில் 0.5%க்கும் குறைவாக இருக்கும். இது காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும்

பரஸ்பர நிதி நிறுவனங்களின் கட்டணங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாகும்.

### என்.பி.எஸ். கீழ் முதலீட்டு நிர்வாகம் மற்றும் சீர்திருத்தங்கள்

13. அரசுத் துறை சந்தாதாரர்களுக்கு முதலீட்டு முறை: அரசுப் பணியாளர்களின் என்.பி.எஸ்› பங்களிப்பு தற்போது எஸ்.பி.ஐ. பென்ஷன் ஃபண்ட்ஸ், யு.டி.ஐ. ரிடையர்மெண்ட் சொல்யூஷன்ஸ் மற்றும் எல்.ஐ.சி. பென்ஷன் ஃபண்ட் ஆகிய மூன்று ஓய்வூதிய நிதித் திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. முந்தைய ஆண்டில் அவற்றின் செயல்திறன் விகிதத்திலும் பி.எஃப்.ஆர்.டி.ஏ. விதித்த முதலீட்டு வழிகாட்டுதல்களின் படியும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து வகைகள் மற்றும் விகிதாச்சாரங்களில் முதலீடு செய்யப்படுகிறது:

அ) 50% வரை அரசு பத்திரங்கள் மற்றும் அது தொடர்பான திட்டங்கள்

ஆ) 45% வரை கடன் பத்திரங்கள் மற்றும் அது தொடர்பான திட்டங்கள்

இ) 15% வரை சம பங்குகள் மற்றும் அது தொடர்பான திட்டங்கள்

ஈ) 5% வரை குறுகிய கால கடன் பத்திரங்கள் மற்றும் அது தொடர்பான திட்டங்கள் மற்றும்

உ) 5% வரை சொத்துப் பின்னணி, நம்பிக்கை கட்டமைப்பு கொண்ட மற்றும் இதர முதலீடுகள்

14. அரசு ஊழியர்கள் தவிர்த்த சந்தாதாரர்கள் ஹெச்.டி.எஃப்.சி. பென்ஷன் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ புருடென்ஷியல் பென்ஷன் ஃபண்ட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட், கோடக் மஹிந்திரா பென்ஷன் ஃபண்ட் லிமிடெட், எல்.ஐ.சி. பென்ஷன் ஃபண்ட் லிமிடெட், ரிலையன்ஸ் கேபிடல் பென்ஷன் ஃபண்ட் லிமிடெட், எஸ்.பி.ஐ. பென்ஷன் ஃபண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் யுடிஐ ரிடையர்மெண்ட் சொல்யூஷன்ஸ் லிமிடெட் மற்றும் பிர்லா சன்லைஃப் பென்ஷன் மேனேஜ்மெண்ட் லிமிடெட் ஆகிய எட்டு ஓய்வூதிய நிதிகளில் இருந்து ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம். மேலும் சந்தாதாரர்கள் தங்களது நிதியை முதலீடு செய்வதற்கான முறையையும் தேர்வு செய்யலாம். சம பங்குகள், அரசுப் பத்திரங்கள் மற்றும் நிறுவனப் பத்திரங்கள் என கூட்டு போர்ட்ஃபோலியோவில் முதலீடு செய்யலாம், என்றபோதிலும் பங்குச் சந்தையில் 50% வரை மட்டுமே முதலீடு செய்யலாம். ஆனால் அரசுப் பத்திரங்கள், நிறுவனப் பத்திரங்கள் மற்றும் கடன் பத்திரங்களில் தலா 100% வரை முதலீடு செய்யலாம். மாற்றாக சந்தாதாரர் வாழ்க்கை சுழற்சி நிதியைத் தேர்வு செய்யலாம். இதில் பரவலான சொத்து வகைகள் சந்தாதாரரின் வயதைப் பொறுத்து உறுதி செய்யப்படும். 35 வயது வரை அதிகபட்சமாக வாழ்க்கை சுழற்சியில் 25% அல்லது நடுத்தர வாழ்க்கைச் சுழற்சி நிதி அல்லது தீவிர வாழ்க்கை சுழற்சி நிதி உறுதி செய்யப்படும்.

15. 2017 ஜூன் 3ம் தேதியின்படி என்.பி.எஸ். கீழ் 10.7 மில்லியன் சந்தாதாரர்கள் ரூ. 142,263/- கோடி பங்களிப்பைச் செலுத்தி இருப்பதுடன் அதன் நிர்வாகத்தில் ரூ. 184,948/- கோடி உள்ளது. மொத்த சந்தாதாரர்களில் அரசு ஊழியர்களின் எண்ணிக்கை 43% ஆகவும் ஏ.யு.எம்.மில் 88% ஆகவும் உள்ளது. அடல் ஓய்வூதிய திட்டத்தின் சந்தாதாரர்கள், பங்களிப்பு மற்றும் ஏ.யு.எம். ஆகியவையும் சேர்த்துக் கொள்ளப்பட்டால், 16.1 மில்லியன் சந்தாதாரர்கள், ரூ. 144,340 கோடி பங்களிப்பு மற்றும் ரூ. 187,151 கோடி ஏ.யு.எம். இருக்கும். துறைவாரியான விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை: என்.பி.எஸ். சந்தாதாரர்கள், பங்களிப்பு மற்றும் ஏ.யு.எம்.**

| துறை | சந்தாதாரர் எண்ணிக்கை | | மொத்த நிதி | | நிர்வாகத்தில் உள்ள மொத்த சொத்து | |
|---|---|---|---|---|---|---|
| | துல்லியமான எண்ணிக்கை | (%) | ரூ. கோடியில் | (%) | ரூ. கோடியில் | (%) |
| மத்திய அரசு | 1,819,457 | 17.0 | 51,332 | 36.1 | 70,965 | 38.4 |
| மாநில அரசு | 3,412,486 | 31.8 | 72,331 | 50.8 | 91,595 | 49.5 |
| மொத்தம் | 5,231,943 | 48.8 | 123,663 | 86.9 | 162,561 | 87.9 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிறுவனங்கள் | 608,434 | 5.7 | 12,950 | 9.1 | 16,091 | 8.7 |
| அமைப்புசாரா | 460,468 | 4.3 | 3,387 | 2.4 | 3,520 | 1.9 |
| சார் மொத்தம் | 1,068,902 | 10.0 | 16,337 | 11.5 | 19,610 | 10.6 |
| என்.பி.எஸ். லைட் | 4,424,806 | 41.3 | 2,263 | 1.6 | 2,777 | 1.5 |
| மொத்தம் | 10,725,651 | 100.0 | 142,263 | 100.0 | 184,948 | 100.0 |
| ஏ.பி.ஒய் | 5,372,618 | | 2,077 | | 2,203 | |
| முழு மொத்தம் | 16,098,269 | | 144,340 | | 187,151 | |

16. என்.பி.எஸ். போர்ட்ஃபோலியா சொத்துக்கள், வகைகள் மற்றும் பத்திரங்களில் சிறப்பான முறையில் பரவலாக்கப்பட்டுள்ளது. தற்போது என்.பி.எஸ். போர்ட்ஃபோலியோவில் 13.5% சம பங்குகளிலும்இ 48% அரசுப் பத்திரங்களிலும் 35.5% நிறுவன பத்திரங்களிலும் எஞ்சியவை குறுகிய காலரொக்க சந்தைத் கருவிகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் நிறுவனப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளவற்றில் 98% கூடுதல் தரப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன

17. வருடாந்திர சராசரிப் பயன்கள் (கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம்) மத்திய மற்றும் மாநில அரசுகளில் தொடங்கப்பட்டது முதல் 2017 ஏப்ரல் வரை 10%க்கும் கூடுதலாக உள்ளது. திட்ட வாரியான மற்றும் ஒய்வூதிய நிதி வாரியான விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: திட்டங்கள் தொடங்கப்பட்டது முதல் திட்ட வாரியான மற்றும் ஓய்வூதிய நிதி வாரியான கணக்குகள்**

| ஓய்வூதிய நிதிகள் | | எஸ்.பி.ஐ. | யு.டி.ஐ. | எல்.ஐ.சி. | கோடக் | ரிலையன்ஸ் | ஐசிஐசிஐ | ஹெச்.டி.எஃப்.சி. |
|---|---|---|---|---|---|---|---|---|
| மத்திய அரசு | | 10.43 | 10.06 | 10.13 | | | | |
| மாநில அரசு | | 10.04 | 10.11 | 10.23 | | | | |
| நிறுவனம் - ம.அ. | | 10.61 | | 10.79 | | | | |
| அடுக்கு I | E | 9.69 | 11.81 | 13.89 | 10.94 | 11.01 | 11.84 | 16.80 |
| | C | 11.14 | 9.79 | 11.61 | 11.06 | 9.67 | 11.11 | 11.65 |
| | G | 10.06 | 8.75 | 12.44 | 8.96 | 8.63 | 9.03 | 11.04 |
| அடுக்கு II | E | 9.33 | 9.64 | 8.91 | 10.08 | 9.59 | 9.31 | 12.31 |
| | C | 10.80 | 9.99 | 9.94 | 9.80 | 9.44 | 11.04 | 9.90 |
| | G | 10.29 | 9.86 | 12.63 | 8.82 | 8.95 | 9.20 | 11.65 |
| என்.பி.எஸ். ஸ்வாவலம்பன் | | 11.10 | 10.96 | 10.92 | 11.18 | | | |

Source: www.npst.org.in

மத்திய அரசு: 1-ஏப்-08
மாநில அரசு: 25-ஜூன்-09
ஸ்வாவலம்பன்: (எஸ்பிஐ, எல்.ஐஎல்சி., யுடிஐ,): 4அக் 10, (கோடக் பிஎஃப்): 31-ஜன-12
நிறுவனம் (மத்திய அரசு வகை): 5-நவ-12
திட்டம் - [E, C, G] (அடுக்கு-I) - (எஸ்.பி.ஐ. யுடிஐ. ஐசிஐசிஐ, ரிலையன்ஸ், கோடக்): 1-மே-09, (எல்.ஐ.சி.): 23ஜூலை13, (ஹெச்டிஎஃப்சி பிஎஃப்): 1-ஆக-13
திட்டம் - [E, C, G] (அடுக்கு-II) (எஸ்பிஐ, யுடிஐ, ஐசிஐசிஐ, ரிலையன்ஸ், கோடக்): 14-டிச-09, (எல்.ஐ.சி.): 12ஆக13, (ஹெச்டிஎஃப்சி பிஎஃப்): 1-ஆக-13

18. இதன்படி வரித் திறன் மற்றும் ரூ. 50,000 பிரத்யேக வருமான வரிக் கழிவு ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு எளிமையான கட்டமைப்பு, வெளிப்படைத்தன்மை, இடங்கள் மற்றும் வேலைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளும் வசதி, ஓய்வூதிய நிதி மற்றும் முதலீட்டு முறைகளை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு, குறைந்த நிர்வாகச் செலவுகள் மற்றும் கவர்ச்சியான பலன்கள் தேசிய ஓய்வூதிய முறையை சந்தாதாரர்களுக்கான ஒரு விரும்பத்தக்க ஒய்வு வாகனமாக ஆக்கியுள்ளது.

●

# சமூகப்பாதுகாப்பில் பன்னாட்டு நடைமுறைகளும் இந்தியா முன்னெடுத்துச் செல்லவேண்டிய பாதையும்

- சந்திரகாந்த் லஹாரியா

புதுதில்லியில் இயங்கிவரும் உலக சுகாதார நிறுவனத்தில் தேசிய தொழில்முறை அலுவலர்

**அறிமுகம்:**

சமூகப்பாதுகாப்பு என்ற சொல் சூழல்களுக்கு ஏற்ப சமூகப்பாதுகாப்பு, சமூக நலம் போன்ற இன்னும் சில ஒத்த கருத்துகளோடு இடைப்பரிமாற்றம் செய்து பயன்படுத்தப்படுகிறது. இருந்தபோதிலும், சமூகப்பாதுகாப்பு என்பது பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொல்லாட்சியாக இருக்கிறது. மனித உரிமைகள் பற்றி உலகளாவிய உறுதி ஆவணத்தின் 22ஆவது பிரிவில் (ஐக்கிய நாடுகள் பொது அவைத்தீர்மானம் 21A, 1948) சமூகப்பாதுகாப்புக்கான கருத்து பொதிந்துள்ளது. இந்தப்பிரிவு சமூகத்தின் அங்கத்தினராக இருக்கும் ஒவ்வொருவரும் சமூகப்பாதுகாப்பிற்கான உரிமை உடையவர்கள். தேசிய முயற்சியினாலும், பன்னாட்டு ஒத்துழைப்புடனும் அந்தந்த தேசத்தின் பொருளாதார, சமுதாய, பண்பாட்டு வளங்கள் போன்றவற்றின் அமைப்பொழுங்கிற்கு ஏற்ற வகையில் ஒவ்வொருவரின் கௌரவம், சுதந்திரமான ஆளுமை வளர்ச்சி ஆகியவற்றிற்கு இன்றியமையாத தேவைகளாக இருக்கும் சமூகப்பாதுகாப்பை அடைவதற்கு உரிமை உடையவர்கள் ஆகின்றனர். இந்த உறுதி ஆவணத்தின் 23 வது பிரிவு 'வேலை செய்யக்கூடிய ஒவ்வொருவரும் தேவை ஏற்படும் பட்சத்தில் மற்ற வகையிலான சமூகப்பாதுகாப்பையும் கூடவே பெறவேண்டும்' என்று தெரிவிக்கிறது. உலகளாவிய மனித உரிமை உறுதி ஆவணத்தின் 22வது பிரிவு சமூகப்பாதுகாப்பிற்கான உள்ளார்ந்த ஆதாரமாக சர்வதேச அளவில் திகழ்கிறது.

**சமூகப்பாதுகாப்பின் பரிணாம வளர்ச்சி:**

அனைத்து நாகரிகங்களிலும், சமூகங்களிலும் பழங்காலத்திலும், இடைக்காலத்திலும் இருந்த பேரரசர்கள், அரசர்கள் போன்றோரின் இரக்கம் கொண்ட அணுகுமுறை பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பதிவுகளை ஏற்படுத்தி வைத்துள்ளனர். இருந்தபோதிலும், இந்த சிந்தனையின் நவீன பரிணாம வளர்ச்சி 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தொடங்குகிறது. சமூகப்பாதுகாப்புச் செயல்பாடுகளுக்கு ஜெர்மானிய தேசம் தான் முன்னோடியாகக் கருதப்படுகிறது. அதிபர் ஒட்டோவன் பிஸ்மார்க் தலைமையில் அந்த தேசம் இருந்தபோது, அங்கு தொடர்ச்சியான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிலாளர் இழப்பீட்டுத்திட்டம் (1884), நோயுற்றோர் காப்புறுதித்திட்டம் (1888), சமூகக்காப்புறுதித்திட்டம் (1989) போன்றவை கொண்டுவரப்பட்டன. 20ஆம் நூற்றாண்டு வாக்கில், ஜெர்மானியர்கள் விரிவான சமூகப்பாதுகாப்பு முறை ஒன்றைக் கொண்டிருந்தனர்.

அதை ஒட்டிய காலகட்டத்தில் 1897இல் இங்கிலாந்தில் தொழிலாளர் இழப்பீடு சட்டமும், 1911இல் தேசிய காப்பீட்டு சட்டமும் இயற்றப்பட்டன. இரண்டாம் உலகப்போருக்குப்பிறகு இங்கிலாந்து அரசாங்கம் ஒருங்கிணைந்த முதலாவது சமூகப்பாதுகாப்பு வழிமுறையை உருவாக்கியது. இத்தகைய சீர்திருத்தங்களுக்கான பெருமை பிரிட்டிஷ் பொருளியலாளரும், முற்போக்காளரும், சமூக சீர்திருத்தருக்காரருமான வில்லியம் ஹென்றி பெவரிட்ஜ் என்பவரையே சாரும். அரசுக்கு இவர் சமர்ப்பித்த திட்டம் பெவரிட்ஜ் திட்டம் என்று அறியப்படுகிறது. இந்தத்திட்டத்தின் அடிப்படையில் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட தேசிய சுகாதாரத்திட்டம் நவீன கால நலச்சேவைகளுக்கு ஒரு முன் மாதிரியாகக் கருதப்படுகிறது.

1900க்கும் 1920க்கும் இடையில், அமெரிக்காவில் முதியோர் ஓய்வூதியம் என்ற சிந்தனையிலிருந்து பொருளாதாரப்பாதுகாப்பு என்ற சிந்தனையும், இறுதியில் சமூகப்பாதுகாப்பு (சமூகக்காப்பீட்டுடன் கூடிய பொருளியல் பாதுகாப்பு) என்ற சிந்தனையும் பரிணாம வளர்ச்சி பெற்றன. சமூகப்பாதுகாப்பு சட்டத்தை அதிபர் ஃப்ரங்க்ளின் ரூஸ்வெல்ட் தலைமையிலான ஆட்சியில் 1935இல் அமெரிக்கா இயற்றியது. 1943இல் ஒருங்கிணைந்த தேசிய சமூகக்காப்பீட்டு வழிமுறைகள் உருவாவதற்கு இது வழி வகை செய்தது

இந்த ஆண்டுகளை ஒட்டி, பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO), அமெரிக்க ஐக்கிய நாடுகள் அமைப்பு (UN) ஆகியவை வலுவாகவும், தொடர்ந்தும் சமூகப்பாதுகாப்பிற்கான பல்வேறு பன்னாட்டு சட்டங்களையும், மாநாடுகளையும் ஆதரித்தும் ஏற்பளித்தும் வந்தன. 1944ஆம் ஆண்டின் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் பிரகடனம் சமூகப்பாதுகாப்பு நிறுவனங்களுக்கு இடையில் சர்வதேச அளவிலும், தேச

அளவிலுமான அறிவுப்பரிமாற்றம், திறன்மிகுந்த செயல்பாடுகள், ஒத்துழைப்பு ஆகியவற்றை வலியுறுத்தியது. சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகளை தேசங்கள் ஏற்றுக்கொண்டு ஆதரிக்கவும், தேவைப்படும் அனைவருக்கும் அடிப்படையான வருவாயை வழங்கவும், விரிவான மருத்துவ சேவையை வழங்கவும் ஆதரவுக்கரம் நீட்டுவது என இந்தப் பிரகடனம் தெரிவித்தது. 1952இல் ILO சமூகப்பாதுகாப்பு (குறைந்தபட்சதரம்) மாநாடு (n.r.102) நடத்தியது. சமூகப்பாதுகாப்பில் இடம் பெறவேண்டியவை பற்றி இதில் பட்டியலிடப்பட்டது. (பார்க்க: பெட்டிச்செய்தி 1). ILO அமைப்பின் சமூகப்பாதுகாப்பு மாநாடுகள் அனைத்திற்கும் முன்னோடியான மாநாடகும் இது. அடிப்படையான சமூகப்பாதுகாப்புக் கொள்கைகளின் மீது உருவான ஒரே செயற்கருவி இதுவாகும். உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூகப்பாதுகாப்பிற்கான குறைந்தபட்ச தரத்தை இது நிறுவியது.

**பெட்டிச் செய்தி 1**

- பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவன மானாடு 1952இன் படி சமூகப் பாதுகாப்பு சார்ந்துள்ள விஷயங்கள்:
- முதியோர் ஓய்வூதியம், வரையறுக்கப்பட்ட வயதுக்கும் அப்பால் உயிர் வாழ்வோருக்கும் உதவுவதாக அமைய வேண்டும்.
- உயிர் பிழைத்திருப்போருக்கான ஆதாயம்: பொருள் ஈட்டுபவர் இறந்துபோவதன் காரணமாக ஆதரவை இழக்கும் விதவையர், குழந்தைகளாகி யோருக்கானது.
- மருத்துவ விடுப்பு ஆதாயம்: நோயுற்று வேலை செய்ய இயலாமல் போவதால் வருவாய் நின்று போதல்.
- வேலையினால் ஏற்படும் காயங்கள்: மருத்துவத்திற்கு ஆகும் செலவும், இழப்புகளும், மருத்துவ விடுப்பு, பொருள் ஈட்டுபபவர் விபத்தினாலோ நோயின் காரணமாகவோ உடல் இயலாமை, இறப்பு ஆகியவற்றிற்கு உள்ளாதல்
- குறைபாடுகளுக்கு அனுகூலங்கள்: பொருளீட்டலில் ஈடுபட இயலாமல் போகும் நிலை அல்லது நீடித்து நேரிடும் இயலாமைக்கு.
- வேலை இல்லாத காலத்திற்கு: பொருத்தமான வேலையைப் பெறுவதற்கு இயலாமல் போகும்போதும், உழைக்கத்தயார் நிலையில் இருப்பவருக்கு வேலை இல்லாதிருக்கும் நிலையிலும்.
- குடும்ப உதவிகள்: குழந்தைகளைப் பராமரிப்பதற்கான பொறுப்பு.
- மருத்துவ கவனம்: கர்ப்பகாலம், நோயுற்ற பிற நிலைகளின் போது சிகிச்சை வசதிகள்.
- மகப்பேறு ஆதாயங்கள்: கர்ப்பம், பிரசவம் மகப்பேறு இவற்றின் காரணமாக வருவாய் நின்று போவதால் ஏற்படும் விளைவுகள்
- மற்ற காரணங்களால் குறைந்தபட்ச தேவையைக்கூட அடைய முடியாதவர்களுக்கு சமூக உதவி.

## பன்னாட்டு அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டவை:

பாதிப்புகளிலிருந்து மக்களைப்பாதுகாகவும், ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்யவும், வறுமை, பசி ஆகியவற்றை ஒழிக்கவும், மனித கௌரவத்தை வலுப்படுத்தவும், சமூக ஓர்மையையும் ஜனநாயகத்தையும் தழைக்கச் செய்யவுமான ஒரு வழிமுறையாக சமூகப்பாதுகாப்பு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய வழிமுறைகள் பற்றி அண்மையில் நிறைவடைந்த நூற்றாண்டு வளர்ச்சி இலக்குகள் பற்றிய மாநாடு உள்பட (MDG), பன்னாட்டு இலக்குகள் மாநாடுகளில் எப்போதும் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. தற்போது நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) சர்வ தேச ஒற்றுமையுடன் கூடிய அர்ப்பணிப்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

குறிப்பிட்ட சில நாடுகளில் முன்முயற்சிகள் பல செய்யப்பட்ட போதிலும் சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகளில் முன்னேற்றம் என்பது குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் உள்ள நாடுகளில் வேகம் குறைவாகவே நடந்துவருகிறது. 2014இல் ILO வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை விரிவான சமூகப்பாதுகாப்புத்திட்டங்களைப் பெறக்கூடியவர்கள் உலக மக்கள் தொகையில் 27% பேர் மட்டுமே என்று தெரிவிக்கிறது. சமூகப்பாதுகாப்பு முன்முயற்சிகளோடு தொடர்புடைய சவால்கள் இவை ஆகும். நீடித்த தன்மை, உலகம் முழுவதற்கும் அறிமுகப்படுத்துவது ஆகியவை இத்தகைய சவால்களில் முக்கியமான இரண்டாகும்.

பெரும்பாலான நாடுகளில் சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் குறிப்பிட்ட சில மக்கள் திரளுக்காக, குறிப்பிட்ட சில ஆதாயங்களைத் தருவதற்காக ஆரம்பிக்கப்பட்டன. காலப்போக்கில் மற்ற மக்களுக்கும் ஆதாயங்கள் கிடைக்கும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. எனினும், சமூகப்பாதுகாப்புத் திட்டங்களுக்கு ஒரு சில வழி வகைகள் மட்டுமே உள்ளன. குறைந்தவருவாய் நடுத்தரவருவாய் உள்ள நாடுகளில் சவால்கள் அதிகமாக இருக்கின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையிலான மக்களுக்கு மட்டுமே உதவக்கூடியதாக இருந்து பெரும்பாலான மக்களுக்கு இதன் பலன்கள் கிடைக்காமலே போகிறது. அதனோடு கூட, பயன் பெறக்கூடிய மக்களைக் கண்டறிவது மிகப்பெரிய வேலைத்திட்ட சவாலாக இருக்கிறது. எனவே, இத்தகைய திட்டங்கள் அதன் ஆழ அகலங்களில் அனைவரையும் எட்டாத நிலையிலேயே இருந்து வருகின்றன. இத்தகைய

திட்டங்களில் பயன் பெறக்கூடிய மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச்செய்வதும், திட்டங்களைத் தொடர்ச்சியாக மறுபார்வைக்கு உட்படுத்துவதும் மிக முக்கியமான செயல்களாகும். மக்களின் எதிர்பார்ப்பையும், நாட்டின் நிதி ஆற்றலையும் பொருத்திப்பார்பதற்கு இது தேவைப்படுகிறது.

நீடித்துநிலவக்கூடிய நிலையில் பார்த்தால் சமூகப்பாதுகாப்புத்திட்டங்கள் நாடுகளுக்கிடையே வெவ்வேறு வடிவங்களைக் கொண்டதாக இருந்தபோதிலும், மக்கள் தொகையும் நாடுகளின் பொருளாதாரத்திட்ட ஏற்பாடுகளும், 2050ஆம் ஆண்டு வாக்கில் சமூகப்பாதுகாப்பு முன்முயற்சிகள் பல்வேறு வளரும் நாடுகளில் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் ஐந்தில் ஒரு பங்காக இருக்கும் என்று தெரிவிக்கின்றன. இந்த அடிப்படையில் பார்க்கும்போது வாழ்நாள் நீடித்து வருவதால் ஓய்வுபெறும் வயதை நெருங்கும் பணிபுரிவோர் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. வரும் ஆண்டுகளில் ஓய்வு பெறுவோருக்கான செலவினங்கள் அதிகரிக்கும். இதனால் பாதுகாப்புத் திட்டங்களுக்கான செலவினங்களும் கூடிவிடும். ஆக அதிகம் பேரை சேர்ப்பது, சமூகப்பாதுகாப்புத்திட்டங்களின் ஊடுருவலை அதிகரிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அதே வேளையில் மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றங்களினால் தங்களது சமூகப்பாதுகாப்பு முயற்சிகள் மோசமாகப் பாதிக்கப்படாவண்ணம் அரசுகள் தங்களின் நிதி திட்டமிடலைச் செய்யவேண்டும்.

இன்னொரு சவாலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. வளரும் நாடுகளில் சமூகப்பொருளாதாரத் திட்டங்களை நிர்வகிப்பதற்கு நிறுவன அமைப்புத் திறன்கள் போதாமையே அது. பெரும்பகுதிப்பயனாளிகள் முறைசாரப்பிரிவில் பணிபுரிவதால், இத்தகைய திட்டங்களில் பங்கேற்று பணம் செலுத்தும் சட்டப்பூர்வ வரம்பில் இருந்து தவிர்க்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இத்தகைய பயனாளிகளை முன்னுரிமை இலக்காகக் கொள்ளும்போது அவர்களிடமிருந்து பணப்பங்களிப்பு இல்லாத திட்டங்களைக் கண்டறிந்து, நடைமுறைப் படுத்தப்படுகிறது.

சமூகப்பாதுகாப்புத்திட்டங்களை முறைப் படுத்துவதற்கு முக்கியமான கருவியாக இருப்பது நாட்டின் அரசியலைமைப்பு வழங்கும் கட்டளையாகும். சமூகப்பாதுகாப்பு என்பது நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெரும்பாலான நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படுகிறது. சமூகப்பாதுகாப்பிற்கான வழிவகைகளை வெளிப்படையாகத் தெரிவித்திருக்கும் நாடுகள் இதன் அமலாக்கத்தில் மற்ற நாடுகளைக்காட்டிலும் மிகவும் முன்னோடியாகத்திகழ்கின்றன.

உலக அளவில் சமூகப்பாதுகாப்பு வழிமுறைகளை வளர்த்தெடுப்பதற்கான ஒரு சில முன் உதாரணங்கள் இருக்கின்றன. உலகிலேயே மிகவும் முன்னேற்றமான, விரிவான சமூகப்பாதுகாப்புத்திட்டத்தை பின்லாந்து கொண்டுள்ளது. இங்கு ஒவ்வொரு மக்கள் திரளுக்கும் ஒவ்வொரு விதமான திட்டங்களை இந்த தேசம் உருவாக்கிஉள்ளது. குடிமக்கள் அடிப்படையிலான சமூகப்பாதுகாப்புத் திட்டங்களுக்கு வரி வருவாய் மூலம் நிதி ஒதுக்கப்பட்டு சுயாட்சி முகமைகளால் நிர்வகிக்கப்படுகிறது. வருவாயுடன் தொடர்புடைய வேலைவாய்ப்பு அடிப்படையிலான சமூகப்பாதுகாப்பு, தனியார் காப்பீட்டு நிறுவனங்களுக்கு ஓய்வூதிய நிதிக்குத் தொகை செலுத்துவதன் மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஓய்வூதியத்திற்கான பின்னிஷ் மையம் இதனை நிர்வகிக்கிறது. இவை சமூகக்காப்புறுதி மற்றும் நல ஒதுக்கீடுகளை உள்ளடக்கி உள்ளன. பின்லாந்து ஒரு விரிவான நலத்திட்த்தை சமூகப்பாதுகாப்பின் ஒரு அங்கமாகக் கொண்டுள்ளது. உலகில் உள்ள மற்ற ஐந்து நாடுகளில் செயல்படும் சமூகப்பாதுகாப்பு முன் முயற்சிகளும், நடைமுறைகளும் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: குறிப்பிட்ட சில நாடுகளின் சமூகப்பாதுகாப்பு முன்முயற்சிகளின் சுருக்கம்:**

| நாடு | விளக்கம் |
|---|---|
| ஆஸ்திரேலியா | ஒரு தனி நபர்/குடும்பம் இந்தப்பண உதவியைப் பெறுவதைத்தவிர வேறு வழி இல்லை என்றிருந்தால் சமூக நல உதவிகள் வழங்கப்படுகின்றன. ஆஸ்திரேலியாவின் நல வழிமுறை விரிவானது. ஓய்வுபெற்றோர், பெற்றோர், கணவன் அல்லது மனைவியை இழந்தவர்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், வேலை இல்லாதவர்கள், நோய்வாய்ப்பட்டோர், பிறந்த குழந்தையைப் போற்றி வளர்க்கும் பெற்றோர் போன்றவர்களைத்தவிர மாணவர்கள், பராமரிப்பாளர்கள், பழங்குடி மக்கள் போன்றவர்களுக்கும் பணம் வழங்கப்படுகிறது. கூடுதலாக துணை உதவி வழங்கவும் வழி வகை உள்ளது. |

| | |
|---|---|
| சீனா | சீனாவின் சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் அந்தந்த பிராந்தியத்தியங்களுக்குப் பொருந்துமாறு உருவாகப்பட்டுள்ளன. விதிமுறைகள் மத்திய அரசினால் பிரகடனப்படுத்தபட்டுள்ளன. ஆனால், திட்டங்களை நிர்வகிப்பதும் விவரக்குறிப்புகளும் உள்ளாட்சி அமைப்புகளால் செய்யப்படுகின்றன. இந்தத் திட்டங்கள் கடந்த 40 ஆண்டுகளில் மாற்று உருவங்களை எடுத்துள்ளன. எண்ணற்ற திட்டங்களும், முன்னேற்பாடுகளும் இருக்கின்றன. ஒருசில திட்டங்கள் வேலைகொடுப்போர், வேலைபார்போர் இருவரின் பங்களிப்பினாலும் ஒரு சில திட்டங்கள் வேலைதருபவரின் பங்களிப்பை மட்டுமே கொண்டும் செயல்படுகின்றன. இத்தகைய காப்பீட்டுத்திட்டங்கள் உச்சவரம்பிற்கு உட்படவை. அதாவது, முந்தைய ஆண்டு வருவாயின் அடிப்படையில் தனி நபர்களுக்கு ஊதிய உச்ச வரம்பு செய்யப்படுகிறது. சமூகப்பாதுகாப்பிற்கான பங்களிப்பிற்கும் உச்சவரம்பு உண்டு. |
| கியூபா | இங்கு சமூகப்பாதுகாப்புத்திட்டம் ஏறக்குறைய அனைவருக்குமாக ஆக்கப்பட்டுவிட்டது. பங்களிப்பின் பெரும் சுமையை அரசே ஏற்றுக்கொள்கிறது. பல வளர்ந்த நாடுகளைக்காட்டிலும் இந்த திட்டத்தின் நீள அகலம் அதிகம். அதோடு கூட, இங்கு விரிவான இலவச உடல் நலத்திட்டம் உள்ளது. இந்தத்திட்டத்தின் முன்னேற்பாடுகளை மிக விரைவான வேகத்தில் ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் கியூபா சாதித்திருக்கிறது. |
| ஜப்பான் | இங்கு அநேகமாக அனைவருக்குமான சமூகப்பாதுகாப்புத்திட்டம் செயல்படுகிறது. இந்தத்திட்டத்தில் கொள்கை அளவிளேனும் ஒவ்வொருவரும் பங்கேற்பது இங்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அடிப்படை வாழ்வாதாரச் செலவினங்கள், குடியிருப்புச் செலவுகள், கட்டாயக்கல்வி, திறன்பயிற்சி செலவுகள், உடல்நலக்காப்பீடு, இறுதிச்சடங்குகள் ஆகியவற்றிற்கான பொது உதவித்திட்டங்கள் இங்கு உள்ளன. வயதானவர்களை அதிகமாகக்கொண்டிருக்கும் தேசங்களுக்கு முன்னுதாரணமாக இருக்கக்கூடிய விதத்தில் குறிபிடத்தக்க வகையில் இந்தத் திட்டங்கள் பரிணமித்து வந்துள்ளன. |
| பிலிப்பைன்ஸ் | சமூகக்காப்புறுதித்திட்டமானது அரசால் நடத்தப்படுகிறது. தனியார் துறை, பணியாளர்களுக்கான சமூகக்காப்புறுதி, தொழில்முறையாளர்கள், முறைசாராபிரிவுகளில் பணிபுரிவோருக்கான சமூகக் காப்புறுதித்திட்டங்கள் உள்ளன. சமூகப்பாதுகாப்பு, மருத்துவ கவனம், பணியாளர் இழப்பீடு ஆகிய மூன்று திட்டங்கள் செயல்படுகின்றன. அரசுப்பணியாளர் காப்புறுதித்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களுக்கான தனிப்பட்ட நிதியை ஓய்வூதிய நிதியத்தின் கீழ் அரசு நிர்வகிக்கிறது. |

உலக நாடுகளின் சமூகப்பாதுகாப்பு வழிமுறைகள் பொதுவான ஒரு சில பண்பியல்புகளைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. அவற்றைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம்:

முறைசாராப்பிரிவினருக்கு ஓய்வூதியப்பயன்களும் முதியோர் ஓய்வூதியமும் அநேகமாக எல்லா நாடுகளிலும் தரப்படுகின்றன. குறைந்தபட்ச ஊதிய நிர்ணய வழிமுறைகளும் செய்யப்பட்டுள்ளன. இவை போன்ற திட்டங்கள், முன்முயற்சிகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாக கூடுதலான மக்கள் பிரிவினரையும், ஆதாயங்களையும் பல நாடுகள் உட்சேர்த்துள்ளன.

கூடுதல் மக்கள் பிரிவினரைச் சேர்ப்பதற்கு செய்யப்படும் முயற்சிகள் பொருத்தமற்றவைகளாக உள்ளன. தழுவல் அளவும், ஆதாயங்களும் விசாலமானதாகவும், அனைவருக்குமானதாகவும் இல்லை.

சமூகப்பாதுகாப்பு முன்முயற்சிகளின் ஒரு பகுதியாக நலச்சேவைகளை சேர்த்துக்கொள்வதற்கு பொதுவான ஒரு இணக்கம் உள்ளது. எனினும், அனைவருக்குமான நலச்சேவையை நோக்கி முன்னேற்றமான செயல் நுட்பங்களை ஒரு சில நாடுகள் மட்டுமே கொண்டுள்ளன.

நல்ல முன்னேற்றம் கண்டுகொண்டிருக்கும் பல நாடுகள் திட்டங்களை ஒருங்கு குவித்து அவற்றின் செயல்பாட்டை ஒருங்கிணைக்க முயற்சித்துள்ளன. இத்தகைய அமைப்பில், சேவை வழங்குவோர் சேவை பெறுவோரிடமிருந்து பிரித்துவைக்கப்படுகின்றனர். சுதந்திரமான சுயாட்சி முகமை அரசின் சார்பாக இத்தகைய ஏற்பாடுகளை நிர்வகிக்கிறது.

கூட்டாட்சி அமைப்பில் மாகாணங்களும், மாநிலங்களும் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தக்கூடியவை. ஒத்திசைவைக் கொணர்வதற்காக தேசிய அளவில் கொள்கை வழிகாட்டி விதிமுறைகளும், ஒழுங்குமுறைகளும் வகுக்கப்படுகின்றன.

அனுபவத்தின் மூலம் மாற்றங்களைச் செய்வது, கற்றுக்கொள்வது, தகவல் தொடர்பு நுட்பங்களை உகந்த வகையில் பயன்படுத்தி சேவையில் உயர் அளவிலான மாற்றங்களைக் கொண்டுவருவது போன்ற புதுமையான அணுகுமுறைகள் இருந்துள்ளன. அதனோடு கூட, தேவைப்படும் போதெல்லாம் பொருத்தமான சட்டம் இயற்றல் மூலம் இந்த வழி முறைகளை அரசுகள் ஆதரித்தன.

**இந்தியா முன் செல்வதற்கு ஏழு வழிகள்:**

சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கும் நிலையில் இளம் வயதினர் அதிகமாக இருக்கும் தேசமாக இந்தியா இருக்கிறது. வேகமாக வளரும் பொருளாதாரமாகவும், உலகளாவிய பொருளாதார மந்தநிலையினால் பாதிப்புக்கு உள்ளாகாத தேசமாகவும் இந்தியா இருக்கிறது. ஒருவேளை இதுவே கூட இந்தியாவில் தற்போதிருக்கும் சமுதாயப்பாதுகாப்பு முறைகளை வலுப்படுத்துவதற்குப் பொருத்தமான தருணமாக இருக்கலாம். இந்திய அரசியல் சட்டப்பிரிவுகள் 41, 42, பகுதி IV இல் இவை விவாதிக்கப்படுகின்றன என்பது இந்தியாவின் சமூகப்பாதுகாப்பு முறைகளின் பலங்களில் ஒன்று. வேலை பார்ப்பதற்குள்ள உரிமை, கல்வி உரிமை, வேலை இல்லாமல் இருப்பவர்கள் உதவி பெறுவதற்கான உரிமை, முதியோர், உடல் நலம் குன்றியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான பாதுகாப்பு போன்றவை சமூகப்பாதுகாப்பு வழிமுறைகளை விரிவாக்குவதற்கு இருக்கக்கூடிய வலுவான சட்டக்கட்டமைப்புகளாகும்.

இந்தியாவில் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் 1923ஆம் ஆண்டிலேயே இயற்றப்பட்டது. சமூகப்பாதுகாப்பு விஷயத்தில் இந்தியா மிக முன்னமேயே முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. கூடுதலான மக்களை இலக்காக்கொண்ட புதிய திட்டங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இருப்பினும், உலகின் பல பகுதிகளிலும் இருப்பதைப் போலவே இந்தியாவிலும் சிதறிக்கிடக்கும் திட்டங்கள், பொருத்தமற்ற நடைமுறைப்படுத்துதல், திட்டங்களின் ஊடுருவல் நிலைமை போன்றவை உள்ளன. இந்த சூழ்நிலையில் இந்தியாவில் சமூகப்பாதுகாப்பை அதிகரிக்க இப்போது விவரிக்கப்படும் ஏழு முயற்சிகளை மட்டுமாவது மேற்கொள்ளலாம். (இந்த வழி முறைகள் பெட்டிச் செய்தி 2 இல் பட்டியலிடப்பட்டுள்ளன).

**பெட்டிச் செய்தி 2:**

சமூகப்பாதுகாப்பை செயல்படுத்துவதற்கு உலகளாவிய அனுபவத்தின் அடிப்படையில் இந்தியாவிற்கு உள்ள 7 வழிகள்:

- ஆக்கபூர்வமான செயல்திட்டத்தை வளர்த்தெடுத்து ஒப்புதல் அளித்தல்.
- சுயேச்சையான, தேசிய சமூகப்பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்குவது பற்றி எண்ணிப்பார்த்தல்.
- புதுமையான நிதி உதவி முறைமைகள் மூலம் சமூகத்திற்கான முதலீட்டுத்திட்டத்தை உருவாக்கி வளர்த்தல்.
- பொறுப்பான செயல்பாட்டிலும், பொதுமக்கள் விழிப்புணர்விலும் இணைந்து செயல்படுவதிலும் கவனம்.
- சமூகப்பாதுகாப்பு செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக அனைவருக்குமான நலப்பாதுகாப்பைக் கருதுதல்
- மாநில அரசுகளின் உயிர்ப்புடைய தலைமை
- சட்டமியற்றும் அமைப்புகளிலும் சட்டங்களிலும் சீர்திருத்தங்கள்

அ. சமூகப்பாதுகாப்பு அனைவருக்கும் கிடைக்கும் வகையில் ஒரு செயல் திட்டத்தை உருவாக்குதல்:

இலக்காகக் கொள்ளப்பட்டிருக்கும் பயனாளிகளை உள்ளே இழுப்பதற்குப் பன்னாட்டு அனுபவங்களின் அடிப்படையிலான, முறைப்படியான ஒரு செயல் முறை தேவை. இதற்கான முன் முயற்சிகளை மேற்கொண்டு அவற்றை ஆழ அகலமாக விரிவாக்குவதற்கான ஒரு செயல் திட்டம் உயர் மட்ட அளவில் இருக்கவேண்டும். அதற்கு போதுமான சட்ட வழிமுறைகளும் இருத்தல் அவசியம். இத்தகைய செயல் திட்டத்திற்கு உறுதுணை செய்யக்கூடிய நிறுவன ஆதரவு செயல் அமைப்புகள் தேவைப்படுகின்றன. நடைமுறையில் உள்ள பல திட்டங்களையும் ஒருங்கிணைத்து திறமையை அதிகரிக்க வேண்டும். ஆதார் அட்டை, ஜன்தன் யோஜ்னா போன்ற அண்மைக்கால முன் முயற்சிகள் அனைவரையும் உள்ளடக்கிய திட்டத்திற்கு சிறப்பான வழிவகைகளை ஏற்படுத்தித்தரும். இவற்றை உயிர்ப்புடன் பிணைத்து கட்டமைப்பையும் செயல் திட்டத்தையும் உருவாக்க வேண்டும். இத்தகைய செயல் திட்டங்கள் அலுவல் முறையில் அரசாங்கத்தால் வெளியிடப்பட வேண்டும். இதனால் பொதுமக்களின் பொறுப்பேற்பும் வந்து சேரும்.

ஆ. தன்னாட்சி கொண்ட தேசிய சமூகப்பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது பற்றி கருதிப்பார்க்க வேண்டும்:

பல நாடுகள் சமூகப்பாதுகாப்புத்திட்டங்களை நிர்வகிப்பதற்காக தன்னாட்சி முகமைகளை அமைத்துள்ளன. இந்தியாவில், பலவிதமான சமூகப்பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மிக மோசமான நிலையில் செயல்படுத்தப்படுகின்றன. எனவே அத்தகைய தன்னாட்சி முகமைகள் தேசிய அளவிலும், மாநில அளவிலும் செயல் திறமையை அதிகரிக்கும். மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இத்தகைய திட்டங்களுக்குப் புதுமையான முறையில் நிச்சயமான வழியில் நிதி ஒதுக்கீடு கிடைத்து அது நீடித்திருப்பதை உறுதி செய்வதற்கு இது உதவும். தேவை ஏற்பட்டால், சட்டத்திருத்தங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தொகையினருக்கு கட்டாயப்பங்களிப்பை கொண்டு வரலாம்.




அரசுகள் கொள்கைகளை வகுக்கவும், முகமைகள் முன்னேற்பாடுகளை செயல்படுத்தவும் வாய்ப்பு இருக்கும்.

இ. சமூகப்பிரிவு முதலீட்டுத்திட்டத்தை நிதி முதலீட்டு முறைகள் மூலம் புதுமையாக வளர்த்தெடுத்தல்:

அனைவருக்குமான விரிவான சமூகப்பாதுகப்பு வழிமுறைகளை உருவாக்குவதற்கு ஒரு தேசம் பண வசதி படைத்ததாக இருக்கவேண்டும் என்ற அவசியம் ஏதும் இல்லை. மாறாக, சமூகப்பாதுகாப்பிற்கு செய்யப்படும் முதலீடு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகவே இருக்கும். எவ்வளவு வளங்கள் தேவைப்படுகின்றன, மாறிவரும் மக்கள் தொகை நிலவரம் என்ன என்பவை பற்றிய தெளிவான புரிதலோடு அடுத்த 15 முதல் 20 ஆண்டுகளுக்கான முதலீட்டுத்திட்டம் வடிவமைக்கப்பட்டால் அது

ஈ. பொதுமக்களின் விழிப்புணர்வு, பங்கேற்பு, உறுதியுடன் துணை நிற்றல் போன்றவற்றில் கவனம்:

உறுதியுடன் துணை நிற்றல் என்பது சமூகப்பாதுகாப்பு வழிமுறையில் ஒரு முக்கியமான கொள்கையாகும். உரிமையற்றுக்கிடப்பவர்கள், நல் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள் போன்றோருக்கு உதவ மக்கள் தங்களை ஒப்புவித்துக்கொள்ள வேண்டும். ஏழைகளுக்குப் பணக்காரர்களும், கல்வி கற்காதவர்களுக்கு கற்றோரும், வேலை இல்லாதவர்களுக்கு முறை சார்ந்த துறைகளில் பணிபுரிவோரும் இரக்கம் காட்டி சீரிய யோசனைகளைத் தரவேண்டும். சமூகத்தின் பங்கேற்பு, உறுதிப்பாட்டைக்கொண்டுவரும். விழிப்புணர்வு உருவாக்கும் நடவடிக்கைகளும் சமூகப்பாதுகாப்புத்திட்டங்களில் அதிகமானோர் இணைந்திடத் துணை செய்யும்.

உ. சமூகப்பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அனைவருக்கும் நலவாழ்வு என்பதை மேற்கொள்ளுதல்:

இந்தியாவில் ஆண்டுதோறும் 63 மில்லியன் மக்கள் உடல்நலம் தொடர்பான செலவுகளுக்காக கடன் வாங்கி வறுமையில் சிக்குகின்றனர். ஏற்கனவே வறுமைக்கோட்டிற்கும் கீழ் இருப்பவர்கள், இன்னும் கீழாகச் சென்றுவிடுகின்றனர். உடல்நலம் காப்பதற்கான செலவும், அனைவருக்குமான நலப்பாதுகாப்பு இல்லாத நிலைமையும் சமூகப்பாதுகாப்பு முயற்சிகள் அனைத்தையும் கெடுத்துவிடுகின்றன. வறுமை ஒழிப்பு இலக்குகளும் எட்ட இயலாதவை ஆகிவிடுகின்றன. இதற்கு ஒரு காரணம் உடல்நலத்திற்கு அரசு மிகக்குறைவாக செலவிடுவதுதான். கையில் பணமில்லாமல் கடன் வாங்கி செலவழிப்பது 65% ஆக இருக்கிறது. உலகிலேயே இது தான் அதிகம். அரசாங்கம் உடல் நலத்திற்கென அதிக முதலீடுசெய்யும் போது, மக்கள் குறைவாக செலவழித்தால் போதும். அது ஒரு சமூகப்பாதுகாப்பாக இருக்கும். அதோடு கூட உடல்நலத்திற்காக அரசு செலவிடுவது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிகரிப்பைக் கொண்டுவரும். நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். அனைவருக்குமான நலப்பாதுகாப்பை உலகின் பல நாடுகள் தங்களின் சமூகப்பாதுகாப்புத் திட்டங்களின் ஒரு அங்கமாக செயல்படுத்திவருகின்றன. இந்தியாவும் அதன் மாநிலங்களும் இந்த வழியில் பயணிக்க வேண்டும். ராஷ்ட்ரிய ஸ்வஸ்த்திய பீமா யோஜ்னா (RSBY) சிறந்த நோக்கம் கொண்டது. இந்தியாவில் உடல் நலத்திற்கு செலவிடப்படும் தொகையில் 1% மட்டுமே அனைவருக்குமான உடல்நலத்திற்குச் செலவிடப்படுகிறது. அதனால் இந்தத்திட்டம் மக்களைச் சென்று அடையவில்லை. இந்தத்திட்டமும், வரவிருக்கும் தேசிய சுகாதாரப் பாதுகாப்புத்திட்டமும் (NHPS) போதுமான நிதி உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். சமீபத்தில் வெளியிடப்பட்ட இந்தியாவின் தேசியக்கொள்கை (2017) அனைவருக்கும் நலவாழ்வு என்பதை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்திடும்.

ஊ. மாநில அரசுகளின் உயிர்ப்பான தலைமை:

இந்தியா போன்ற கூட்டாட்சி தேசங்களில் சமூகப்பாதுகாப்பு செயல்களில் மாநிலங்கள் மிகப்பெரும் பங்காற்ற வேண்டி இருக்கிறது. இதனால் புதுமைகள் படைக்கவும், நெகிழ்வான போக்கிற்கும் வாய்ப்பு கிடைக்கும். சமூகப்பாதுகாப்பு முன் முயற்சிகள் வெற்றி காணும். மத்திய அரசின் நிதி ஆதாரங்கள் எப்போதும் அளவுக்கு உட்பட்டே இருக்கும். அரசியல் தலைமையில் இருப்பவர்கள் காட்டும் அர்ப்பணிப்பிலும், பார்வையிலுமே வித்தியாசம் தெரியவரும். இந்திய மாநிலங்களில் பல அனைவருக்குமான நலவாழ்வு, சமூகப்பாதுகாப்பு ஆகியவற்றில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக உள்ளன.

எ. சட்ட சீர்திருத்தங்கள்:

சமூகப் பாதுகாப்புத்திட்டங்கள் தொடர்ந்து நீடித்திருப்பதற்கு சட்டத்தின் பாதுகாப்பு அவசியம். அதே சமயத்தில், மக்கள் வரிப்பணத்தில் இருந்து காப்பீட்டுக்கட்டணங்களை கட்டும் நிலைமை மாறி வசதி இருப்பவர்கள் தாமாக முன்வந்து செலுத்தும் நிலை வர வேண்டும். காப்பீட்டு நிதி திறம்பட நிர்வகிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் நீடித்திருப்பது சவாலாகிவிடும். தேவைப்பட்டால் சட்டத்திருத்தங்கள் செய்தும் கூட இதற்கு உதவ வேண்டும். இந்தத்துறையில் நிபுணத்துவம் உடையவர்களும், முன்னணி கல்வியாளர்களும், கொள்கைவகுப்பதற்கான மையங்களும் செயல்பட வேண்டும்.

**முடிவுரை:**

கடந்த சிலபத்தாண்டுகளில் சமூகப்பாதுகாப்பை செயல்படுத்துவது வளர்ந்து வந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியின் பல்வேறு நிலைகளில் இருக்கும் பல நாடுகளில் இருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை இருக்கின்றன. இந்திய அரசியலமைப்பு சமூகப்பாதுகாப்பிற்கு வழி வகுத்துள்ளது. அடுத்தடுத்து வரும் அரசுகள் இதற்கு முன்னுரிமை தந்து வருகின்றன. ஆயினும், இத்தகையத்திட்டங்கள் மிகவும் குறைவானவர்களையே சென்றடைந்துள்ளன. இதன் தாக்கமும் குறைவாகவே இருக்கிறது. அனைவருக்குமான நீடித்த சமூகப்பாதுகாப்பை வழங்குவதற்கு உலக நாடுகளிடம் இருந்து கற்றுக்கொள்பவற்றை நாம் செயலாக்க வேண்டும். சமூக முதலீட்டுத்திட்டம், பல்வேறு முகமைகளையும், திட்டங்களையும் ஒருங்கிணைப்பது ஆகியவற்றின் மூலமே இது சாத்தியப்படும். மக்களிடையே உறுதிப்பாட்டை உருவாக்குவதில் கவனம் செலுத்துதல், திட்டங்களுக்கான காப்பீட்டுக் கட்டணங்களை செலுத்த ஊக்குவித்தல், தலைமைப்பண்புகள் ஆகியவை தேவை. அதோடு கூட அனைவருக்கும் நலவாழ்வு என்பதை ஒரு சமூகக்கடமையாக முன்னுரிமை தந்துசெயல்படுத்த வேண்டும். இதன் மூலம் நிலைத்த பொருளாதார வளர்ச்சி, வறுமைக்குறைப்பு, நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுதல், அனைவருக்குமான உடல்நலப்பாதுகாப்பு ஆகியவற்றை அடைய முடியும்.

●

# இந்தியாவின் உணவுக் கொள்கை : நிலைத்து நிற்கும் இலக்குகளை அடைய சத்துணவுக்கு முதன்மை அளிக்கும் விவசாயம்

- Dr. மௌசுமி தாஸ்

இணை உறுப்பினர், செயல்பாட்டுப் பொருளாதார ஆய்வு தேசிய கவுன்சில், புது டெல்லி

மின்னஞ்சல் : mdas@ncaer.org, mousumii.das@gmail.com

வெளியீடுகளில் வெகுவாக விவாதிக்கப் பட்டுள்ளது போல், உணவுப் பாதுகாப்பு என்பது உற்பத்தி, பகிர்வு, நுகர்வோர் விருப்பம், நுகர்வு, பெரு, குறு ஊட்டச்சத்துக்களை உட்கொள்ளுதல் மற்றும் அவற்றின் சிறப்பான செரிமானம் ஆகியவைகளை உள்ளடக்கிய பலமுனை செயல்பாடாகும் (தாஸ் 2016). உணவு அமைப்பிற்கும், மக்களின் ஊட்டச்சத்துக்கள் நிலைமைக்கும் இடையே இருவழி சாதாரண தொடர்பு உண்டு (பின்ஸ்ட்ரப்-ஆண்டர்சன் 2007). எளிதாக கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக ஐக்கிய நாட்டு உணவு மற்றும் விவசாய அமைப்பு, உணவுப் பாதுகாப்பு என்பதை இந்த வகையில்தான் வெளிப்படுத்தியுள்ளது.

### உலகளாவிய தற்போதைய உணவு நிலைமை : தொடர்புகளும் மேல்பதிவுகளும்

| | | |
|---|---|---|
| மானிட நலம், சத்துணவுக் கொள்கைகள் | உணவுப் பாதுகாப்பு, நுகர்வு மற்றும் தேவைசார் கொள்கைகள் | ஏழ்மை ஒழிப்புக் கொள்கைகள் |
| உள்நாட்டு சந்தைக் கொள்கைகள் | உணவு உற்பத்தி மற்றும் வழங்கு கொள்கைகள் | பருவநிலை மாற்றம், எரிசக்தி மற்றும் இயற்கை வளங்கள்சார் மேலாண்மைக் கொள்கைகள் |
| ஆளுமை மற்றும் அமைப்பு நிறுவனங்கள் | உலகமயமாக்கலும், உணவுசார் அமைப்பும் | உணவு அமைப்புசார் நெறிமுறைகள் |

ஆதாரம் : பின்ஸ்ட்ரப் ஆண்டாசன் மற்றும் வாட்சன் (2011)

மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப உணவுக் கொள்கை முறைகள் மாறி வந்துள்ளன. தெற்காசியா மற்றும் ஆப்பிரிக்காவின் தெற்கு நாடுகள் சேர்ந்த வளரும் நாடுகள் உள்ளிட்ட பெருமளவிலான உலக நாடுகளிலும் இந்த வழியில் கொள்கைச் செயல்பாடுகள் மாறி வந்துள்ளன. பின்ஸ்ட்ரப் - ஆண்டர்சன் மற்றும் வாட்சன் (2011) அவர்களால் உருவாக்கப்பட்ட வடிவமைப்பு பல நிலைகளையும், வழிமுறைகளையும் உள்ளடக்கிய மிக சமீபத்திய ஒன்றாகும்.[1]

ஆனால் இந்தியாவில் உணவுக் கொள்கை என்பது தேவையற்ற ஒன்றாகவே அமைந்து விட்டது. இந்தக் கொள்கைகள் நம்பிக்கைகளின் அடிப்படையிலும், கடந்த காலங்களில் சரியாக செயல்பட்டவை என்று கருதப்பட்டவற்றை சார்ந்தவையாகவும் உள்ளன. இந்தியாவின் மிகப்பெரிய உணவுப் பாதுகாப்புத் திட்டமான பொது விநியோகத் திட்டம் இன்றைய அத்தியாவசியத் தேவையாகும். அது பல காலகட்டங்களில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு எல்லா மாநிலங்களிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. ஆனாலும், பெருமளவிலான கசிவுகள் மற்றும் இலஞ்சம், குறைபாடான வழங்குமுறை, தரமற்ற பொருட்கள் போன்ற பல குறைபாடுகள் காணப்பட்டன. கடந்த சில ஆண்டுகளாக உணவுப் பாதுகாப்பின் பிற செயல்பாடுகளில் கவனம் கூடி பொது விநியோகத் திட்டம் கிட்டத்தட்ட தேவையற்றதாகவே கருதப்பட்டது. பிற செயல்பாடுகளாவன : போதுமான அளவு சுகாதாரமும் துப்புரவும் இல்லாமை, பல தரப்பட்ட உணவு வகைகளை உட்கொள்ளுதல் மகளிர் மேம்பாடு ஆகியனவாகும். ஆச்சரியப்படும் விதமாக 2013 தேசிய உணவுக் கொள்கைச் சட்டத்தில், தானியங்கள் வழங்குவதற்கு மீண்டும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பலவகையான உணவுப் பழக்கங்கள் பற்றி போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அனைத்து சக்திகளும் மறு சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதிலேயே இருந்தது. தற்போதைய நிலைமையில் இது தேவையில்லை. குறிப்பிட்டவர்களுக்கான பொது விநியோகத் திட்டத்தில் குழந்தைகளின் சத்துணவு நிலைமைக்கான நிலைமையில் எந்த மாற்றமும் இல்லை (தேசாய் மற்றும் வன்னிமான் 2015). தற்போதைய தேவை விவசாயத்தையும், சத்துணவு

1. இந்தக் கட்டுரையின் நோக்கத்தின் அடிப்படையில், இந்த வழிமுறைகளின் விளக்கங்களையும், தொடர்புகளையும் நாம் இங்கே விவாதிக்கவில்லை. இந்தியாவிற்கு தற்போது தேவையான சிலவற்றை மட்டுமே காண்கிறோம்.

வழங்கும் அனைத்து வழிமுறைகளையும் ஒருங்கிணைத்த செயல் வடிவம்தான் (தாஸ், ஷர்மா மற்றும் பாபு 2017). இந்த நூற்றாண்டு மேம்பாட்டு இலக்குகளை இந்தியா அடைய முடியாததற்கு இது ஒரு காரணமாகும். இந்த நூற்றாண்டு மேம்பாட்டு முதல் இலக்கின்படி இந்தியாவில் சத்துணவுப் பற்றாக்குறை உள்ள குழந்தைகளின் விகிதம் 1990இல் 53.5 சதவிகிதமாக இருந்ததை 2015க்குள் பாதியாக குறைக்க வேண்டும். ஆனால், 2015இல் 26 சதவிகிதமாக இருக்க வேண்டிய நிலையில் 2005இல் அது 40 சதவிகிதமாக இருந்தது. இது, மிகவும் உயர்ந்த அளவாகும்.



ஆதாரம்: ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம்[2].


சமீப காலமாக நூற்றாண்டு மேம்பாட்டு இலக்குகளுக்குப் பதிலாக நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகள் பின்பற்றப்படுகின்றன. ஆனாலும், அந்த இலக்குகளை அடைவது, கடினமாகத்தான் தோன்றுகிறது. இதற்கு முக்கிய காரணம் விவசாயத்திற்கும், சத்துணவு பாதுகாப்பிற்கும் இடையே உள்ள இடைவெளிதான். இதை நாம் மத்திய அளவிலும், மாநிலங்கள் அளவிலும் காணலாம். (கடியாலா, மற்றவர்கள் 2014) கூறுவது போல இதனை அடைய வழிமுறைகளாவன: (1) உணவுக்கு ஒரு ஆதாரமாக விவசாயம், (2) உணவு மற்றும் உணவு அல்லாத செலவினங்களினால் விவசாய வருமானத்திற்கான ஆதாரம், (3) உணவு நுகர்வைப் பாதிக்கும் விவசாயக் கொள்கைப்படி உணவு பொருட்களின் விலைகள், (4) விவசாயக் குடும்பங்களில் பெண்கள் கொள்கை முடிவு எடுத்தலும், வளங்களை ஒதுக்கீடு செய்தலும், (5) விவசாயத் துறையில் பெண்கள் வேலை செய்வதும் அதனால் அவர்களின் குழந்தைகளும் அவர்களுக்கு பாலூட்டுவதிலும் பாதிப்பு, (6) விவசாயத்தில் பெண்கள் வேலை செய்வதால் அவர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஏற்படும் சத்துணவுப் பற்றாக்குறை மற்றும் உடல்நல பாதிப்பு. நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளை அடைய கீழ்க்கண்ட இலக்குகளை அடைய வேண்டும் : இலக்கு 1 (வறுமை இல்லாமை), இலக்கு 2 (பசி இல்லாமை) இலக்கு 3 (நல்ல உடல்நலம்), இலக்கு 6 (சுத்தமான குடிநீர் மற்றும் துப்புரவு), இலக்கு 12 (நிலைத்து நிற்கும் நுகர்வு மற்றும் உற்பத்தி), இலக்கு 13 (பருவநிலை மாற்றத்திற்கான நடவடிக்கைகள்).

உணவுப் பாதுகாப்பை அடைய பல இலக்குகளை அடைய வேண்டி உள்ளது. இது சம்மந்தப்பட்ட பல அமைச்சகங்கள் தனித்து செயல்படாமல், ஒருங்கிணைந்து ஒரு தலைமையின் கீழ் செயல்பட வேண்டும். இந்தக் கட்டுரையில் 2030 வாக்கில் இந்தியா நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளை அரசு அடைவதற்கான குறுகிய கால மற்றும் மத்திய கால வழி முறைகளை விளக்குகிறேன். உலகளவில் நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளை அடைய நிலைத்து நிற்கும் உலகளாவிய உணவு முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. (ஃபேன் 2016). ஆகவே, இந்தியாவில் இவற்றிற்கு இடையே உள்ள இடைவெளியை நாம் களைய முயல வேண்டும். குறுகிய காலப் பரிந்துரைகள் பின்வருவன :

### (a) உணவுப் பழக்க வேறுபாடுகள் : கவனிக்கப்படாத அவசியம்

மக்கள் பலவகையான உணவு வகைகளை உண்ண அரசு உடனடியாக ஊக்குவிக்க வேண்டும். தேசிய சத்துணவுக் கழகம் உருவாக்கிய இந்திய உணவுப் பயன்பாட்டு அமைப்பு சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் இல்லை. ஆகவே, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த எளிமையான ஆனால் கவர்ச்சி மிகு திட்டங்களை வகுக்க வேண்டும். உதாரணமாக அமெரிக்க விவசாயத்துறை ‘வண்ணமிகு தட்டு’ என்ற திட்டத்தை விளம்பரப்படுத்துகிறது. அது சிறு குழந்தைகள் முதல் பெரியவர்களுக்கும் எளிதாக புரிகிறது. பலவித வண்ணங்கள் என்று சொல்லும் போது உணவுத் தட்டில் இருக்க வேண்டிய பல வகையான பொருட்களை குறிக்கிறது. இந்தப் பலவகையான வண்ணங்களில் இருப்பவை தானியங்கள், பருப்புவகைகள், பழங்கள், காய்கறிகள், மாமிசங்களாக இருக்கலாம். அதைப்போலவே, இந்தியாவில் சைவ, அசைவ உணவு சாப்பிடும் பிரிவினருக்கும் இதைப்போன்ற ஒரு விளம்பர உத்தியை மேற்கொள்ளலாம் (தாஸ் 2016)

2. ஆதாரம் : http://www.in.undp.org/content/india/en/home/post-2015/mdgoverview.html




நாம் சிறந்த உணவுப் பழக்க வழக்கங்களை ஊக்குவிக்கிறோமா? உள்ளூர்ப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு முறைகளை, குறிப்பாக சத்துணவை மையமாகக் கொண்டவைகளை ஊக்குவிக்க வேண்டும். நம் நாட்டில் பலதரப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிப்பும், நுகர்வும், சமையலும் இருப்பதால் மேலிருந்து அளிக்கப்படும் உத்தரவுகள் பயன்பெறாது. ஆகவே, உணவுப் பழக்க வழக்கம் சார்ந்த கொள்கைகளை வடிவமைப்பது அடி மட்டத்தில் இருந்து துவங்கி ஆளுமைக்கும் செயல்பாட்டு உத்திரவாதத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். நிதி ஒதுக்கீடு அடிமட்ட நிலைமைகளைச் சார்ந்திருக்க வேண்டும். எல்லாத் துறைகளும் ஒரு தலைமையின்கீழ் இயங்கினால்தான் இது சாத்தியமாகும். எந்தவொரு கொள்கை முயற்சி வெற்றியடையவும் நல்ல உள் கட்டமைப்பு வசதிகள் நாட்டில் தேவை (உலக வங்கி 2003). பலவகையான மாறுபட்ட உணவுகளை மக்கள் உண்பதற்கு போதிய உள்கட்டமைப்பு வசதி, மருத்துவ மையங்கள் மற்றும் ஊடகங்கள் அவசியம் என்று தாஸ் 2016 கூறுகிறார்.

**(b) சென்றடைவோரை நிர்ணயிக்கும் அமைப்பை மறு சீரமைத்தல் : நலிந்தோர் யார்?**

மிகவும் ஏழ்மையிலுள்ள இந்தியர்களுக்கு இலவசமாக உணவு தானியங்களை வழங்க வேண்டும் என்றாலும் மற்ற வகை மக்களுக்கும் சுமாரான கலோரி கொள்ளளவே கிடைக்கிறது. கிராமப்புறப் பகுதி நகர்ப்புற பகுதி இரண்டிலுமே சில காலங்களாக உட்கொள்ளும் கலோரியின் அளவு குறைந்திருப்பதிலிருந்து இது தெரிய வருகிறது. (டீடன் மற்றும் டீரிஸ், 2009). உணவு தானியங்கள் மற்றும் பருப்புகள் தவிர பிறவற்றை மானிய விலையில் அளிக்க முடியாது என்றாலும் காய்கறிகள், பழங்கள், பால், முட்டை, மீன் மற்றும் மாமிசம் உற்பத்தியாளர்களுக்கு உள்ளூர் உற்பத்தி மற்றும் நுகர்வுக்கு ஏற்ப ஊக்கங்களை வழங்கலாம். உதாரணமாக சமீபத்திய ஆய்வுகளில் பருப்புகள் சாப்பிடுவதை ஊக்குவிப்பதன் மூலம் மக்களின் உணவின் தரத்தை உயர்த்தலாம் என்று அறியப்படுகிறது (மேக் டெர்மாட் மற்றும் வியாட், 2017) குளிரூட்டப்பட்டக் கிடங்குகளில் உணவு பொருட்களைப் பாதுகாப்பதன் மூலம் மக்கள் சத்துணவு உண்பதை மேம்படுத்த முடியும் என்றாலும் அது போதுமான அளவு இல்லை (பிர்தால், ஜா மற்றும் சிங் 2007). பள்ளிகளில் மதிய உணவு வழங்குவதால் சத்துணவு சிறப்பாக உள்ளது. தானியங்கள், பருப்புகள் மற்றும் சில மாநிலங்களில் முட்டை கிடைக்கிறது. (மியூல்ஃஆப், மற்றவர்கள் 2011)

**ஏழை மக்களின் உணவை வரையறுத்தல் :**

ஏழ்மை நிலைமையை நிர்ணயிக்கும் போது, அம்மக்கள் உட்கொள்ளும் கலோரி அளவு மட்டுமல்லாமல் சத்துணவையும் சேர்க்க வேண்டும் என்று டெண்டுல்கர் மற்றும் ரங்கராஜன் குழுக்கள் உறுதி செய்துள்ளன. நாங்கள் இங்கே, தெரிவு செய்வது ஒரு புது அளவான பலவகை உணவுகள். அதை இந்தியர்களின் சத்தான உணவுக் குறியீடு என்று கூறலாம். இதன்படி ஒரு குடும்பம் எப்படிப்பட்ட பலவகையான உணவுகளை உட்கொள்கிறது என்பதை நிர்ணயிக்க முடியும் (தாஸ், 2015a). இந்தக் குறியீட்டின்படி சைவம் மட்டுமல்லாமல் அசைவ உணவு உண்பவர்களும் குறைந்த அளவிலான பலவகையான உணவுப் பொருட்களை உண்பவர்களை அடையாளம் காண முடியும். இது அல்லாமல், குடும்பங்கள் எந்த அளவு பாதிப்பான நிலைமையில் உள்ளன என்பதையும் அறிந்து கொள்ள முடியும். ஆகவே, ஏழ்மைக் கோடு என்பது மிகவும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதில் இருக்க வேண்டும். திடீரென ஏற்படும் வருமான, உடல்நலக் குறைவுகள், பருவ நிலை தாக்கங்களினால் முதலில் மக்கள் உணவு உண்பது பாதிக்கப்படுவதால் பொருட்களாக வழங்குவது தொடர வேண்டும் (தாஸ் 2015b).

**(C) மின்னணுத் தீர்வுகள் : மாற்றுதல் மற்றும் கண்காணித்தல்**

பணம் மற்றும் பொருட்கள் இரண்டையும் கலந்து வழங்க வேண்டும். வழங்கும் பொருட்கள் மட்டுமல்லாமல் நல பாதிப்புக்களையும் கண்காணிக்க வேண்டும்.

உண்மை நிலைமை சான்றுகளுக்கு ஏற்ப பணம் மற்றும் பொருட்கள் வழங்குவதை நாங்கள் தெரிவு செய்கிறோம். பொது விநியோகத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படும் இடங்களில் அது தொடர வேண்டும். ஆனால், பணமாற்றம் செய்யும் போது, அந்தப் பணம் மக்களின் உணவுப் பாதுகாப்பு நிலைமையை மேம்படுத்துகிறதா என்று கண்காணிக்க வேண்டும். பணப் பரிமாற்றத்தால் குடும்பங்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் அவர்கள் சாதாரணமாக உண்பதிலிருந்து மாறி கூடுதல் சத்துணவு உணவாக மாறக் கூடும் (ஜா, மற்றவர்கள் 2013; ஸ்வெட்பெர்க் 2012; கேரா 2014) சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள மக்களுக்காக பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் உணவு தானியங்களின் தரத்திற்கு கவனம் செலுத்தியிருக்க வேண்டும். அந்த வகையில் மகளிர் மேம்பாடு மிகவும் அவசியமாகும். சாதாரணமாக ஒரு குடும்பத்தில் வயது முதிர்ந்த பெண்கள்தான் முடிவுகளை எடுக்கிறார்கள். ஆகவே, மக்கள் பலவகையான உணவுப் பொருட்களை உண்ண அவர்களுக்கு கல்வி அளிக்க வேண்டும். (தாஸ் 2014)

அடுத்து நாம் தெரிவு செய்வது, ஆதார் அட்டைகளும் சாதாரணமாக வங்கிக் கணக்குகளும் உள்ளவர்களுக்கு நேரடியாக பயன்களை வழங்கி அவர்களுடைய உடல் நல நிலைமையைக் கண்காணிக்க வேண்டும். மின்னணுப் புரட்சி ஏற்பட்டுள்ள நம் நாட்டில் ஏழை மக்களை தகுந்த இடைவெளியில் கண்காணிக்க வேண்டும். 2017-18ஆம் நிதியாண்டில் சுமார் 51 சதவிகித தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டப் பயனாளிகள் ஆதார் சார்ந்த வழங்கு முறையில்தான் மேற்கொள்ளப்பட்டது. உணவு தானியங்களுக்காக பரிவர்த்தனை செய்யப்பட்ட பணம் 94 சதவிகிதம். டிசம்பர் 2016 வரை சுமார் ரூ. 50,000 கோடி அளவு சேமிப்பு ஏற்பட்டுள்ளதாக அரசு மதிப்பீடுகள் கூறுகின்றன. இது, ஒவ்வொரு ஆண்டுக்கான மானியத்தொகைக்கு நிகராகும்.[3] இதை ஏழ்மை நிலையை வடிகட்டும் ஒரு கூடுதல் உத்தியாகக் கொள்ளலாம். இதைக் கண்காணிக்க நாங்கள் ஒரு புதிய துறையை தெரிவு செய்யவில்லை. இதற்காக, புதிய பணியாட்களும் தேவையில்லை. மிகவும் ஏழ்மைநிலையிலுள்ள பணியாளர்களைக் கொண்டே செய்யலாம். இப்படிப்பட்ட உத்தி மங்கோலியாவின் உட்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு, அங்குள்ள குடும்பங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவர்கள் வருமானம் மட்டுமல்லாமல் உணவு மற்றும் உடல்நல ஏழ்மையிலிருந்தும் நிரந்தரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

### (d) பணமிகுதியும் அதிக உடல் பருமனும் : பணக்காரர்கள் தங்களையே தாக்கிக் கொள்கிறார்களா?

ஊட்டச்சத்துக் குறைவு மட்டுமல்லாமல் இந்தியாவின் உயர் அளவு அதிக பருமன் உள்ளவர்களையும் குறு ஊட்டச்சத்துக் குறைவு சார்ந்த வியாதிகளையும் காண்கிறோம். நடுத்தர மற்றும் உயர்வர்க்கமக்கள் இந்த பணிகளில் காணப்படுகிறார்கள்.

இதற்குக் காரணம், மிக வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புறங்கள், விலைகள், வாழ்க்கை முறைகள், எளிதாகக் கிடைக்கும் எண்ணெய் மற்றும் கொழுப்பு மிகுந்த பொருட்கள் மற்றும் அவைகளின் அதிகபட்ச விநியோகம். ஆகவே, பணக்காரர்களுக்கும் நாம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அவர்கள், தாங்களாகவே முன்வந்து தொற்று அல்லாத சர்க்கரை நோய் மாரடைப்பு போன்ற நோய்களை வரவழைத்துக் கொண்டு துன்புறுகிறார்கள் என்பதை உணர வேண்டும். ஆகவே, அரசு கொழுப்பு நிறைந்த உணவுப் பொருட்களுக்கும், அவற்றை உண்ணத்தூண்டும் பெரு வணிக வளாகங்களுக்கும் வரி விதிக்க வேண்டும். சத்துணவுப் பற்றாக்குறையினால் சமுதாயத்திற்கு மிக அதிக பாதிப்பும் உள் நாட்டு மொத்த உற்பத்தியும் மிகவும் குறைகிறது.

### (e) உணவுப் பாதுகாப்பு, இழப்புகள் மற்றும் வீணாக்கல்

இது, மிகுந்து வரும் ஒரு கவலையாகும். பொது விநியோகத் திட்டத்தில் கசிவுகளும் இலஞ்சமும் அதிகம் உள்ள நிலையில் குளிரூட்டப்பட்டக் கிடங்குகள் போதிய அளவு இல்லாமல் உணவுப் பொருட்கள் வீணாகின்றன. எந்த அளவிற்கு இழப்புகள் ஏற்படுகிறது என்பது பற்றி ஆய்வுகள் அவசியம். அதே சமயம், நஷ்டத்தையும், உணவு சார் இழப்புகளையும் குறைக்க எளிய முறைகளை

3. நேரடி பயன் பரிமாற்றம் பற்றிய பலதரப்பட்ட ஆதாரங்கள், இந்திய அரசு

நாம் மேற்கொள்ள வேண்டும். உணவைப் பாதுகாப்பதற்கு அதன் உற்பத்தியிலும், சேமிப்பிலும் இரசாயனப் பொருட்களை நாம் குறைத்து பயன்படுத்த வேண்டும். இது சார்ந்த ஆய்வுகள் இந்தியாவில் இல்லாத நிலையில் உண்மைகள் வெளிவரும் போது, அவை பயங்கரமாக இருக்கலாம் (கிரேஸ், டெலியா; மேக் டெர்மா, ஜான் 2015) உதாரணமாக, அஃப்லாடாக்சின்ஸ் எனப்படும் இரசாயனத்தால் ஊட்டச்சத்துக்குறைவு மற்றும் நாள்பட்ட வியாதிகள் குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் ஏற்பட வாய்ப்புண்டு (உன்னேவர் மற்றும் டெலியா, 2013). சத்துணவு சுமையை போக்கும் வண்ணம் நம்முடைய உணவுக் கொள்கை அமைப்பு முழுமையாக இருக்க வேண்டும். நாம் ஏற்கனவே பார்த்தபடி இந்தியாவில் ஒரு முழுமையான உணவுக் கொள்கை அமைப்பு செயல்படவே இல்லை. மாறாக, அவ்வப்போது ஏற்படும் அவசரங்களுக்கும் பங்குதாரர்களின் தாக்கத்திற்கும் தகுந்தபடி அமைகிறது. இப்படியான குறுகிய நோக்கத்தை சீர் செய்வது எளிதல்ல. ஆகவே, நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளை கவனத்தில் கொண்டு குறுகிய கால, மத்திய கால திட்டங்களை நாம் வகுக்க வேண்டும்.



குமார் மற்றும் மற்றவர்கள் 2011. கண்டுபிடிப்பின்படி பால் உற்பத்தியாளர்கள் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதற்கு பல காரணிகள் உள்ளன; உயர் அளவு விலை கிடைத்தால் மட்டுமே அது சாத்தியம். உணவு பாதுகாப்பு பிரச்சினைகளுக்கு பருவநிலை மாற்றமும் முக்கிய காரணமாக உள்ளது. உதாரணமாக, இந்திய கங்கை சமவெளிப் பகுதியில் உணவுப் பழக்க வழக்கங்கள் பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப மாறி வருகிறது (அகர்வால், மற்றவர்கள் 2004) மேற்கூறப்பட்ட அதிரடித் தீர்வுகள் முக்கியம் என்றாலும் நாம் உலக உணவு அமைப்பிலிருந்து மிகவும் விடுபட்டு இருக்கிறோம்.

## விவசாயத்திலிருந்து சத்துணவுக்கான வழிமுறைகள்

அவசரத்திற்கும், உடனடி தேவைக்குமான நிதி ஒதுக்கீடுக்கான ஒருங்கிணைந்த இயக்கம் தேவை. (தாஸ், ஷர்மா மற்றும் பாபு 2017)

நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளுக்கு ஏற்ப குறியீடுகளை அட்டவணைப்படுத்தினால் அடிப்படைச் சான்றுக்கு ஏற்ப கொள்கைச் செயல்பாடுகள் இருக்க முடியும். இத்தோடு கட்டாயம் அதி நவீன முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

•

# விளிம்புநிலை ஏழை, சிறுபான்மையினர் சமூக நலன் பெற

- உர்மி கோஸ்வாமி

எக்கனாமிக் டைம்ஸ் உதவி ஆசிரியர்

நீரில் படகு உயர்வதற்கு பெரு அலை வேண்டும். திரு.ஜான் F கென்னடி அடிக்கடி மேற்கோள் காட்டிய இந்தக் கூற்று தலைகீழாக போய்விட்டதோ? ஆம் அப்படித்தான் தோன்றுகிறது இந்திய நிலைமை. சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பொதுவாக தனிநபர்களுக்கும், குடும்பங்களுக்கும் அரசு அளிக்கக்கூடிய பொருளாதார பாதுகாப்பு மற்றும் சமூக நலன்களாகும். பாரம்பரியமாக, சில மக்களிடையே அல்லது பகுதியில் உள்ள குறைபாடுகளைக்களைய குறிப்பிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஆனால், இந்த அணுகுமுறை எல்லா சமயத்திலும் தேவையான விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. இதற்கு முக்கிய காரணம், சமூகப் பொருளாதார பாதுகாப்பு மற்றும் சமூக நலன்களின் குறியீட்டு அளவை உயர்த்தினால்தான் குறிப்பிட்ட முயற்சிகளைத் தொடர முடியும். அதற்காகத்தான் அலைகள் உயர்ந்த அளவில் இருக்க வேண்டும். அப்போதுதான் மேலும் உதவி தேவையானவருக்கு திட்டங்களை வகுத்து அவர்களுடைய படகு, உயர்ந்து வரும் இலக்குகளுக்கு மேல் உயர்ந்து பயிணிக்க முடியும்.

இந்த உயர்ந்த எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்ய கல்வி, மருத்துவ வசதி, வாழ்க்கைத்தரத்தை உயர்த்த ஏதுவான திறன்கள் ஆகியவை பயனளிக்கும். ஒரு நல்ல அரசு, மக்களின் சமூக நிலைமைகளை அறிந்து, அதிலும் குறிப்பாக மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமைகளை அறிந்து அதற்கேற்ற முயற்சிகளை எடுக்க முடியுமா என்று பார்க்க வேண்டும்.

மக்களின் நல்வாழ்வைப் பேணுவதில் அவர்களை சமூக, ஜாதிய, மத அடிப்படையில் பிரித்து செயல்படுத்த முடியுமா அது, அறிவுடைமையாகுமா?. இந்திய மக்களின் தேவைகள் எண்ணற்றவை. கோடிக்கணக்கான மக்கள் ஏழ்மையிலும் புறக்கணிப்பிலும் வாழ்வதிலிருந்து நல்ல வாழ்க்கைக்கு மீள்வதற்கு வேண்டிய நிலைத்து நிற்கும் முயற்சிகளை மேற்கொள்வதே ஒரு அரசின் மிகப்பெரிய பொறுப்பாகும். இந்த அடிப்படைத் தத்துவம்தான் ஒரு அரசின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களின் மையக் கருத்தாக இருக்க வேண்டும். அதே சமயம், சில சமுதாயங்கள் அல்லது மக்கள் தொகையில் சில பிரிவினரின் பொருளாதாரக் குறைபாடுகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சமூக அந்தஸ்து காரணமாகவும் மிகவும் நலிவுற்று சமுதாயத்தில் உயரத் திணறுகிறார்கள். ஆகவே, அரசு கூடுதல் முயற்சியை மேற்கொண்டு ஒவ்வொரு சமூகத்தின் தனித் தேவைகளுக்கு ஏற்ப திட்டங்களை செயல்படுத்தி அவர்களுக்கு வாய்ப்புகளை அளித்து வாழ்க்கையில் உயர வழி செய்ய வேண்டும்.

பொருளாதார மற்றும் சமூகப் பின்னடைவுகளை சீர்செய்ய பொதுவான மற்றும் குறிப்பிட்ட முயற்சிகள் இரண்டையும் ஒரே சமயத்தில் மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே, அரசு பொதுவாக செயல்படுத்தும் திட்டங்களைக் கருத்தில் கொள்ளாமல், சிறுபான்மையினர், தலித்துக்கள் மற்றும் பழங்குடி மக்களுக்கான சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களை மட்டும் நாம் பார்த்தால் அது சரியான நிலைமையைக் காட்டாது. முற்காலத்து சமூக சீர்திருத்தவாதிகளான ஈஸ்வர் சந்திர வித்யாசாகர், விவேகானந்தர் ஆகியோர் ஒரு சமுதாயத்தை மேம்படுத்த முதலில் பெண்களுக்கு கல்வியளித்து அவர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டும் என்று கூறினார்கள். கிராமப்புறங்களில், பெண்களுக்கான குழு நிதி வழங்கல் எப்படி அவர்களுடைய சமூகப் பொருளாதார நிலைமையை மாற்றியமைத்துள்ளது என்பதை நாம் சமீப காலங்களில் காண்கிறோம். இந்த வகையில்தான் அரசின் உஜ்வலா திட்டத்தை நாம் பார்க்க வேண்டும். இந்த திட்டம், எந்தவொரு மத அல்லது ஜாதி பிரிவினருக்காகவோ, குறிப்பிட்டு செயல்படாமல் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள எல்லா குடும்பங்களுக்கும் செயல்படுத்தப்படுகிறது. ஆனாலும், இந்தியாவில் ஜனத்தொகை அமைப்பை பார்க்கும் போது, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களில் உள்ள இரண்டு கோடி பயனாளிகளில் (ஏப்ரல் 3, 2017 வரை) பெரும்பான்மையானவர்கள் ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியின மக்கள் மற்றும் இஸ்லாமிய மதத்தை சேர்ந்த பெண்களாகத்தான் இருப்பார்கள். 2016இல் பிரதமர் திரு.நரேந்திர மோடியால் துவங்கப்பட்ட இந்த

திட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களில் உள்ள மகளிருக்கு ஐந்து கோடி இயற்கை எரிவாயு வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால், ஒரு மணி நேரத்தில் 400 சிகரெட்டுகளுக்கு சமமான விறகு மற்றும் வரட்டிக் கொண்டு சமையல் செய்து உடல்நலம் பாதித்தவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது.

விறகு மற்றும் வரட்டி பயன்படுத்தி உடல்நலம் சீர்கெட்டு அவருடைய குடும்பமும் நலிந்த நிலையில் இந்தவொரு திட்டம் மட்டுமே மகளிர் குழந்தை உட்பட முழுகுடும்பத்தின் உடல்நலம் பேணும் முயற்சியாக அமைந்துள்ளது. இதன் காரணமாக, இந்தக் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் நன்றாக படிக்க முடிந்தது, சுவாசக் கோளாறினால் மருத்துவத்திற்கு செலவிடப்பட்ட தொகை குறைந்து அவர்களுடைய நோய் எதிர்ப்புத் தன்மையும் அதிகரித்துள்ளது. இது மாபெரும் வெற்றியாகும். நலம் மிகுந்த குடும்பத்தில் குழந்தைகளும் நலமாக இருப்பார்கள். நன்றாக கல்வி கற்பார்கள். இதனால், அவர்கள் வறுமையிலிருந்து வெளிவர வழியுண்டு.

ஆனால், இது ஒரு துவக்கம்தான். ஜன்தன் திட்டத்தைப் பாருங்கள். இதுவும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்காக செயல்படுத்தப்படவில்லை. வங்கிச் சேவைகளில் இடம் பெறாதவர்கள் அனைவருக்குமாக அமைந்தது. இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு சேமிப்புக் கணக்கு, வைப்புக் கணக்கு, பணம் செலுத்துதல், கடன் வாங்குதல், காப்பு வசதி, ஓய்வூதியம் பெறுதல் மற்றும் பிற வசதிகளை குறைந்த செலவில் பெற முடியும். இந்தத் திட்டத்தின்கீழ் கணக்கில் பணம் இல்லாமலேயே அவர்கள், கடன் மற்றும் பற்று அட்டைகளைப் பெற முடியும். இவை இரண்டும் இதுவரை வசதி படைத்தவர்களுக்கே கிடைத்து வந்தன. இந்த திட்டத்தின் மூலம் அரசின் பயன்களான கல்விச் சலுகைகள், ஓய்வூதியங்கள் மானியங்கள் ஆகியவை பயனாளிகளின் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும். இடைத்தரகர்களிலிருந்து விடுதலை பெறுவது மட்டுமல்லாமல், இந்த திட்டத்தின் மூலம் அனைத்து மக்களுக்கும் சமூக மற்றும் பொருளாதார முன்னுரிமைகள் அளிக்கப்படுகின்றன.

இந்தப் பொதுவான திட்டங்களின் அடிப்படையில், குறிப்பிட்ட திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த முடியும். சிறுபான்மையினருக்காக செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் அந்தப்பிரிவினரின் குறிப்பிட்ட சில நிலைமைகளை சார்ந்த திட்டங்களாக இருக்க வேண்டும். கூடவே, பொதுவான சமூகப் பாதுகாப்பும், நலத் திட்டங்களும் இடம் பெற வேண்டும். இவர்கள், சமூகத் தடைகளை மீறி பொருளாதார வலிமை பெற்று சமுதாயத்தில் உயர ஏதுவான திட்டங்களை வகுக்க வேண்டும். ஆகவே, சிறுபான்மையினருக்கு செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு திட்டங்கள், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அதிகாரமயமாக்கல் ஆகியவைகளை சார்ந்திருக்க வேண்டும்.

அரசு, புதிய இலக்கு மற்றும் திறன் மேம்பாடு மற்றும் கைவினைத் தொழில் பயிற்சித் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களை 2014-15 மற்றும் 2015 -16 ஆம் ஆண்டுகளில் அறிவித்துள்ளது. இதனால், சிறுபான்மையின மக்கள் பொதுவான மேம்பாட்டுப் பாதையில் செல்ல வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய இலக்குத் திட்டம், சிறுபான்மையின குழந்தைகள் பள்ளியிலிருந்து விடுபடும் போது, அவர்களுக்கான கல்வி மற்றும் திறன் மேம்பாட்டிற்காகவும் இந்த சமுதாயத்தின் பாரம்பரிய கைவினைஞர்களின் கலைகளைக் காப்பாற்றியும் அவர்களுக்கு அதிக பயிற்சியும் அளிக்க வழிவகை செய்கிறது. 2016-17 பட்ஜெட்டில் புதிய இலக்கு திட்டத்திற்கு 175 கோடி ரூபாயும் கைவினைஞர் களுக்கு ரூபாய் 22 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு திட்டங்களிலும் அடிப்படையான கல்வி, திறன் மேம்பாடு மற்றும் வாழ்வுரிமைக்காக மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டங்களினால், சிறுபான்மைத் துறை அமைச்சகம் கல்வி மானியம் வழங்குவதில் மிகப்பெரிய வெற்றியைக் கண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. 1,82,00,000 மாணவர்களுக்கு சுமார் 4,740 கோடி ரூபாய் அளவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் பேகம் ஹஸ்ரத் மஹல் கல்வி உதவி திட்டத்தின் கீழ் 1,38,426 மாணவியருக்கு ரூ.166 கோடி வழங்கப்பட்டுள்ளது. 40 சதவிகிதம் பெண்கள் உட்பட 5,20,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு சார்ந்த திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. 33 பட்டப்படிப்பு கல்லூரிகள் 223 பல்நோக்கு சத்பவ் மண்டபங்கள் மற்றும் 18 குருகுல முறையிலான தங்கிப் படிக்கும் பள்ளிகள் கடந்த ஆறு ஆண்டுகளில் துவக்கப்பட்டுள்ளன.

மற்ற சில திட்டங்களையும் பாருங்கள்- கல்விக்கான இயக்கம் ‘‘தெரிக் இ-தலீம்’’, கைவினைப் பொருட்கள் கலைஞர்கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய ‘‘ஹீனார் ஹார்ப்’’ திட்டம், அதைப்போலவே, கைவினைப் பொருட்களை விற்பனை உற்பத்தி மையங்களை அமைத்தல்,

சீர்மிகு கலைஞர்கள் விருது, உலகத்தரம் வாய்ந்த ஐந்து கல்வி நிறுவனங்கள் அமைத்தல், சிறுபான்மையினர் வசிக்கும் பகுதிகளில் 100 குருகுல நவோதயா மாதிரி பள்ளிகள் ஆகியவை அனைத்தும் இவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு முயற்சிகளாகும்.

மேற்கூறப்பட்ட எல்லா திட்டங்களும் பயன் பெறுபவர்களுக்கு கல்வியும் வேலை வாய்ப்பும் அமைக்கும் திட்டமாகும். இது ஒரு நல்ல தரமான முயற்சியாகும். புது ஒளி என்ற திட்டம் மூலம் பெண்களுக்குப் பயிற்சி அளிப்பதும் அரசின் ஒரு முக்கிய திட்டமாகும். சமூக நலன் பேண பெண்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும். அரசின் மற்றொரு பார்வை, இளைஞர்கள் மேம்பாடு. மானஸ் என்ற திட்டம் மூலம் இளைஞர்களுக்கு தொழில் முனைவுத் திறன்கள் அளிக்கப்படுகின்றன.

ஆனால், உண்மையில் அரசு மேலும் பலவற்றை செய்ய வேண்டியது உள்ளது. அரசு மேற்கொள்ளக்கூடிய மற்றும் அவசியமான ஒரு முக்கிய முயற்சி கல்வித்துறையில்தான் உள்ளது. மக்களுக்கு கல்விசார் வாய்ப்புக்களை அதிகரிக்க வாய்ப்புக்களை மேம்படுத்த வேண்டும். கல்வி மட்டும்தான் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தி அவர்களுக்கு சமூகப் பொருளாதார மேம்பாட்டு வாய்ப்புக்களை வழங்க முடியும். விளிம்பு நிலையிலும் ஏழ்மையிலும் உள்ள சமுதாயங்களிலும் பொதுக்கல்வி நுழைய முடியாத சமுதாயங்களிலும் உள்ள குழந்தைகளுக்கும் கல்வி அளிக்க பெருமளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்படிப்பட்ட சமூகங்களுக்கு மேலும் பல பள்ளிகளையும், ஆசிரியர்களையும் நியமிக்க அரசு அதிக முதலீடு செய்ய வேண்டும். இந்தப் பள்ளிகளில் கழிவறைகள் மற்றும் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளிலிருந்து நூல்நிலையங்கள் வரை அனைத்து வசதிகளும் அமைக்கப்பட வேண்டும். இந்த சமூக குழந்தைகளுக்கு கல்வி மானியங்கள் அளிக்கப்பட்டு அவர்கள் உயர் கல்வி பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும். கல்வியிலும் எதிர்காலத்திற்கான வாய்ப்புகளுக்கும் அதிகம் முதலிடுவதே அரசின் மிக முக்கியமான சமூக பாதுகாப்பு முதலீடாகும். மற்றவை எல்லாம் அவர்கள் மூழ்காமல் இருப்பதற்காக செய்யப்படும் சிறிய முயற்சிகளேயாகும்.

●



# இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதியத் தேசியத் திட்டம்

- அமுதவள்ளி

சமூக நலத்துறை இயக்குநர் - சென்னை

**சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்:**

தமிழ்நாடு அரசு சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைக் காப்பாற்ற சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. ஆதரவற்ற மற்றும் ஏழை, வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள், விதவைகள், வேளாண் தொழிலாளர்கள், விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயது மற்றும் அதற்குமேல் வயதுடைய திருமணமாகாத பெண்கள் ஆகியோர் பயனடைந்து வருகின்றனர். சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 1,000/- ஆக 2011 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வூதியத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 2015-16 ஆம் ஆண்டிற்கு ரூ. 3,962.81 கோடியாக உயர்ந்துள்ளது. 31.3.2016 அன்று 30.74 இலட்சம் பயனாளிகள் கீழ்க்காணுமாறு பயன்பெற்று வருகின்றனர். 20 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் விவரம் வரிசை எண். திட்டத்தின் பெயர் பயனாளிகளின் எண்ணிக்கை 31.3.2016 வரை:

1. இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம்-1359010
2. இந்திராகாந்தி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் தேசியத் திட்டம்-58355
3. இந்திராகாந்தி விதவைகள் ஓய்வூதியத் தேசியத் திட்டம்-558073
4. மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம்-207422
5. ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம்-425335
6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்-321493
7. ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம்-118909
8. 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத்திட்டம்-21165
9. இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம்-4461

மொத்தம்-30,74,223 மேலும், அவர்களின் அசையாத சொத்தின் மதிப்பு ரூ. 5,000/-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும் என்கிற விதியும் தளர்த்தப்பட்டு, தற்பொழுது ரூ. 50,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 27, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 22.2.2016இன் படி மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் பெற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கியும், ஊனத்தின் தன்மை 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகக் குறைத்தும் ஊனமுற்றோருக்கு ஓய்வூதியம் வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. இத்திட்டமானது மத்திய அரசால் வழங்கப்படும் மானியத் தொகையுடன், மாநில அரசின் நிதிபங்களிப்பும் சேர்த்து தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது.

உயிர்ப் அடையாள அட்டையைப் பயன்படுத்தி, பயனாளிகளை உறுதி செய்து வங்கிகள் மூலம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்களை வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. 31.3.2016 அன்று மொத்தமுள்ள 30.74 இலட்சம் பயனாளிகளில் 23.46 இலட்சம் பயனாளிகளுக்கு வங்கிகள் மூலமாகவும் இதர பயனாளிகளுக்கு அஞ்சலகங்கள் மூலமாகவும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளி பண்டிகையின் போது சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளில் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் உள்ள 23 பயனாளிகளுக்கு கீழ்க்கண்டவாறு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது.

- அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒருமுறை 4 கிலோ சன்னரக அரிசி.
- அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒருமுறை 2 கிலோ வீதம் சன்னரக அரிசி.

**இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பிக்க வேண்டிய முகவரி மற்றும் இதர விவரங்கள் பின்வருமாறு.**

| | | |
|---|---|---|
| 1 | திட்டத்தின் பெயர் | இந்திரகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் |
| 2 | திட்டத்தின் குறிக்கோள் | வறுமை கோட்டிற்குக் கீழ் வாழும் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல். |
| 3 | வழங்கப்படும் உதவி | மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000/- |
| 4 | தகுதியுடையோர் | ➢ ஆதரவற்றவராக இருத்தல்<br>➢ 60 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்<br>➢ வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியலில் இருத்தல் வேண்டும் |
| 5 | தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் | ➢ குடும்ப அட்டை நகல் / ஆதார் அட்டை<br>➢ வயது குறித்த சான்று |
| 6 | அளிக்கப்படும் இதர உதவிகள் | ➢ ஆண்டுக்கு இருமுறை தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைகளுக்கு ஆண் ஓய்வூதியதாரர் நபர் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஓய்வூதியதாரர் நபர் ஒருவருக்கு ஒரு சேலையும் இலவசமாக வழங்கப்படும்.<br>➢ சத்துணவு சாப்பிடுபவர்களுக்கு மாதம் 2 கிலோ அரிசியும், சத்துணவு சாப்பிடாதவர்களுக்கு மாதம் 4 கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்படும். |
| 7 | எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும் | ➢ மாவட்ட ஆட்சியர்<br>➢ தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>➢ தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) |
| 8 | உத்தரவு வழங்கும் அலுவலர் | தனி வட்டாட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) |
| 9 | நடவடிக்கைகளில் அல்லது சேவையில் குறைபாடு இருப்பின் எவருக்கு முறையீடு செய்ய வேண்டும் | ➢ தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)<br>➢ சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்<br>➢ மாவட்ட ஆட்சியர் |

## பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்கும், அவர்கள் நலன் காக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் உத்திரவாதமும், அங்கீகாரமும் அளித்து உறுதி செய்யப்பட்டுள்ளவாறு, சட்டரீதியான பாதுகாப்பை அளிக்கக்கூடிய பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007 இம்மாநிலத்தில் 29.09.2008 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மூத்த குடிமக்கள், பெற்றோர் பராமரிப்பு நல விதிகள் உருவாக்கப்பட்டு, 31.12.2009 அன்று அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தனது குழந்தைகள் / வாரிசுதாரர்களிடமிருந்து பராமரிப்புத் தொகை கோரி பெற்றோர் மற்றும் மூத்தகுடிமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களை விரைந்து தீர்வு செய்ய ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்டத் தீர்ப்பாயம் ஒன்று இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட சமூக நல அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் பராமரிப்பு அலுவலர்களாகவும், சமரச அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தீர்ப்பாயத்தின் ஆணைக்கெதிராக மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவரைத் தலைவராகக் கொண்டு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2016-17 ஆம் ஆண்டு வரையில் 2010 விண்ணப்பங்கள் இச்சட்டத்தின் கீழ் பெறப்பட்டு 1547 வழக்குகள் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளன.

## இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள்

பெற்றோர் அல்லது மூத்த குடிமகன் தன்னுடைய வருமானத்திலிருந்தோ அல்லது தன்னுடைய சொத்துக்களிலிருந்து வரும் வருவாயிலிருந்தோ தன்னைப் பராமரித்துக் கொள்ள இயலாத நிலையில் இருந்தால் தன்னுடைய பிள்ளைகள் அல்லது சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து பராமரிப்புத் தொகையைக் கேட்டுப்பெற இச்சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புத் தொகை கோரி பெறப்படும் மனுக்கள் 90 நாட்களுக்குள் தீர்வு செய்யப்பட வேண்டும்.
- மூத்த குடிமக்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள் தீர்ப்பாயத்தின் ஆணையைச் செயல்படுத்தத் தவறினால் அபராதம் மற்றும் சிறைத்தண்டனை முழுவதுமாகவோ அல்லது ஒவ்வொரு மாத பராமரிப்புச் செலவுக்கு ஏற்றாற்போன்றோ வழங்க தீர்ப்பாயம் ஆணையிடலாம் அல்லது ஒரு மாதம் வரை சிறைத்தண்டனை அல்லது அத்தொகையைச் செலுத்தும் காலம் வரை சிறைத்தண்டனை அளிக்கப்படும்.
- பராமரிப்புத் தொகை ஒரு மாதத்திற்கு ரூ. 10,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- விசாரணை நிலுவையில் இருக்கும் பட்சத்தில், மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்காக மாதாந்திர பராமரிப்புத் தொகையினை அளிக்கக் கோரி அவர்களின் பிள்ளைகள் அல்லது உறவினர்களுக்கு தீர்ப்பாயம் இடைக்கால உத்தரவிடலாம்.
- மூத்த குடிமக்களின் பாதுகாப்பான பராமரிப்பிற்கு பொறுப்பான நபர், அம்மூத்த குடிமக்களை எங்காவது நிராதரவாக விட்டுச் சென்றால், அந்நபருக்கு 3 மாத சிறைத்தண்டனை அல்லது ரூ.5,000/- வரை அபராதத் தொகை அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனையாக அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | திட்டத்தின் பெயர் | பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007 |
| 2 | திட்டத்தின் நோக்கம் | பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களைப் பராமரிப்பதற்கும் நலன்காக்கவும் அரசியல் அமைப்புச் சட்டம் மற்றும் அதன் தொடர்புடையவைகளில் உத்தரவாதமும் அங்கீகாரமும் அளிக்கப்பட்டவைகளுக்கு தேவையான, சிறப்பான வழிவகைகளை செய்வது. |
| 3 | அளிக்கப்படும் உதவிகள் | பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் கீழ்கண்டவைகளின் மூலம் பாதுகாபப்பு அளித்தல்<br>➢ தீர்ப்பாயங்கள் அமைத்தல்<br>➢ மாவட்ட சமூக நல அலுவலர்களை பராமரிப்பு மற்றும் சமரச அலுவலர்களாகவும் நியமித்தல்<br>➢ தீர்ப்பாயம் வழங்கிய பராமரிப்புத் தொகை சம்பந்தமான ஆணைகளை செயல்படுத்துதல்<br>➢ முதியோர் இல்லங்களை ஏற்படுத்துதல் |
| 4 | பயனாளிகள் | பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் |
| 5 | அணுகவேண்டிய அலுவலர்கள் | வருவாய் கோட்டாட்சியர் / மாவட்ட சமூக நல அலுவலர் |
| 6 | மேல் முறையீட்டு அலுவலர் | மாவட்ட ஆட்சியர் |
| 7 | தீர்ப்பாயத்தின் பெயர் மற்றும் முகவரி | பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது |
| 8 | பராமரிப்பு அலுவலரின் பெயர் மற்றும் முகவரி | பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது |
| 9 | குறைகள் ஏதேனும் இருப்பின் தெரிவிக்க வேண்டிய அலுவலர் | மாவட்ட அளவில்:<br>மாவட்ட ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் /<br>மாவட்ட சமூக நல அலுவலர்.<br>மாநில அளவில்:<br>சமூக நல ஆணையர்,<br>2வது தளம், சிட்கோ கார்பரேட் அலுவலக பழைய கட்டடம்,<br>திரு.வி.க. இண்டஸ்டிரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை - 600 032. |

## தீர்ப்பாயங்களின் பட்டியல்

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | தீர்ப்பாயங்கள் |
|---|---|---|
| 1 | சென்னை | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), சென்னை, மைலாப்பூர் - திருவல்லிக்கேணி வட்டம் |
| 2 | சென்னை | மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர், சென்னை, மாம்பலம் - கிண்டி வட்டம் |
| 3 | சென்னை | சிறப்பு துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) பெரம்பூர், புரசைவாக்கம் வட்டம் |
| 4 | சென்னை | மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சென்னை, எழும்பூர் - நுங்கம்பாக்கம் வட்டம் |
| 5 | சென்னை | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நகர்புற நிலவரி), சென்னை, கோட்டை - தண்டையார்பேட்டை வட்டம் |
| 6 | கோயம்புத்தூர் | வருவாய் கோட்டாட்சியர், பொள்ளாச்சி |
| 7. | கோயம்புத்தூர் | வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர் |
| 8 | கடலூர் | வருவாய் கோட்டாட்சியர், விருத்தாசலம் |
| 9 | கடலூர் | வருவாய் கோட்டாட்சியர், கடலூர் |
| 10 | கடலூர் | வருவாய் கோட்டாட்சியர், சிதம்பரம் |
| 11 | தருமபுரி | வருவாய் கோட்டாட்சியர், அரூர் |
| 12 | தருமபுரி | உதவி ஆட்சியர், தருமபுரி |
| 13 | திண்டுக்கல் | வருவாய் கோட்டாட்சியர், கொடைக்கானல் |
| 14 | திண்டுக்கல் | வருவாய் கோட்டாட்சியர், பழனி |
| 15 | திண்டுக்கல் | வருவாய் கோட்டாட்சியர், திண்டுக்கல் |
| 16 | ஈரோடு | வருவாய் கோட்டாட்சியர், ஈரோடு |
| 17 | ஈரோடு | வருவாய் கோட்டாட்சியர், கோபிச்செட்டிப்பாளையம் |
| 18 | காஞ்சிபுரம் | வருவாய் கோட்டாட்சியர், மதுராந்தகம் |
| 19 | காஞ்சிபுரம் | வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் |
| 20 | காஞ்சிபுரம் | வருவாய் கோட்டாட்சியர், செங்கல்பட்டு |
| 21 | காஞ்சிபுரம் | வருவாய் கோட்டாட்சியர், காஞ்சிபுரம் |
| 22 | கன்னியாகுமரி | வருவாய் கோட்டாட்சியர், நாகர்கோவில் |
| 23 | கன்னியாகுமரி | வருவாய் கோட்டாட்சியர், பத்மநாபபுரம் |
| 24 | கரூர் | வருவாய் கோட்டாட்சியர், கரூர் |
| 25 | கரூர் | வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை |
| 26 | மதுரை | வருவாய் கோட்டாட்சியர், மதுரை |
| 27 | மதுரை | வருவாய் கோட்டாட்சியர், உசிலம்பட்டி |
| 28 | நாகப்பட்டினம் | வருவாய் கோட்டாட்சியர், நாகப்பட்டினம் |
| 29 | நாகப்பட்டினம் | வருவாய் கோட்டாட்சியர், மயிலாடுதுறை |
| 30 | நாமக்கல் | வருவாய் கோட்டாட்சியர், நாமக்கல் |
| 31 | நாமக்கல் | வருவாய் கோட்டாட்சியர், திருச்செங்கோடு |
| 32 | பெரம்பலூர் | வருவாய் கோட்டாட்சியர், பெரம்பலூர் |

| | | |
|---|---|---|
| 33 | புதுக்கோட்டை | வருவாய் கோட்டாட்சியர், புதுக்கோட்டை |
| 34 | புதுக்கோட்டை | வருவாய் கோட்டாட்சியர், அறந்தாங்கி |
| 35 | இராமநாதபுரம் | வருவாய் கோட்டாட்சியர், பரமகுடி |
| 36 | இராமநாதபுரம் | வருவாய் கோட்டாட்சியர், இராமநாதபுரம் |
| 37 | சேலம் | வருவாய் கோட்டாட்சியர், மேட்டூர் |
| 38 | சேலம் | வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி |
| 39 | சேலம் | வருவாய் கோட்டாட்சியர், ஆத்தூர் |
| 40 | சேலம் | வருவாய் கோட்டாட்சியர், சேலம் |
| 41 | சிவகங்கை | வருவாய் கோட்டாட்சியர், தேவகோட்டை |
| 42 | சிவகங்கை | வருவாய் கோட்டாட்சியர், சிவகங்கை |
| 43 | தஞ்சாவூர் | வருவாய் கோட்டாட்சியர், கும்பகோணம் |
| 44 | தஞ்சாவூர் | வருவாய் கோட்டாட்சியர், பட்டுக்கோட்டை |
| 45 | தஞ்சாவூர் | வருவாய் கோட்டாட்சியர், தஞ்சாவூர் |
| 46 | நீலகிரி | வருவாய் கோட்டாட்சியர், கூடலூர் |
| 47 | நீலகிரி | வருவாய் கோட்டாட்சியர், குன்னூர் |
| 48 | தேனி | வருவாய் கோட்டாட்சியர், பெரியகுளம் |
| 49 | தேனி | வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம் |
| 50 | திருவள்ளூர் | வருவாய் கோட்டாட்சியர், திருத்தணி |
| 51 | திருவள்ளூர் | வருவாய் கோட்டாட்சியர், பொன்னேரி |
| 52 | திருவள்ளூர் | வருவாய் கோட்டாட்சியர், திருவள்ளூர் |
| 53 | திருவாரூர் | வருவாய் கோட்டாட்சியர், திருவாரூர் |
| 54 | திருவாரூர் | வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி |
| 55 | தூத்துக்குடி | வருவாய் கோட்டாட்சியர், திருச்செந்தூர் |
| 56 | தூத்துக்குடி | வருவாய் கோட்டாட்சியர், கோவில்பட்டி |
| 57 | தூத்துக்குடி | வருவாய் கோட்டாட்சியர், தூத்துக்குடி |
| 58 | திருச்சிராப்பள்ளி | வருவாய் கோட்டாட்சியர், முசிறி |
| 59 | திருச்சிராப்பள்ளி | வருவாய் கோட்டாட்சியர், லால்குடி |
| 60 | திருச்சிராப்பள்ளி | வருவாய் கோட்டாட்சியர், திருச்சி |
| 61 | திருநெல்வேலி | வருவாய் கோட்டாட்சியர், சேரன்மாதேவி |
| 62 | திருநெல்வேலி | வருவாய் கோட்டாட்சியர், தென்காசி |
| 63 | திருநெல்வேலி | வருவாய் கோட்டாட்சியர், திருநெல்வேலி |
| 64 | திருவண்ணாமலை | வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை |
| 65 | திருவண்ணாமலை | வருவாய் கோட்டாட்சியர், செய்யார் |
| 66 | வேலூர் | வருவாய் கோட்டாட்சியர், வேலூர் |
| 67 | வேலூர் | வருவாய் கோட்டாட்சியர், இராணிப்பேட்டை |
| 68 | வேலூர் | வருவாய் கோட்டாட்சியர், திருப்பத்தூர் |
| 69 | விழுப்புரம் | வருவாய் கோட்டாட்சியர், திருக்கோவிலூர் |
| 70 | விழுப்புரம் | வருவாய் கோட்டாட்சியர், திண்டிவனம் |

| | | |
|---|---|---|
| 71 | விழுப்புரம் | வருவாய் கோட்டாட்சியர், கள்ளக்குறிச்சி |
| 72 | விழுப்புரம் | வருவாய் கோட்டாட்சியர், விழுப்புரம் |
| 73 | விருதுநகர் | வருவாய் கோட்டாட்சியர், அருப்புக்கோட்டை |
| 74 | விருதுநகர் | வருவாய் கோட்டாட்சியர், சிவகாசி |
| 75 | கிருஷ்ணகிரி | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி |
| 76 | கிருஷ்ணகிரி | உதவி ஆட்சியர், ஓசூர் |
| 77 | அரியலூர் | வருவாய் கோட்டாட்சியர், அரியலூர் |
| 78 | அரியலூர் | வருவாய் கோட்டாட்சியர், உடையார்பாளையம் |
| 79 | திருப்பூர் | வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் |
| 80 | திருப்பூர் | வருவாய் கோட்டாட்சியர், உடுமலைப்பேட்டை |
| 81 | திருப்பூர் | வருவாய் கோட்டாட்சியர், தாராபுரம் |

**மாவட்ட சமூக நல அலுவலர்கள் / பராமரிப்பு அலுவலர்கள், முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் பட்டியல்**

| வ.எண். | மாவட்டங்கள் | அலுவலக முகவரி | தொலைபேசி எண். |
|---|---|---|---|
| 1 | சென்னை | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>சிங்காரவேலர் மாளிகை, 8 ஆவது மாடி,<br>மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>ராஜாஜி சாலை, சென்னை - 600 001. | 044 - 25264568 |
| 2 | கோயம்புத்தூர் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம்,<br>கோயம்புத்தூர் - 641 018. | 0422 - 2305126 |
| 3 | கடலூர் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>அரசு சேவை இல்ல வளாகம்,<br>செம்மண்டலம், கடலூர் - 607 001. | 04142 - 221235 |
| 4 | தருமபுரி | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>தருமபுரி - 636 705 | 04342 - 233088 |
| 5 | திண்டக்கல் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம்,<br>அறை எண். 88,<br>திண்டக்கல் - 624 004. | 0451 - 2460092 |
| 6 | ஈரோடு | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம்,<br>ஈரோடு - 638 011. | 0424 - 2261405 |
| 7 | காஞ்சிபுரம் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>43, 2வது தெரு காந்தி நகர்,<br>ஐஓபி அருகில்,<br>காஞ்சிபுரம் - 631 502. | 044 -27239334 |
| 8 | கன்னியாகுமரி | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>30பி, ஆலன் தெரு, ஈகில் கேட்,<br>நாகர்கோவில் - 629 702,<br>கன்னியாகுமரி மாவட்டம். | 04652 - 278404 |

| | | | |
|---|---|---|---|
| 9 | கரூர் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>தாந்தோணிமலை,<br>கரூர் மாவட்டம் - 639 007. | 04324 - 255009 |
| 10 | கிருஷ்ணகிரி | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம்,<br>அறை எண். 20-21, பெங்களூர் மெயின்<br>ரோடு, கிருஷ்ணகிரி - 635 001. | 04343 - 235717 |
| 11 | மதுரை | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>பிளாட் நெம்பர் - 35, கிழக்கு 2வது<br>குறுக்குத் தெரு, கே.கே.நகர்,<br>மதுரை - 625 020 | 0452 - 2580259 |
| 12 | நாகப்பட்டினம் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>பால்பண்ணைசேரி,<br>நாகப்பட்டினம் - 611 001. | 04365 - 253045 |
| 13 | நாமக்கல் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>2வது தளம், திருச்செங்கோடு ரோடு,<br>நாமக்கல் - 637 003. | 04286 - 280230 |
| 14 | நீலகிரி | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>எண். 54/1, இ 14, அன்னதானி மாளிகை,<br>ஸ்டேட் பாங்க் லைன், ஊட்டி,<br>நீலகிரி மாவட்டம் - 643 001. | 0423 - 2443392 |
| 15 | திருவண்ணாமலை | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>2வது தளம், வேங்கிக்கால்,<br>திருவண்ணாமலை - 606 604. | 04175 - 233810 |
| 16 | திருவள்ளூர் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம்,<br>திருவள்ளூர் - 602 001. | 04366 - 224280 |
| 17 | திருவாரூர் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>அறை எண். 5,<br>திருவாரூர் - 610 001. | 04366 - 224280 |
| 18 | திருச்சிராப்பள்ளி | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>திருச்சிராப்பள்ளி - 620 020. | 0431 - 2413796 |
| 19 | தூத்துக்குடி | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>ட.பி.புரம் 10வது தெரு,<br>சங்கரநாராயணபிள்ளை பூங்கா பின்புறம்,<br>தூத்துக்குடி - 628 002. | 0461 - 2325606 |
| 20 | வேலூர் | மாவட்ட சமூக நல அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>பி.பிளாக், 4வது தளம், சத்துவாச்சேரி,<br>வேலூர் - 632 009. | 0416 - 2252663 |

| | | | |
|---|---|---|---|
| 21 | விழுப்புரம் | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், மாஸ்டர் பிளான் காம்ப்ளக்ஸ், சிருச்சி சாலை, விழுப்புரம் - 605 602. | 04146 - 222288 |
| 22 | விருதுநகர் | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், விருதுநகர் - 626 002. | 04562 - 252701 |
| 23 | பெரம்பலூர் | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், தரைதளம், பெரம்பலூர் - 621 212. | 04328 - 224122 |
| 24 | புதுக்கோட்டை | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடம், புதுக்கோட்டை - 622 005. | 04322 - 222270 |
| 25 | இராமநாதபுரம் | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராமநாதபுரம் - 623 501. | 04567 - 230466 |
| 26 | சேலம் | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், முதல் தளம், சேலம் - 636 001. | 0427 - 2413213 |
| 27 | சிவகங்கை | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சிவகங்கை - 630 562. | 04575 - 240426 |
| 28 | தஞ்சாவூர் | மாவட்ட சமூக நல அலுவலர், 136, நாஞ்சிக்கோட்டை சாலை, உழவர் சந்தை அருகில், தஞ்சாவூர் - 613 006. | 04362 - 258501 |
| 29 | தேனி | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தேனி - 625 531. | 04546 - 254368 |
| 30 | திருநெல்வேலி | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருநெல்வேலி - 627 009. | 0462 - 2501722 |
| 31 | திருப்பூர் | மாவட்ட சமூக நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், ரூம் நெம்பர் - 58 காட்டன் மார்கெட் அருகில், பல்லடம் ரோடு, திருப்பூர் - 641 104. | 0421 - 2218220 |
| 32 | அரியலூர் | மாவட்ட சமூக நல அலுவலர், ஜி.கே.எஸ்.காம்ப்ளக்ஸ், கள்ளக்குறிச்சி ரோடு, அரியலூர் - 621 704. | 04329 - 228516 |

**மத்திய அரசால் நடத்தப்படும் முதியோருக்கான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்கள்**

முதியோருக்கான ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்கள் (IPOP) என்பது மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம் முதியோர்களுக்கு உறைவிடம், உணவு மருத்துவ சேவை மற்றும் பொழுதுபோக்கு

தேவைகளைத்தருவதன் மூலம் அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட வாழ்க்கைத் தரத்தை வழங்குவதுடன், அவர்கள் தங்களின் முதுமைப்பருவத்தை உபயோகமாகவும் உயிரோட்டத்துடனும் எதிர்கொள்வதற்கான சூழலை அரசு / தொண்டு நிறுவனங்கள் / ஊராட்சி மன்றங்கள் / உள்ளாட்சி மற்றும் சமூகத்திற்கு மானிய நிதியுதவி அளித்தல்.

### திட்டத்தின் நோக்கம்

தனியார் தொண்டு நிறுவனங்கள் / இதர நிறுவனங்களுக்கு கீழ்க்காணும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உதவி செய்தல்.

1 முதியோர் அடிப்படை தேவைகளான உணவு, உறைவிடம் மற்றும் ஆரோக்கிமாக வாழ்வதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்கள் - முதியோர் இல்லங்கள், பகல் நேரப் பராமரிக்கும் இல்லங்கள்.

2 முதியோருக்கும் இளையதலைமுறையினருக்கும் இடையிலான உறவுநிலை கட்டப்படுவதற்கும் சிக்கலின்றி வலுவடைவதற்குமான திட்டங்கள் - பள்ளி / கல்லூரி மாணவர்களிடையே முதியோரைப் பேணவும், முதுமைக்கு மதிப்பளிக்கவும் ஊக்குவித்தல்.

3 முதியோர் முதுமைப் பருவத்தை உபயோகமானதாகவும், உயிரோட்டமுள்ளதாகவும் கழித்திட உதவி செய்திடும் திட்டங்கள் - நடமாடும் மருத்துவ மையங்கள், பல்நோக்கு சேவை மையங்கள், முதியோருக்கான தசைப்பயிற்சி, மறதி நோயுள்ளவர்களுக்கான மருத்துவ சிகிச்சை.

4 முதியோருக்கான நிறுவனமயமாக்கப்பட்ட இதர சேவைகள் அளிக்கும் திட்டங்கள் உதவி மற்றும் ஆலோசனை மையம்.

5 ஆராய்ச்சி, வாதுரை (ம) விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தும் திட்டங்கள் - பிராந்திய மற்றும் ஆராய்ச்சி மையம்.

6 முதியோர் நலன் மேம்படுத்தும் பிற நல்ல திட்டங்கள் - விழிப்புணர்வு முகாம்கள், முதியோருக்கான தன்னார்வ முகமை, முதியோர் சுயஉதவிக்குழுக்கள் / விர்தா சங்கங்கள்.

### தகுதி / நிபந்தனைகள்

1 சங்களுக்கான சட்டம் / பொது அறக்கட்டளை நிர்வாக செயல்பாடு குறித்த சட்டங்களின் கீழ் பதிவு பெற்று, உரிய சட்டத் திட்டங்கள், நோக்கங்கள் ஆகியவை ஜனநாயக மரபுப்படி உருவாக்கி செயல்படுத்துதல்.

2 நிதியுதவி பெறும் உறுப்பினர்களுக்கான அதிகாரம், கடமை, தொண்டு மற்றும் பொறுப்பு வரையறுக்கப்பட்டு தேர்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு எழுத்து மூலமாகத் தெளிவாக குறிப்பிடப்பட்டு செயல்பட வேண்டும்.

3 குறைந்தபட்சம் இரண்டாண்டுகள் முதியோருக்கான திட்டம் செயல்படுத்துவதில் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

4 இலாப நோக்கோடு செயல்படாமல் நல்ல திறனும் நற்பெயரும் கொண்ட நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

தமிழகத்தில் 2016-17 ஆம் நிதியாண்டில் 81 கருத்துருக்கள் 07.09.2016 அன்று நடைபெற மானியக்குழுக் கூட்டம் மூலம் ரூ. 733/- இலட்சம் மானியம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### மாநில அரசால் நடத்தப்படும் முதியோர் நலத்திட்டங்கள்

மனிதனின் வாழ்நாள் அதிகரித்து வருவதால் மக்கள் தொகையில் 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதோடு 60 வயதிற்கு மேற்பட்டோர் ஜனத்தொகையானது தற்போது 80 வயதிற்கு மேற்பட்டோர் ஜனத்தொகையாகவும் மாறியுள்ளது. இந்திய ஜனத்தொகையில் முதியோர் எண்ணிக்கை அடுத்த நான்காண்டுகளில் மேலும் கணிசமாக உயரும் என்றும், மொத்த ஜனத்தொகையில் 60 வயதுக்கு மேற்பட்டோர் எண்ணிக்கை 2050இல் 8 சதவீதம் வளர்ச்சியடையும் எனவும் ஐக்கிய நாடுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பிரிவின் 2011 புள்ளியில் ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அடுத்த அரை நூற்றாண்டில் இந்தியாவின் முதியோர் ஜனத்தொகை 323 மில்லியன் எண்ணிக்கையினைத் தாண்டக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மக்கள் தொகையில் அதிகரித்து வரும் முதியோர்களின் தேவைகளைப் பூர்த்தி

செய்வதற்காகவும், அவர்கள் பாதுகாப்பான, கௌரவம் மிக்க வாழ்க்கையினை வாழ்வதற்காகவும், தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை அவர்களது நலனுக்காக செயல்படுத்தி வருகிறது.

### முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கிடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் மாநிலத்தின் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் என்றும், இத்திட்டம் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களின் உதவியுடன் அவர்களது தார்மீக சமூகக் கடமைகளின் ஒரு பகுதியாக செயல்படுத்தப்படும் என்றும் 2011-12 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், அறிவிக்கப்பட்டது.

முதற்கட்டமாக, 32 மாவட்டங்களில் (ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இல்லங்கள் வீதம்) 64 முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்பட்டு, 05.09.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி மூலம் துவக்கி வைக்கப்பட்டது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகமும் 25 குழந்தைகள் மற்றும் 25 முதியோர் தங்கும் வசதியுடன் செயல்படுகிறது.

### மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்பெறும் முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசு மானிய உதவி அளித்து வருகிறது. இவ்வில்லங்களில் தங்கள் குடும்பங்களால் கைவிடப்பட்ட மற்றும் வசிப்பிடமற்ற 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற முதியோர்களின் வாழ்வைப் பாதுகாக்கும் பொருட்டு உணவு, உறைவிடம், உடை, மருத்துவ உதவி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் போன்றவை அளிக்கப்பட்டு வருகின்றன.

மாவட்டம் தோறும் ஒரு முதியோர் இல்லத்தினை அரசு தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தி வருகிறது. ஒரு இல்லத்தில் 40 முதியோர்களைப் பராமரிக்கும் பொருட்டு ஒரு இல்லத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 5.60 இலட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது.

### சர்வதேச முதியோர் தினவிழா கொண்டாடுதல்

முதியோர்களின் சேவைகளை அங்கீகரிக்கவும், அவர்களிடம் உள்ள அனுபவம், அறிவு ஆகியவற்றை வெளிக்கொணரவும், முதியோர் நலன் காக்க ஐக்கிய நாடுகள் சபை நிறைவேற்றி உள்ள தீர்மானத்தை நிறைவேற்றும் பொருட்டும், தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் நாள் அன்று மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் சர்வதேச முதியோர் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், மூத்த குடிமக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். மூத்த குடிமக்களுக்கு ஏற்ற உணவு பற்றிய பொருட்காட்சி நடத்தப்படுகிறது. இவ்விழாவில் கலந்து கொள்பவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மூத்த குடிமக்களின் நலன் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப் படுகின்றன.

இவ்விழாவின்போது மூத்த குடிமக்களின் தேவைகள் மற்றும் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம், 2007 குறித்து பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் கருத்தரங்குகள் மற்றும் போட்டிகள் நடத்தப்படுகின்றன. முதியோர்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனையும் நடத்தப்படுகிறது.

இவ்விழாவின்போது முதியோர்களின் நலனுக்காக சேவை புரியும் சிறந்த தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளர்கள் கௌரவிக்கப்படுகின்றனர். மேலும், இவ்விழாவில் முதியோர்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

•

# கல்வியில் மதிய உணவு மின்பதிவு விதி ஏற்படுத்தும் தாக்கம்

- கிரண் பட்டி

கொள்கை ஆய்வு மையத்தில் மூத்த ஆய்வாளர்

**அறிமுகம்**

சமூகப் பாதுகாப்பு என்பது மக்களின் பொதுவான நல்வாழ்வும் அதனை செயல்படுத்த உள்ள அமைப்பையும் குறிக்கும். இதன்படி குடிமக்கள் அனைவரும் கண்ணியத்தோடு வாழ்வதற்கு ஏதுவான பயன்களையும் சேவைகளையும் அளிப்பது அரசுகளின் கடமையாகும். ஆதிகாலத்தில் இதன் துவக்கம், சமூக ஒப்பந்தம் என்ற கூற்றின் அடிப்படையில் சுதந்திரமான சமமான எல்லா மக்களும் தங்களுடைய சமுதாய அமைப்பிலிருந்து பாதுகாப்பும் நலன்களையும் பெறுவதாகும். சமூக ஒப்பந்தம் என்பது ஒரு ஜனநாயக முறையிலான அரசின் அடித்தளமாகக் காணப்படுகிறது. சமூகப் பாதுகாப்பின் சரித்திரம் எப்போது துவங்கியது என்பது தெளிவற்று இருந்தாலும் ரோமானிய சாம்ராஜ்ஜியத்தில் ஏழைகளுக்கு இலவச உணவு தானியங்களை வழங்கிய சான்றுகளிலிருந்து பல ராஜ்ஜியங்கள் இதனை மேற்கொண்டுள்ளன. பிற்காலங்களில் 1601இல் ஆங்கிலேயர்களின் ஏழை சட்டங்கள் மற்றும் 1935இல் அமெரிக்க சமூகப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவைகள் சமூகப் பாதுகாப்பு விதிகளுக்கான மிகவும் முக்கியமான உதாரணங்களாக உள்ளன. ஆனால், மிகவும் பொதுவாக புரிந்துகொண்டு, ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சமூகப் பாதுகாப்புக் கொள்கையாக உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தின் (1948) ஷரத்து 22ஐ கருதலாம். அதன்படி "ஒரு சமூகத்தின் உறுப்பினர்களான ஒவ்வொருவருக்கும் சமூகப் பாதுகாப்பு உரிமை உண்டு" அதனை ஒவ்வொரு நாட்டின் நிர்வாக மற்றும் பிற வளங்களுக்கு ஏற்ப தேசிய மற்றும் பன்னாட்டு முயற்சிகளோடும், ஒத்துழைப்போடும் பெற உரிமை உண்டு. அது அவர்களுடைய தன்மான வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கும் தங்களை சுதந்திரமாக மேம்படுத்திக் கொள்ளவும் தேவையானவைகளாக அமையும்". உலகளவில் சமூகப் பாதுகாப்பு அம்சங்கள் பல வடிவங்களில் காணப்படுகின்றன. அது குடிமக்கள் அளிக்கும் தொகைக்கு ஏற்ப அளிக்கப்படும் ஓய்வூதியங்கள், வேலையின்மைக்கான காப்பு வசதி (சமூகக் காப்பு வசதி என்று பொதுவாக கூறப்படுகிறது) அல்லது மக்கள் அதற்காக பணம்



செலுத்தாத வகையில் சமூகப் பாதுகாப்பின் ஒரு அம்சமாக அரசே அளிக்கும் அடிப்படை வசதிகளான, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வி போன்ற அம்சங்களாக இருக்கலாம். இரண்டு வகைகளிலும் இது ஒரு ஜனநாயக சமூகத்தின் அடிப்படைத் தன்மைகளாக நாம் பார்க்க வேண்டும். இதன்படி மக்கள், சமூக அமைப்பு சார்ந்த ஏழ்மையிலிருந்தும் சமூக ஏற்றத் தாழ்வுகளிலிருந்தும் விடுபட்டு மேம்பட ஏதுவான வழிவகைகளை செய்வது அரசின் கடமையாகக் கருதப்படுகிறது.

இந்தியாவில், ஓய்வூதியங்கள் வேலை வாய்ப்பு உறுதி (வேலையின்மைக்கான இழப்பீடு உட்பட) மகப்பேறு பயன்கள், உணவு மானியங்கள் அல்லது பள்ளிகளில் உணவளித்தல் ஆகியன போன்ற பல திட்டங்கள் பெயரளவில் இருந்தாலும் அவைகளின் செயல்பாடு பெருமளவு சுமாராகவும் பலவற்றில் திருப்தி அளிக்காத நிலைமையிலும் உள்ளன. ஆகவே, எதார்த்தத்திலும் பல வெளியீடுகளிலும் பயன்கள் குறிப்பிட்ட மக்களுக்கு போய் சேராமல் இருப்பதை பல சமயங்களில் நாம் பார்க்கிறோம். அரசு பணியாளர்களின் அலட்சியம், இலஞ்சம் மற்றும் போதிய வளங்கள் இல்லாமை போன்ற பல காரணங்கள் இப்படி திறம்பட செயல்படுத்த முடியாமைக்குக் கூறப்படுகின்றன. ஆனால், இந்த திட்டங்களின் செயல்பாட்டில் தொடர் முன்னேற்றம் ஏற்படுத்த முடியாமை அல்லது தொடர்ந்து ஏற்பட்டு வரும் தோல்விகளைத் தவிர்க்க இயலாமை ஆகியவற்றால், பொது மக்கள் மட்டுமல்லாமல் அரசு அலுவலர்களும் ஏமாற்றத்தில் உள்ளனர். ஆகவே, அரசு நலத்திட்டங்களைபற்றிப் பேசும் போது, அவைகளின் தோல்வியே பெரும் விவாதப் பொருளாகிறது. ஆனால், அடிப்படைக் காரணங்கள் கவனிக்கப்படாமலே உள்ளன. மாறாக, இந்தக் குறைபாடுகளை களைவதற்கு அமைப்புக்கு வெளியே உள்ள தீர்வுகளைப் பரிசீலிக்கிறார்கள் (தனியார்மயமாக்கல், பொதுத்துறை தனியார் கூட்டுமுயற்சி ஆகியவை) அல்லது தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிறுசிறு மாற்றங்களை மட்டும் செய்கிறார்கள். இவைகளின் முக்கியமான முயற்சியாக மின் பதிவுசாதனங்களைக் கட்டாயமாக பயன்படுத்தி இலஞ்சத்தைக் குறைத்து குறிப்பிட்ட மக்களுக்கு பயன்களை அளிக்க வைத்தல் ஆகும். இந்த வகையில், மத்திய அரசிடமிருந்து வந்துள்ள சமீபத்திய அறிவிப்பு பள்ளிகளில் மதிய உணவு பெறும் குழந்தைகளுக்கு ஆதார் அடிப்படையிலான மின்பதிவு இருக்க வேண்டும்.

இந்தக் கட்டுரையில் கல்வியில் சமூகப் பாதுகாப்பாக மதிய உணவு திட்டம் எப்படி செயல்படுகிறது என்பது பற்றியும் தற்போது இதற்காக குழந்தைகள் மின்பதிவு அட்டைகளை பெற்றிருக்க வேண்டியது அவசியம் என்ற நிலையினால் இந்தத் திட்டம் செயல்படுவதில் ஏற்படும் தாக்கங்கள் பற்றியும் கவனிப்போம். இந்த புதிய அணுகுமுறையால் நன்மைகளைவிட தீமைகளே அதிகம் விளைந்து குழந்தைகளின் சத்துணவு மற்றும் கல்விப் பாதுகாப்பு சீர்குலைய உள்ளதாக இந்தக் கட்டுரை கூறுகிறது.

**மதிய உணவு திட்டம்**

சமூகப் பாதுகாப்பு மற்றும் கல்விக்கு இடையேயான இணைப்புகள் சிறப்பாக நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் அவை மிகவும் சிக்கலானவை. கல்வியைப் பெற பாதிக்கப்பட்ட பின்னணியில் உள்ள குழந்தைகளுக்கு சமூகப் பாதுகாப்பு தேவை. ஆனால், பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க அளிக்கப்படும் சமூகப் பாதுகாப்பிற்கு கல்வியே அடிப்படையாகவும் அமைகிறது. கல்வி மூலம் சமூகப் பாதுகாப்பு அளிப்பது என்பது சமூக மற்றும் பொருளாதார ஏழ்மை குடும்பங்களில் உள்ள குழந்தைகள் பள்ளி சென்று முழுமையாகக் கல்வி பெறுவதாகும். இவைகளாவன: ஏழைமக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே பள்ளிகள் அமைதல், கல்வி மானியங்கள், பிற ஊக்கங்கள், மதிய உணவு, பள்ளிசார் நல்வாழ்வு திட்டங்கள் மற்றும் முதல்முறையாக பள்ளிக்குச் சென்று படிக்கும் குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கே உரித்தான பிரச்சினைகள் சார்ந்த திட்டங்கள் ஆகியவையாகும். இந்தியாவில் மேற்கூறப்பட்ட அனைத்துமே அரசின் கல்விக் கொள்கைகளிலும், திட்டங்களிலும் உள்ளடங்கி உள்ளன. ஆனால், பல தரங்களில் பல செயல்பாட்டு நிலைமைகள் உள்ளன. ஆனால், மத்திய அரசின் மிகச்சிறந்த நல்ல செயல்பாடு மிக்க திட்டமாக பள்ளிக்குழந்தைகளின் மதிய உணவு திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம்.

குழந்தைகள் பசியோடு இருக்கும்போது அவர்களுக்கு கல்வி புகட்ட முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. இந்தியாவில் பசியும், சத்துணவுக் குறைபாடும் மிகுந்துள்ள நிலையில் குறிப்பாக குழந்தைகளில் இது காணப்படும் போது பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதால் குழந்தைகளுக்கு சத்துணவு கிடைப்பதோடு அவர்கள் பள்ளிக்கு சென்று நாள் முழுவதும் தங்கிப் படிக்கவும்

ஏதுவாகிறது. உண்மையில் மதிய உணவு திட்டத்தால் பலவகையான நற்பயன்கள் விளைகின்றன. உலகளாவிய ஆய்வுகளின்படி மதிய உணவுத் திட்டத்தால் பசி களையப்படுவதோடு, குழந்தைகள் அதிகமாகப் பள்ளியில் சேருகிறார்கள். தினமும் பள்ளிக்கு வருகிறார்கள். அவர்களுடைய கல்வி கற்கும் திறன்களும் மேம்படுகின்றன. உலகளவில் வளர்ந்த மற்றும் வளர்ச்சி பெறும் பெரும்பாலான நாடுகளில் ஏதாவது ஒரு வகையிலான பள்ளி மதிய உணவு திட்டம் உள்ளது. இந்தியாவில் சமைத்து

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 20 இலட்சத்திற்கும் மேலான பெண்கள் மதிய உணவு தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இது அல்லாமல், சமுதாயப் பின்னணிகள் ஏதும் இல்லாத வகையில் எல்லா குழந்தைகளும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்தும் பயனும் இதனால் கிடைக்கிறது. உள்ளூர் மக்கள் இந்தத் திட்டம் செயல்படுவதை கண்காணிப்பதால், பெற்றோரும் இந்த திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். சில இடங்களில் உள்ளூர் பொருட்களே பயன்படுத்தப்படுகின்றன.



வழங்கப்பட்ட மதிய உணவின் சரித்திரம் 1982ல் தமிழ்நாட்டில் இது எல்லா குழந்தைகளுக்குமாக அளிக்கப்பட்ட பள்ளி மதிய உணவுத் திட்டமாகத் துவங்கியது. 2001இல் உச்ச நீதி மன்றம் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் சமைத்து வழங்கப்பட்ட உணவு ஒரு சட்ட ரீதியான உரிமையாக கூறப்பட்டது. இன்றும் கூட பல குழந்தைகளுக்கு இந்த மதிய உணவுதான் அவர்கள் சாப்பிடும் முதல் உணவாக இருக்கிறது. தற்போது, இந்தியாவில் இந்த மதிய உணவு திட்டம் சுமார் 11.5 இலட்சம் பள்ளிகளில் 10 கோடி குழந்தைகளுக்கும் மேல் பயனளிக்கிறது. இந்தப் பள்ளிகளில் ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் மற்றும் பிற

இதனால், இந்தச் செயல்பாடுகளினால் குறைபாடுகளே இல்லை என்று கூறமுடியாது. மதிய உணவு வழங்குவதில் தவறுகள் ஏற்படுகின்றன - தொடர்ந்து வளங்கள் இல்லாமல், சுகாதாரக்குறைவு, உள்கட்டமைப்பு வசதி இல்லாமை, உணவில் போதுமான அளவு சத்துக்கள் இல்லாமை மற்றும் எத்தனைக் குழந்தைகள் இதனால் பயன்பெறுகிறார்கள் என்பதை கணக்கிட முடியாமை. இது மட்டுமல்லாமல் இந்த திட்டத்தைக் குறைகூறுபவர்கள் சொல்வது, ஆசிரியர்கள் இந்த பணிகளில் அதிகமாக ஈடுபட்டு கல்வி கற்றுக் கொடுப்பதில் குறைபாடுகள், ஏற்படுகின்றன என்பது குழந்தைகள் இந்த மதிய உணவுக்காக மட்டுமே பள்ளிக்கு வருவதாகவும்,

பிறகு சென்று விடுவதாகவும் ஆகவே அவர்கள் கல்வி பெறாமல் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இது மட்டுமல்லாமல் ஜாதி அடிப்படையில் பிரச்சினைகளும், தலித் குழந்தைகள் மற்றவர்களோடு சேர்ந்து உண்ண முடியாத நிலைமை அல்லது போதிய அளவு உணவு கிடைக்காமை ஆகியவைகளும் கூறப்பட்டுள்ளன. ஆகவே, மின்பதிவு முறையை பயன்படுத்துவதால் மட்டுமே இந்தக் குறைகள் எப்படி களையப்படும் என்று புரியவில்லை.

**மதிய உணவு திட்டத்தை சீர் படுத்த மின்பதிவு முறைகளைப் பயன்படுத்துவது**

மின்பதிவு முறையை மதிய உணவு திட்டத்திற்குப் பயன்படுத்துவதற்காக கூறப்படும் அரசு விளக்கமாவது: “ஆதார் அடையாள அட்டை அடிப்படையில் சேவைகளையும், மானியங்களையும் வழங்குவதால், வழங்கு முறை சீரமைக்கப்பட்டு, அதில் வெளிப்படைத்தன்மையும், செயல்பாட்டுத் திறமையும் உயர்கிறது” என்பதாகும். ஆனால், இந்த அடையாள அட்டை பலருக்கு வழங்கப்படாத நிலையில் ஆதார் அட்டை இல்லாதவர்களுக்கு மதிய உணவு கிடைக்காமல், மதிய உணவு பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை குறையுமே தவிர இந்த திட்டத்தை மேம்படுத்தாது. ஆகவே, இது, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் நோக்கமாக இருக்க முடியாது, குறிப்பாக குழந்தைகளுக்கான திட்டங்களுக்கு. இது மட்டுமல்லாமல், இந்த மின்பதிவு முறையைப் பயன்படுத்துவதால், வெளிப்படைத் தன்மை எப்படி ஏற்படுகிறது. யாருக்கு ஏற்படுகிறது. யார் பொறுப்பு ஏற்கிறார்கள். உணவு வழங்குவதில் சீரான நிலைமை இல்லாமல் இருப்பது, குறைந்த சுகாதாரம், உள் கட்டமைப்பு வசதி இல்லாமை, உணவில் சத்துக்கள் இல்லாமை போன்ற குறைபாடுகள் எப்படி களையப்படும் என்று தெரியவில்லை. இது, தனியார் பள்ளிகளில் படித்து அரசுப் பள்ளிகளில் மதிய உணவு சாப்பிடும் எண்ணிக்கையை ஒரு வேளை குறைக்கலாம். ஆனால், இப்படி மின்பதிவு முறையைக் கட்டாயப்படுத்துவதால், ஏற்கனவே, சத்துணவுப் பற்றாக்குறை உள்ள குழந்தைகள் பாதிக்கப்படுவதற்குதான் வாய்ப்புண்டு.

மேலும், ஆதாரைப் பயன்படுத்தி, இராஜஸ்தான், சத்தீஸ்கர், டெல்லி மற்றும் பிற இடங்களில் செய்யப்படும் பொது விநியோகத் திட்டம், ஓய்வூதியங்கள் மற்றும் பிற நேரடி பணப் பரிவர்த்தனைத் திட்டங்களின் செயல்பாடுகள் போதுமானதாக இல்லை. சுமார் 30 சதவிகித பயனாளிகள் பல பிரச்சினைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளாவன: பயன் பெறுபவர்களின் அடையாளத்தை உறுதி செய்தல், கைபேசி செயல்பாடுகள் பாதிப்பு, மின்சாரத்தடை ஆகியவை நாட்டின் பல பாகங்களில் தெரிய வந்திருக்கின்றன. அரசின் திட்டத்தின்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு குழந்தையின் அடையாளம் கண்டறிந்துதான் அவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுமா? அப்படியானால், தொழில்நுட்பக் குறைபாடு காரணமாக அவர்களுக்கு மதிய உணவு மறுக்கப்படுமா? அப்படி நேர்ந்தால் அதற்கு யார் பொறுப்பு?

மதிய உணவுத் திட்டம் செயல்படுவதில் உள்ள இலஞ்சத்தைக் குறைத்து, பொறுப்புகளை நிர்ணயிக்க பிற வழிகள் உள்ளன. அந்தந்த சமுதாய மக்களே கண்காணிப்பது, சமூகத் தணிக்கை, குறைதீர்ப்பு அமைப்பைப் பரவலாக்குவது, பயன்பெறும் குழந்தைகளின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவது, வழங்கப்படும் உணவின் பட்டியலை வெளியிடுவது போன்றதாகும். ஆகவே, இந்தப் புதிய அறிவிப்பு வெளிப்படுத்துவது எல்லாம் சமுதாயத்தில் குழந்தைகள் மீதான அக்கறை இல்லாமையே. அவர்களின் உடல்நலம் மற்றும் கல்வி அளவு சார்ந்த தகவல்கள் இல்லாமை முதல்கொண்டு அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், அநீதிகள், அவர்களுடைய உரிமைகள் மறுக்கப்படுவது ஆகியவை தொடர்ந்து கவனிக்கப்படாமல் இருக்கின்றன. குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் ஒரு நல்ல திட்டத்தில் இப்படிப்பட்ட மாற்றங்கள் நன்மைகளைவிட தீமைகளையே பயக்கும். ஆகவே, இனி நாம் நம் குழந்தைகளுக்கு எப்படி நலன்களை ஏற்படுத்த முடியும், ஒரு சுமுகமான சூழ்நிலையில் எப்படி அவர்களுக்கு ஒரு நல்ல சூடான உணவை அளிக்க முடியும், எப்படி நல்ல கல்வியை அளிக்க முடியும். தங்களை நம்பி இருக்கும் குழந்தைகளுக்கு ஆசிரியர்களும், மற்றவர்களும் எப்படி மனித நேயத்தோடு செயல்பட வேண்டும் என்று பார்க்க வேண்டும். ஆசிரியர்களும், மற்றவர்களும் இலஞ்சம் இல்லாமல் செயல்பட்டு வெளிப்படையாகவும் பதில் சொல்லும் வகையிலும் இருக்க வேண்டும். சமூக ஒப்பந்தக் கொள்கையில் ஜனநாயக நாட்டில் குடிமக்களும், குழந்தைகளும் எப்படிப் பயணிக்கிறோம் என்று பார்க்க வேண்டும். மின்பதிவு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு ஏற்பது என்ற நம்முடைய பிடிவாதக் கொள்கைகளுக்காக நாம் நம் குழந்தைகளின் சமூகப் பாதுகாப்பை பலி கொடுக்கப் போகிறோமா?

●

# அமைப்புசாரா பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு - சவால்களும் போக வேண்டிய பாதையும்

- Dr. ரூமா கோஷ்

தொழிலாளர், வேலைவாய்ப்பு மத்திய அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டுவரும் வி.வி.கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிறுவனத்தில் ஆசிரியர்

**அறிமுகம்**

ஒரு நியாயமான சமத்துவ சமுதாயத்திற்கு சமூகப் பாதுகாப்பு மிகவும் இன்றியமையாததாகும். இதற்காகத்தான் சமூகப் பாதுகாப்பு உரிமை ஐக்கிய நாடுகளின் “உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தின்” ஷரத்து 22-25ன்படி சமூக பாதுகாப்பு அடிப்படை உரிமையாக கருதப்படுகிறது. பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு 1952இல் நடத்திய 102வது சமூக பாதுகாப்பு (குறைந்தபட்ச அளவிலான) மாநாட்டு அறிக்கையில் சமூகப் பாதுகாப்பின் குறைந்தபட்ச அம்சங்களாக ஒன்பது அடிப்படை நலன்களைக் குறிப்பிடுகிறது. அவையாவன: மருத்துவப் பயன்கள், உடல்நலக் குறைவுக்கான பலன்கள், வேலையின்மை சார்ந்த பலன்கள், வயது முதிர்ந்தவர்களுக்கான ஆதாரம், வேலையில் காயமடையும் போது உதவிகள், குடும்பத்திற்கான ஆதரவுகள், மகப்பேறு பயன்கள், வேலை செய்ய தகுதியற்றவர் என்று அறிவிக்கப்பட்டால், அதற்கான இழப்பீடுகள் மற்றும் பணியாளர் இறந்து விட்டால் குடும்பத்தினருக்கு உதவிகள் ஆகியவைகளாகும்.



இந்தியா பன்னாட்டு மக்கள் நல அமைப்பின் நிறுவன உறுப்பினர். பன்னாட்டுப் பணியாளர் நல அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள், மனித உரிமைகள் சார்ந்த பல செயல்பாடுகளுக்கு இந்தியா ஏற்பு அளித்துள்ளது. இவைகளில் பல சமூகப்

பாதுகாப்பு நிலைமைக்கு மிகவும் பொறுத்தமானதாகும். சமீபத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைத்து நிற்கும் மேம்பாட்டு இலக்குகளும் இவைகளை வற்புறுத்துகின்றன. இந்தியாவில், சமூகப் பாதுகாப்பு அமைப்புகள் சிறப்பாகவே ஊன்றியுள்ளன. 1952இல் நடைபெற்ற 102வது பன்னாட்டுப் பணியாளர் நல அமைப்பின் சமூகப் பாதுகாப்பு (குறைந்தபட்ச அம்சங்கள்) மாநாட்டின் ஒன்பது பிரிவுகளில் பல்வேறு அளவில் செயல்பாடு அமைந்துள்ளது. இது, முக்கியமாக தனியார் நிறுவனங்களில் ஒரு குறிப்பிட்ட பணியாளர் எண்ணிக்கையைவிட அதிகமாக உள்ளவர்களையும், பணியாளர் எண்ணிக்கையை கணக்கில் கொள்ளாமல் எல்லா பொதுத்துறை நிறுவனங்களிலும் உள்ள அமைப்பு சார்ந்த பணியாளர்களுக்கு பயன்களை அளிக்கிறது. இந்த பலன்கள் அமைப்பு சார்ந்த துறையின் சில முறைப்படுத்தப்படாத பணியாளர்களுக்கும், அமைப்புசாரா துறையில் சில நிறுவனங்களுக்கும் பொருந்தும்.[1] ஆனால், இந்தியப் பொருளாதாரத்தின் அடித்தளமாக இருக்கும் அமைப்பு சாரா பணியாளர்கள் 84 சதவிகிதமாக உள்ள நிலையில் அவர்களுக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பு பயன்கள் கிடைப்பதில்லை.

### இந்தியாவில் அமைப்புசாராத் துறைகள்

68வது சுற்று, தேசிய மாதிரி ஆய்வுக் கழகத்தின் மதிப்பீடுகளின்படி இந்தியாவில் சுமார் 84 சதவிகிதம் பணியாளர்கள் அமைப்புசாரா அல்லது முறைப்படுத்தப்படாத துறைகளிலும் 90 சதவிகிதத்துக்கும் மேற்பட்டவர்கள் முறைப்படுத்தப்படாத பணிகளிலும் (முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்படாத இரண்டையும் சேர்த்து) தேசிய மாதிரி ஆய்வு அறிக்கைகளின்படி 2011-12இல் முறைப்படுத்தப்படாத துறைகளில் உள்ளவர்களின் வேலை வாய்ப்பு நிலைமைகளைப் பார்க்கும் போது, 97 சதவிகிதத்தினர் சுய வேலை வாய்ப்பிலும், அன்றாடம் பணிகளில் சேர்க்கப்படுபவர்களில் 78 சதவிகிதத்தினரும், கிராமப்புறங்களில் உள்ள தொடர் ஊதியம் / சம்பளம் பெறும் ஊழியர்களில் 40 சதவிதத்தினரும் முறைப்படுத்தப்படாத துறைகளில் பணியாற்றினர். முறைப்படுத்தப்படாத துறைகளில் வேலை செய்பவர்களில் கிராமப்புறங்களில் 75



* ஆசிரியர் உறுப்பினர் V.V கிரி, தேசிய பணியாளர் நலக்கழகம் நொய்டா. rumaghosh.vvgnli@gov.in

1. ஸ்ரீவத்சவா R.S. இந்தியாவிற்கான சமூகப் பாதுகாப்பு அடித்தளம். (பன்னாட்டு பணியாளர் நல அமைப்பு. 2013.) xiv.

சதவிகித்தினரும், நகர்ப்புறங்களில் 70 சதவிகிதத்தினரும், சிறிய தொழில் அமைப்புகளில் ஈடுபட்டிருந்தனர். விவசாயம் மற்றும், விவசாயம் அல்லாத மற்ற துறைகளில் 79 சதவிகித பணியாளர்களுக்கு எழுத்துப்பூர்வ வேலை ஒப்பந்தம் இருக்கவில்லை. விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத துறைகளில் 42 சதவிகிதப் பணியாளர்கள் தற்காலிகப் பணியாளர்களாக இருந்தனர். இதில், அன்றாடப் பணியாளர்கள் 60 சதகிவிதமும், தொடர்ந்து ஊதியம் / சம்பளம் வாங்கும் ஊழியர்கள் 28 சதவிகிதமும் இருந்தனர்.

விவசாயம் மற்றும் விவசாயம் அல்லாத துறைகளில் 72 சதவிகிதம் மக்களுக்கு எந்தவொரு சமூகப் பாதுகாப்பு பலன்களும் கிடையாது. இதில், அன்றாடப் பணியாளர்களில் 93 சதவிகிதத்தினருக்கும் தொடர்ந்து / சம்பளம் வரும் ஊழியர்களில் 56 சதவிகிதத்தினருக்கும் எந்தவித சமூகப் பாதுகாப்பு பலன்களும் இல்லை.[2] அமைப்புசாராதுறைப் பணியாளர்கள் என்பவர்கள் முறைபடுத்தப்பட்ட துறைகளில் ஒரு ஒப்பந்தப் பணியாளராக அல்லாமல், வீடுகளிலோ, சுயமாகவோ அல்லது அன்றாட கூலித்தொழிலாளர்களாகவோ பணி செய்பவர்கள் என்று கொள்ளலாம்.

இதைப்போன்ற முறைப்படுத்தப்படாத பொருளாதார நடவடிக்கைகளில், மிகவும் பின்தங்கிய



பொருளாதார நிலையில் உள்ள மக்கள் மிக உயர்ந்த சதவிகிதத்தில் பணி செய்கிறார்கள். கடந்த 20 ஆண்டுகளாக இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட உயர் வளர்ச்சியில் இப்படி முறைப்படுத்தப்படாத பணியாளர்கள் அதிகரித்தனர். முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்படாத பொருளாதார நடவடிக்கைளுக்கிடையே இணைப்புகள் மிகுந்து வருகின்றன. முறைப்படுத்தப்படாத பொருளாதாரத்தில் உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் இலாபம் சார்ந்த புதிய உத்வேகம் உருவாகியுள்ளது. முறைப்படுத்தப்படாத பொருளாதாரத்தில், வேகமான மற்றும் எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு தனி கவனம் செலுத்த வேண்டும். இந்தத் துறையின் உயர் அளவு வளாச்சி வேண்டுமானால், முறைப்படுத்தப்படாத பொருளாதார துறையில் உள்ளவர்களின் உயர்ந்து வரும் தேவைகளை அதிகரிக்க வேண்டும். இந்தத் துறையினருக்கான கடன் வசதிகள், திறன் மேம்பாடுகள், தொழில்நுட்பம், விநியோகம் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளையும் பெருக்க வேண்டும். இந்தத் துறைக்கு, மக்களின் பங்களிப்பை கொண்டு செயல்படும் சமூகக் காப்பு திட்டமோ அல்லது வரித் தீர்வை சார்ந்த சமூகப் பாதுகாப்பு பயன்களோ மிகவும் குறைவு. கடந்த 100 ஆண்டுகளில் உருவாகியுள்ள சமூகப் பாதுகாப்பு அமைப்பின் மிகப்பெரிய சவாலாக இது உள்ளது.

மொத்த பணியாளர் எண்ணிக்கையில் ஏழு சதவிகிதம் உள்ள அமைப்பு சார்ந்த துறையில் பணியாற்றுபவர்களுக்கு பல்வேறு சட்டங்கள் மூலம் சமூகப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இந்தப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சமூகப் பாதுகாப்பு சட்டங்களாவன : பணியாளர்கள், அரசு காப்பீடு சட்டம் 1948; பணியாளர்கள் வைப்பு நிதி மற்றும் பிற ஷரத்துக்கள் சட்டம் 1952. இந்த இரண்டு சட்டங்களின்படி பணியாளர்களுக்கு மருத்துவ சிகிச்சைக் காப்பீடு, வைப்பு நிதி மற்றும் ஓய்வூதியம் சார்ந்த பயன்கள் கிடைக்கின்றன. நாட்டிலுள்ள மொத்த பணியாளர்களில் அமைப்பு சாரா துறைகளில் பணியாற்றும் 47,29,00,000 பணியாளர்களுக்கு வேலைப் பாதுகாப்பு, ஊதியம், பணிசார் சூழ்நிலைகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்கள் போன்ற பணியாளர் பாதுகாப்புகள் கிடைப்பதில்லை. அதற்கு முக்கிய காரணங்களாவன: தற்காலிக மற்றும் பருவம்சார் வேலைவாய்ப்பு, பணிசெய்யும் இடங்கள், வெவ்வேறு இடங்களில் சிதறிக் கிடப்பது, மோசமான வேலை செய்யும் சூழ்நிலைகள், முதலாளி, தொழிலாளி நல்லுறவின்மை; தொடர்ந்து வேலையில்லாமை; நீண்ட பணிகாலம்; குறுகிய கடன் வசதிகள்; சட்டப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு மற்றும் அரசு ஆதரவு இல்லாமை.

2. தேசிய மாதிரி ஆய்வுக்கழகம், 2012இல் மேற்கொண்ட 68வது சுற்று வேலை வாய்ப்பு மற்றும் வேலை வாய்ப்பின்மை அறிக்கை, புது டெல்லி, இந்திய அரசு.

அமைப்புசாரா துறையிலுள்ள நிறுவனங்களுக்கான தேசிய கமிஷன் கூறுவது போல, அமைப்பு சாரா துறையில் பணியாற்றுபவர்களுக்கு குறிப்பாக மூன்று வகையான சமூகப் பாதுகாப்புகள் கிடைப்பதில்லை - வேலை வாய்ப்பு பாதுகாப்பு (காரணமில்லாமல் பணிநீக்குவதற்கு எதிரான பாதுகாப்பின்மை), பணியில் பாதுகாப்பு, பணியிடங்களில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் உடல்நலக் கேடுக்கான பாதுகாப்பின்மை மற்றும் சமூகப் பாதுகாப்பு (உடல்நலம் சார்ந்த பயன்கள், ஓய்வூதியங்கள் மற்றும் மகப்பேறு உதவிகள்).[3] அமைப்புசாரா துறையில் பணியாற்றுபவர்களுக்கு சமூகப் பாதுகாப்பை அளிக்கவும், பல்லாண்டுகளுக்கான மக்கள்தொகை வளர்ச்சியைப் பார்க்கும் போது, வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை வேகமாக உயர்வதும், அமைப்பு சாரா துறைகளில் பணியாளர்களின் எண்ணிக்கை குறையாமல் இருப்பதையும் கருத்தில் கொண்டு இந்திய அரசு அமைப்பு சாரா பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்புச் சட்டத்தை 2008இல் நிறைவேற்றியது. இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம் இந்தியாவின் அமைப்புசாரா துறையில் பணியாற்றும் பெரும்பான்மையான பணியாளர்களுக்கு குறைந்த பட்ச சமூகப் பாதுகாப்பையாவது அளித்து அவர்கள் தொடர்ந்து வருமானம் பெறவும், உடல்நலம் சார்ந்த பிரச்சினைகளிலிருந்து மீளவும், ஏழ்மையிலிருந்து வெளிவரவும், மொத்தத்தில் கண்ணியமான வாழ்கை நடத்தவும் ஏதுவாக இருக்க வேண்டும். இந்த சட்டம், உரிமை சார்ந்த சட்டமாக இருக்கிறது என்று போற்றப்பட்டாலும் செயல்படுத்தும் முறைகளும் அதற்குத் தேவையான நிதி வசதியும் வழங்கப்படவில்லை. இந்த சட்டத்தின்படி ஆலோசனைகள் வழங்கும் தேசிய மற்றும் மாநில அளவிலான சமூகப் பாதுகாப்பு வாரியங்கள் அமைப்பதற்கு மட்டுமே வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அமைப்புசாரா துறையினருக்கு சமூக பாதுகாப்பு:**

இந்தியாவில் சமூகப் பாதுகாப்பு அமைப்பு தற்போது இரண்டு மட்டங்களில் செயல்படுகின்றன. முதலாவது நிலையில், கல்விக்கான இயக்கம், பள்ளிகள், சிகிச்சை சேவைகள், குடிநீர் மற்றும் சுகாதாரத்திற்கான ஒதுக்கீடுகள், தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவைகள் உள்ளிட்ட அடிப்படை சமூக / மனித மேம்பாட்டிற்கான எல்லோருக்குமான திட்டங்கள் செயல்படுகின்றன. இரண்டாவது நிலையில், சில சமூக / மனித மேம்பாடு திட்டங்கள், சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பை பாதிப்புக்குள்ளாகக் கூடிய குடிமக்களுக்கு அளிக்கும் வகையில் செயல்படுகிறது. இந்தத் திட்டங்கள் அவர்களின் வேலை பதவி நிலைமையை கருத்தில் கொள்ளாமல் அனைவருக்கும் தேவையான மேம்பாடு மற்றும் பாதுகாப்புகளைக் கருதி ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாடுத் திட்டங்கள், பொது விநியோகத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.[4]

சமூகப் பாதுகாப்புக் குறைபாடுகளை நீக்குவதற்கான நலத் திட்டங்கள் பல இருந்தாலும் மற்ற வளரும் நாடுகளைப் போலவே இந்தியாவிலும் உடல்நலக்குறைபாடு, விபத்துக்கள், மரணம், முதுமை ஆகியவை சார்ந்த நெருக்கடிகளால் ஏற்படும் நிகழ்வுகளுக்கு சமூகப் பாதுகாப்பு வசதிகள் அமைப்புசாரா துறையில் உள்ள பணியாளர்களுக்கு இல்லை. முறைப்படுத்தப்பட்ட துறைகளில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு நலத்திட்டங்கள் மூலம் உடல்நலம், விபத்துக்கள், மரணம் மற்றும் முதுமை சார்ந்த நிகழ்வுகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் சட்ட ரீதியான நிலைமை உள்ளது. ஆகவே, இப்படி இடர்பாடுகள் ஏற்படும்போது, அதிலிருந்து பாதுகாப்பு அளிக்கும் வகையில் அமைப்பு சாரா ஊழியர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இந்த வசதிகள் அளிக்கப்பட வேண்டும். ஏழை மக்களின் சதவிகிதம் குறைந்து வந்தாலும் பெரும்பான்மையான ஏழை மக்கள், அமைப்பு சாரா துறைகளில்தான் பணியாற்றுகிறார்கள். சமூகப் பாதுகாப்பு இல்லாத போது, பணியாளர்களின் உற்பத்தித் திறனும் பாதிக்கப்படுகிறது. நோய்வாய்ப் படும் போது, பணியாளர்களின் நலன் பாதிக்கப்பட்டு அவர்களுடைய உற்பத்தித் திறனும் பாதிக்கப்படுகிறது. உடல்நலக் குறைபாடு காரணமாக, செலவு செய்ய அவர்கள் கடன்படுகிறார்கள்.[5]

3. அமைப்புசாரா துறையிலுள்ள நிறுவனங்களுக்கான தேசிய கமிஷன், 2008. அமைப்புசாரா துறைகளில் பணி செய்யும் நிலைமை. புது டெல்லி, இந்திய அரசு.

4. அமைப்புசாரா பணியாளர்களின் சமூக பாதுகாப்புசார் அறிக்கை : சுருக்கம் மற்றும் பரிந்துரைகள், மனித வள மேம்பாடுசார் இந்திய இதழ், தொகுப்பு 1, எண்.1, 2007.

5. மெஹரோத்ரா S. நமது ஜனத்தொகை நலன்களை பெறுவது, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம், 2016.

ஆகவே, அமைப்பு சாரா பணியாளர்களுக்கு குறைந்தபட்ச பாதுகாப்புகள் இல்லாதபோது, எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நாம் அடைய முடியாது.

மேலும், தற்போதுள்ள சமூகப் பாதுகாப்பு நிர்வாகத்தில் பல சவால்கள் உள்ளன: (a) பலதரப்பட்ட கொள்கைகள், திட்டங்கள் மற்றும் செயலமைப்புகள், (b) சிலருக்கே சில வசதிகள் (c) போதுமான பயன்கள் இல்லை (d) வசதிகள் உதிரியாக உள்ளன. (e) செயல்பாடுகளில் குறைபாடு (f) உயர் செலவு (g) இந்த பயன்களிலிருந்து பலர் விடுவிப்பு, குறிப்பாக அமைப்புசாரா பணியாளர்கள்.

மேற்கூறப்பட்டவர்களை கருத்தில் கொண்டு பணியாளர் நலன் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம், இரண்டாவது தேசிய பணியாளர் நல கமிஷனின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து, தற்போது இருக்கும் அனைத்து சமுதாய பாதுகாப்புசார் மத்திய தொழிலாளர் நலச் சட்டங்களையும் ஒருங்கிணைத்தும், மறுசீரமைத்தும் சமூகப் பாதுகாப்பு மற்றும் பணியாளர் நலன் நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. (பணியாளர் வைப்பு நிதி சட்டம், பணியாளர் மருத்துவ சிகிச்சை சட்டம், மகப்பேறு பயன்கள் சட்டம், கிராஜூவிட்டி வழங்கும் சட்டம், விபத்துக்கள் சார் இழப்பீடு சட்டம், அமைப்புசாரா பணியாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு சட்டம் மற்றும் பல்வேறு நலத் தீர்வைகள் மற்றும் நிதி சட்டங்கள் உள்ளிட்ட 15 பணியாளர்நல சட்டங்கள்).

இந்த நெறிமுறைகளின் அடிப்படையில் சமூகப் பாதுகாப்பு நிர்வாக அமைப்பு மூன்று நிலைகளாக, முத்தரப்பு பங்களிப்போடு அமைக்கப்பட்டுள்ளது - (a) பிரதம மந்திரி தலைமையில் தேசிய பாதுகாப்பு கவுன்சில் (b) மத்திய அரசு அளவில் மத்திய சமூக பாதுகாப்பு வாரியம் மற்றும் (c) மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் அளவில் மாநில சமூகப் பாதுகாப்பு வாரியங்கள், சமூகப் பாதுகாப்பு செயல் திட்டங்களை செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகள் (பஞ்சாயத்துக்கள் / நகராட்சி உள்ளாட்சி அமைப்புகள்) நிகழ்வுகளைப் பதிவு செய்து சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்த உதவுவார்கள். ஆகவே, அவர்களை நான்காவது நிலை என்றும் கூறலாம். எல்லா பணியாளர்களுக்கும் ஆதார் சார்ந்த தனி பதிவு முறை செயல்படுத்தப்படும். அவர்களுடைய சமூகப் பாதுகாப்பு கணக்கு எங்கெங்கு வேலை செய்கிறார்களோ அந்தந்த இடத்திற்கு மாற்றிக்கொள்ள முடியும். இதற்கு பெயர் விஸ்வகர்மா பணியாளர்கள் பாதுகாப்பு கணக்கு. இது, ஆதார் அட்டையின் அடிப்படையில் எல்லா பணியாளர்களுக்கும் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் அளிக்கும் தொகை, பெற வேண்டிய பயன்கள், ஆகியவை, அவருடைய கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படும். பணியாளர் ஒரு மாநிலம் விட்டு அடுத்த மாநிலத்திற்கு சென்றால் இதை கூடவே மாற்றி எடுத்துச் செல்ல முடியும். இந்த புதிய பாதுகாப்புத் திட்டம், பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஒரு நற்செயலாகவோ, அவர்களை திருப்திபடுத்த செய்யப்படும் செயலாகவோ கருதப்படாமல், நாட்டில் உள்ள அனைத்துப் பணியாளர்களின் உரிமையாக நாம் கருதவேண்டும்.[6]

### குறிப்புகள்


1. சமூக பாதுகாப்பு மற்றும் நலன்கள்சார் பணியாளர் நல நெறிமுறைகளின் மாதிரி அறிக்கை. http://labour.gov.in/whatsnew/draft-labour-code-social-security-welfare
2. மெஹரோத்ரா S. நமது மக்கட்தொகையின் பயன்களை பெறுவது, கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம், 2016.
3. அமைப்புசாரா துறையிலுள்ள நிறுவனங்களுக்கான தேசிய கமிஷன், 2008. அமைப்புசாரா துறைகளில் பணி செய்யும் நிலைமை. புது டெல்லி, இந்திய அரசு.
4. தேசிய மாதிரி ஆய்வுக் கழகம், 2012 - 68வது சுற்று, வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை நிலைமை, புது டெல்லி, இந்திய அரசு.
5. அமைப்புசாரா பணியாளர்களின் சமூக பாதுகாப்பு அறிக்கை : சுருக்கம் மற்றும் பரிந்துரைகள், இந்திய மனிதவள மேம்பாடு இதழ் தொகுப்பு I, எண்.1, 2007.
6. ஸ்ரீவத்சவா R.S. இந்தியாவிற்கான சமூக பாதுகாப்பு அடித்தளம். (பன்னாட்டு பணியாளர் நல அமைப்பு. 2013.) xiv.


6. http://labour.gov.in/whatsnew/draft-labour-code-social-security-welfare

# நிறுவன சமூகப் பொறுப்புடைமை - விளிம்புநிலை மக்களுக்கு சமூகப் பொருளாதாரத்தில் அதிகாரம் அளிப்பதில் முன்னோடி

- ஜடேந்தர் சிங்

புதுதில்லி, தொழில் வர்த்தக சபையின் மூத்த செயலாளர், மனித வளப் பிரிவின் தலைவர்

**அறிமுகம்**

நிறுவனங்கள் தங்கள் செயல்பாட்டால் மக்கள் பூமி மற்றும் இலாபங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கங்களுக்குப் பொறுப்பேற்று அந்நிறுவனங்கள், நிலைபெற்றிருக்கும் சமுதாய மக்களின் நலன்களைக் காக்கச் செய்வதை நிறுவனச் சமூகப் பொறுப்புடைமை (சி.எஸ்.ஆர்) ஊக்கப்படுத்துகிறது. சட்டப்பூர்வமான நிறுவனச் சமூகப் பொறுப்புடைமையை இந்தியா அண்மையில் அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த அம்சத்தில் உலக நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும் போது இந்தியா இப்போதுதான் சமுதாயப் பொறுப்புடைமை என்பதில் அடியெடுத்து வைத்துள்ளது. நிறுவன உறவுகளுக்கான அமைச்சகம் 2009ஆம் ஆண்டில்தான் சி.எஸ்.ஆர் குறித்த தன்னார்வ வழிகாட்டுதல்களை வெளியிட்டது. நிறுவனங்கள் சட்டம் 2013இல் இந்த வழிகாட்டுதல்கள் இணைக்கப்பட்டன. சி.எஸ்.ஆர் வரம்பெல்லைக்குள் எந்தெந்த நிறுவனங்கள் வருகின்றன என்பது நிறுவனங்கள் சட்டம் 2013இன் பிரிவு 135இன் உட்பிரிவு 1இல் உள்ளடக்கப்பட்டு இருக்கின்றன. கீழ்வரும் பிரிவுகளில் அடங்கும் நிறுவனங்கள் சி.எஸ்.ஆர் ஷரத்துக்களைக் கடைபிடித்தாக வேண்டும்.

i. ரூ.500 கோடி மற்றும் அதற்கு மேல் நிகர மதிப்பைக் கொண்டுள்ள நிறுவனங்கள்

ii. ஆண்டுத்தொழில் தொகை ரூ.1000 கோடி மற்றும் அதற்கு மேல் உள்ள நிறுவனங்கள்

iii. நிகர லாபம் ரூ.5 கோடி மற்றும் அதற்கு மேல் உள்ள நிறுவனங்கள்

கணக்கெடுப்பின்படி இந்தச் சட்டத்தின் சி.எஸ். ஆர் ஷரத்துக்களின் கீழ் கட்டாயம் இடம் பெறும் நிறுவனங்களாக சுமார் 8000 நிறுவனங்கள் உள்ளன. நிறுவனங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் ஈட்டிய சராசரி இலாபத்தில் குறைந்தபட்சம் 2 சதவிகிதத் தொகையை சி.எஸ்.ஆர் நடவடிக்கைகளுக்காகச் செலவழிக்க வேண்டும் என்று இந்தச் சட்டம் வரையறை செய்துள்ளது. இந்த சதவிகிதத்தை ரூபாய் மதிப்பில் மாற்றிக் கூற வேண்டுமென்றால் நிறுவனங்கள் ஆண்டுக்கு ரூ.10,000 - ரூ.12,000 கோடியை சி.எஸ்.ஆர் செயல்பாடுகளுக்காகச் செலவழிக்க வேண்டும் என்பதாகும். உள்நாட்டு மொத்த உற்பத்தி அதிகரிப்பு மற்றும் அதன் விளைவாக ஏற்படும் இலாபங்கள் அதிகரிப்பு ஆகியவற்றால் இந்தச் சமுதாயத்துக்கான கட்டாயச் செலவு வரம்பும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கவே செய்யும். சட்டத்தின் பிரிவு 135ன் கீழ் ஒரு நிறுவனம் சி.எஸ்.ஆர் நிர்வாகக் கமிட்டியை உருவாக்க வேண்டும். இதில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயக்குனர்கள் இருக்க வேண்டும். அதில் ஒரு இயக்குநர் சார்பில்லாதவராக இருக்க வேண்டும். இந்தக் கமிட்டி ஷரத்து VIIல் குறிப்பிட்டுள்ளவாறு சி.எஸ்.ஆர் நடவடிக்கைகளை உள்ளடக்கிய கொள்கையை வகுக்கும்.

நிறுவனங்கள் சி.எஸ்.ஆர் நடவடிக்கைகளைத் தங்களது சொந்த அறக்கட்டளைகள் மூலமாகவோ அல்லது தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தோ மேற்கொள்ளலாம். அல்லது தங்களது சி.எஸ்.ஆர் நிதியை மற்றொரு நிறுவனத்தின் சி.எஸ்.ஆர் நிதியோடு சேர்த்து மொத்தமாகவும் செலவிடலாம். சி.எஸ்.ஆர் என்பது நிபந்தனைக்கு ஏற்ப நடப்பது மட்டும் அல்ல; நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கையை மேம்படுத்த உதவும் நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டிய அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்றே கொள்கை அங்கீகரிக்கிறது.

**சி.எஸ்.ஆர் - அதிகாரம் அளித்தலுக்கான முன்னோட்டச் செயல்பாடு**

விளிம்புநிலை மக்களுக்கு அதிகாரம் அளித்தல் என்பது அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் திறன்களை வளர்த்தெடுத்தல் என்பதாகும். இதன் மூலம் அவர்களது சமூகப் பொருளாதார அந்தஸ்தை உயர்த்த முடியும். இதற்கான பொறுப்பு அரசாங்கத்தையே முதன்மையாகச் சேரும். ஆனால் நிறுவனங்களின் முன்னோடி நடவடிக்கைகள் விளிம்புநிலை மக்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், அவர்களை அடுத்த உயர்நிலைக்கு எடுத்துச்

செல்லவும் உதவுகின்றன. மேலும் அடுத்தவர்கள் கடைபிடிக்கும் அளவுக்கு சிறந்த நடைமுறைகளை உருவாக்கவும் உதவுகின்றன. வர்த்தக நிறுவனங்கள் எங்கு செயல்படுகின்றனவோ அந்தப் பகுதியில் உள்ள சமுதாய மக்களின் வளர்ச்சி மீது கவனம் செலுத்துகின்றனர். எனவே அவர்கள் அச்சமுதாயத்தினரின் பிரச்சனைகள் மற்றும் சவால்களைப் புரிந்து கொள்வது எளிதாகின்றது. மேலும் சி.எஸ்.ஆர் செயல்திட்டங்கள் மூலம் விளம்புநிலை மக்களுக்கான வளர்ச்சி வாய்ப்புகளை உறுதிப்படுத்துவதும் எளிதாகின்றது. இந்தியா கடந்த காலங்களில் சிலரை ஒதுக்கிவிட்டு வளர்ச்சி என்ற அணுகுமுறையையே கடைபிடித்து வந்தது. சிலரை விலக்கி விட்டு வளர்ச்சி அடைதல் என்ற நூற்றாண்டு பழமையான அணுகுமுறையானது விளம்புநிலை மக்களைப் பெருவாரியான வளர்ச்சியில் இணைப்பதற்கு மேலும் காலம் பிடிக்கும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான மந்திரமான - சப்கா சாத், சப்கா விகாஸ் - என்பது தனியார் மற்றும் அரசுத் துறைகள் இணைந்து செயலாற்றும் வளர்ச்சி மாதிரியோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டால்தான் சாத்தியமாகும். அதிகரித்து வரும் தேவைகளின் பின்னணியில் மக்கள் நல்வாழ்வை நிறைவு செய்ய அரசாங்க பட்ஜெட் மட்டும் போதாது. அரசாங்கம் விளிம்பு நிலை மக்களுக்கு அதிகாரம் அளிக்க ஒதுக்கப்பட்ட நிதி மூலம் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

ஆனால், குறுகிய காலத்துக்குள் அரசாங்கத்தால் மக்கள் நல்வாழ்வின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்ய முடியாது. விளிம்புநிலை மக்களுக்கான வளர்ச்சி இலக்குகளை நிறைவு செய்வதற்கு தனியார் பங்கேற்பு மிக அவசியமானதாகும். கல்வி வாழ்வாதார இணைப்பு அல்லது சுகாதார சேவைக்கான அழைப்பு போன்றவற்றை நிறைவு செய்ய அதிக அளவிலான நிதியைத் திரட்டியாக வேண்டும். இந்தியாவுக்கான மனிதவள மேம்பாட்டு ஆய்வறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சித் திட்டம் வெளியிட்டுள்ளது. இதன்படி 188 நாடுகளில் இந்தியாவின் தரவரிசை 131 ஆக உள்ளது. மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டு எண் என்பது ஒரு நாட்டில் அடிப்படை மனித வளர்ச்சிக்கான சாதனைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சராசரி மதிப்பீடாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்தப் புள்ளி விவரங்களின் படி இந்தியா தரவரிசைப் பட்டியலில் மேலும் முன்னேற நிதி ஆதார அதிகரிப்பு என்பது மட்டும் போதாது. மாறாக பல்வேறு பங்குதாரர்களிடம் இருந்து பங்களிப்பு பெறுவதை உள்ளடக்கிய 360 டிகிரி அணுகுமுறைதான் தேவைப்படுகின்றது.

இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள் ஸ்டார்ட் அப் இந்தியா திறன் இந்தியா மற்றும் டிஜிட்டல் இந்தியா போன்ற அரசின் முன்னோடி திட்டங்கள் சி.எஸ்.ஆர் செயல்திட்டங்களால் மேம்படுத்தப்படலாம். இத்தகைய திட்டங்கள் விளிம்புநிலை மக்களை அதிகாரம் பெறச் செய்வதில் பல படிநிலையிலான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் இத்தகைய இடையீடுகள் அவர்களை அதிகம் கல்வி கற்றவர்களாக, கூடுதல் தொழில்திறன் கொண்டவர்களாக மாற்றும். அதேபோன்று பெருமளவிலான வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

## சி.எஸ்.ஆர் பாதையில் நிறுவனத் துறைகளின் பங்கு

பல நிறுவனங்கள் தங்களது சி.எஸ்.ஆர் நடவடிக்கைகள் மூலமாக சமுதாயத்தினருக்கான வாழ்வாதாரத் தொடர்புகளை உருவாக்குகின்றனர். தங்களது விநியோகச் சங்கிலித் தொடர் செயல்பாடுகளில் அத்தகைய சி.எஸ்.ஆர் நடவடிக்கைகளை உள்ளிணைத்து தொடர்புகளை ஏற்படுத்துகின்றனர். புதுத்தலைமுறை சி.எஸ்.ஆர்-க்கான அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. சி.எஸ்.ஆர்க்கான சூழல் அமைப்புக்கு இப்போது உத்வேகம் கிடைத்துள்ளது. 2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்ட 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (எஸ்.டி.ஜி) மீது நிறுவனங்கள் துறை தங்களது சி.எஸ்.ஆர் நடவடிக்கைகள் மூலம் கவனம் செலுத்துகின்றன. நிறுவனம் சட்டவிதிகளுக்கு உட்பட்டு நடக்கும் போது மிகத் திறம்பட செயல்படுத்தப்படும் சி.எஸ்.ஆர் நடவடிக்கைகள் விளிம்பு நிலை சமூக மக்களுக்கு அதிகாரம் அளித்தலுக்கான முதலீடுகளாக அமைகின்றன. இந்தியச் சூழலில் கடந்த காலங்களில் கருணைசார் அறப்பணி மாதிரிகளுக்கு இன்றியமையாத கூறாக இருந்தது எழுத்தறிவுதான். இந்தப் புதிய யுகத்தில் முதன்மைக் கவனக்கூறாக இருப்பது தொழில்திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரங்களை உருவாக்குவதுதான். கல்வி என்பது அடிப்படையான வாசித்தல் திறன் மற்றும் எழுதுதல் திறன் ஆகியவற்றைத் தாண்டியதாக உள்ளது. தொழில் திறன்கள்தான் முக்கியமானவையாக உள்ளன. சமுதாயத்தின் அடித்தட்டு நிலையில் உள்ள மக்களுக்கு திறன் மேம்பாட்டுக்கான முதலீடுகள் நேரடியாக வர்த்தகத்தின் அடித்தட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்.

உலகப் பொருளாதார அமைப்பு சர்வதேச ஆபத்துக் காரணிகளை புலன் உணர்தல் 2016 கணக்கெடுப்பின்படி, உள்முகமான சமூக நிலையற்ற தன்மை மற்றும் அமைப்பு மயமான வேலை வாய்ப்பு இன்மை அல்லது தகுந்த வேலையின்மை ஆகிய இரண்டு கூறுகளும் அதிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. அனைத்து உள் உறவுகளையும் நோக்க இந்தப் பிணைப்பு 5%ஆக உள்ளது. இந்த உள்உறவுப் பிணைப்புகள் பற்றிய ஆய்வு செயல்பட வேண்டிய தளங்கள் மற்றும் தற்காலிக செயல்திட்டங்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்க தலைவர்களுக்கு உதவியாக இருக்கும். இந்தியத் தொழிற்சாலைகளின் தலைவர்கள் அத்தகைய ஆபத்துக் காரணிகளை அறிந்துள்ளனர். அவர்களில் பலர் தங்களது சி.எஸ்.ஆர் நடவடிக்கைகளை இந்தப் புலங்களை நோக்கி செயல்படுத்துகின்றனர்.

## மாற்றுத்திறன் நபர்களுக்கான திறன்மேம்பாடு மற்றும் வாழ்வாதார வாய்ப்புகள்:

மாற்றுத்திறன் நபர்கள் வேறுபட்ட கூடுதலான தகுதிகளைக் கொண்டுள்ளனர் மற்றும் பொதுவான நம்பிக்கைக்கு மாறாக கூடுதல் திறன் உள்ளவர்களாக இருக்கின்றனர் என பிரதம மந்திரி நரேந்திரமோடி கூறி உள்ளார். அவர்களுக்காக பிரதமர் "திவ்யாங்க்" என்ற சொல்லைப் பரிந்துரைத்து உள்ளார். இந்தியா உலகிலேயே அதிக அளவிலான மாற்றுத் திறனாளிகளைக் கொண்டிருக்கிறது. 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகையில் மாற்றுத்திறனாளிகளின் பங்கு 2.21 சதவிகிதம் ஆகும். இவர்களில் பெரும்பான்மையோர் கிராமப் பகுதிகளில் வகிக்கின்றனர். மாற்றுத் திறன் நபர்கள் சமூகப் பொருளாதாரப் புலங்களில் விலக்கி வைக்கப்பட அதிகம் வாய்ப்புள்ளவர்களாக உள்ளனர். ஏனெனில் அவர்கள் உள்கட்டமைப்பு வசதிகள் கல்வி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை அணுகுவதில் மோசமான நிலையில் உள்ளனர். கடந்தகாலத்தில், மாற்றுத்திறன் நபர்களுக்கான செயல்திட்டங்கள் குறுகிய வரம்புக்குள் இருந்தன. ஆனால் மாற்றுத்திறன் நபர்களுக்கான செயல்திட்டங்கள் சி.எஸ்.ஆரில் உள்ளடக்கப்பட்டன. தற்போது நிறுவனங்கள் மாற்றுத் திறன் நபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஒருங்கிணைந்த முழுமையான முறையில் அணுகுகின்றன. எழுத்தறிவு மற்றும் தொழில்கல்வி அளித்தல் போன்றவற்றுக்கான செயல்திட்டங்கள், இவற்றை அணுகுவதில் உள்ள தடைகளை நீக்குதல், வேலைவாய்ப்புக்குத் தகுதியாதல் ஆகியன மாற்றுத் திறன் நபர்களுக்கான சி.எஸ்.ஆர் செயல்திட்டங்களின் உத்திகள் ஆகும்.

## சுய உதவிக் குழுக்கள் (எஸ்.ஹெச்.ஜி) மற்றும் குறுந்தொழில்கள்

சி.எஸ்.ஆர் செயல்திட்டங்கள் கிராமப் பகுதிகளில் வாழ்வாதாரங்களை உருவாக்குவதற்கு உதவியாக இருக்கின்றன. சுய உதவிக் குழுக்கள் மற்றும் குறுந்தொழில்கள் வாயிலாக இடப்பெயர்வு இல்லாமல் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. உற்பத்திப் பொருள் மற்றும் சேவைகளுக்கான சந்தை அணுகுதலை வழங்குவதில் சி.எஸ்.ஆர் செயல்திட்டங்கள் கவனம் செலுத்துகின்றன. இதனைச் சிறு அளவு நிதிக்கடன் மூலம் நடைமுறைப்படுத்துகின்றன. உற்பத்தியாளர்களும் கைவினைக் கலைஞர்களும் ஆன்லைன் விற்பனையில் ஈடுபட சந்தைத் தொடர்புகளை இ-வணிக அமைப்பு ஏற்படுத்தித் தருகிறது. இதனை புரவலர் நிலையிலான ஆதரவுடன் செயல்படுத்தலாம். இதற்கான காலம் கனியவும் உதவ முடியும். சுய உதவிக் குழுக்களுக்கான திறன் மேம்பாட்டு புத்தாக்க சி.எஸ்.ஆர் மாதிரிகள் செயல்திட்டங்கள் திறனையும் விளைவுகளையும் அதிகரிக்கும்.

## முதியோர்:

இந்தியாவில் இளம் வயதுடையவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் அதே வேளையில் முதியோரின் தொகையும் ஒரே சீராக அதிகரித்து வருகின்றது. தற்போது முதியோர் எண்ணிக்கை 100 மில்லியனாக இருக்கிறது. முதியோர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் 3.8% என்ற அளவில் அதிகரித்து வருகிறது. ஒட்டுமொத்த இந்திய மக்கள்தொகையில் முதியோர்களின் பங்கு 8% ஆகும். 2050ஆம் ஆண்டுக்குள் முதியோர்களின் எண்ணிக்கை 240 மில்லியனாக அதிகரிக்கும். முதியோர்களுக்கான பிரச்சினைகள் அனைவரும் அறிந்ததுதான். உடல் சீர்கேடு அடைவதோடு மனம் சார்ந்த நோய்களும் முதியோர்களுக்கு ஏற்படுகின்றன. மேலும் அங்கும் இங்கும் செல்வதில் அவர்களுக்குச் சிரமங்கள் ஏற்படுகின்றன. பணம் கிடைப்பதிலும் அவர்களுக்குச் சிக்கல் அதிகமாகிறது. சிவில் சமூகத்துக்கான உள்கட்டமைப்பு வசதிகள் மோசமாக இருப்பதால் அவர்களின் பிரச்சனைகள் மேலும் தீவிரம் அடைகின்றன. இவை எல்லாம் சேர்ந்து அவர்களின் சுகாதாரப் பராமரிப்பு, நலவாழ்வு மற்றும் வீட்டு வசதி ஆகிய தேவைகளை நிறைவு செய்வதில் சவாலாக இருக்கின்றன.

புதிய சி.எஸ்.ஆர் திருத்தமானது முதியோர் இல்லங்கள் அமைத்தல், பகல் நேரப் பராமரிப்பு மையங்கள், மூத்த குடிமக்களுக்கு இதர வசதிகளை ஏற்படுத்தித் தருதல் போன்ற செயல்களைச் செய்ய பரிந்துரைக்கிறது. ஷரத்து VIIல் சி.எஸ்.ஆர் நடவடிக்கைகளைச் சேர்த்தல் என்பது மூத்த குடிமக்களின் பராமரிப்புக்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்குத் துணை சேர்ப்பதாக அமைகின்றது.

## குடிசைப் பகுதி மேம்பாடு

நகரப் பகுதிகளில் குடிசைப் பகுதிகள் அதிக அளவில் உருவாவதில் வீட்டு வசதி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியன முக்கிய பங்கு வகிக்கின்றன. 2011இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவில் குடிசைப்பகுதியில் வாழும் மக்களின் தொகை 93 மில்லியனாக இருந்தது. சி.எஸ்.ஆர் நடவடிக்கைகளில் குடிசைப்பகுதி மேம்பாடும் உள்ளடக்கப்பட்டதால் நகரங்களைக் குடிசைப்பகுதி இல்லாதவையாக மாற்றும் அரசின் முயற்சிகளுக்குத் துணையாக அவை அமைகின்றன. “பொலிவுறு நகரங்கள் (ஸ்மார்ட் சிட்டி)'' அமைப்பதற்கான செயல்திட்டங்களை அமல்படுத்தப்படுவதற்கு முன்பு நமது நாட்டில் குடிசைப்பகுதி பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாக வேண்டும். நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு குடிசைப்பகுதி மக்களுக்கும் இலாபகரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கின்றது. குடிசைப் பகுதி மேம்பாடுகளை நோக்கமாகக் கொண்ட சி.எஸ்.ஆர் செயல்திட்டங்கள் தொழிற்சாலைகளுக்கும் நகர ஏழைகளுக்கும் இணைப் பலன்கள் பலவற்றைக் கொண்டுள்ளன.

## முடிவுரை

வர்த்தகத் தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் தங்களது தொழில்களின் மேல்நிலை மற்றும் கீழ்நிலை வரிசையாளர்கள் மீது கவனம் செலுத்தும் அதே நேரத்தில் மனிதவள மேம்பாட்டுச் சவால்களை எதிர்கொள்வதிலும் அவர்கள் முன்னணியில் இருக்கின்றனர். ஏனெனில் இவை அவர்களது வர்த்தகத்தை நேரடியாகப் பாதிக்கக் கூடியவை ஆகும். நிறுவனங்கள் தங்களது சி.எஸ்.ஆர் இலக்குகளை நிறுவன இலக்குகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் தேசிய வளர்ச்சி நிரலில் ஒரு அங்கமாக உருவாவதற்கான பிரகாசமான வாய்ப்பு இதில் உள்ளடங்கி உள்ளது. ஓராண்டுக்கு தோராயமாக ரூ.10,000 - ரூ.12,000 கோடி சி.எஸ்.ஆர் பட்ஜெட் என்பது இந்திய அரசாங்கத்தின் சமூகப் பிரிவு மேம்பாட்டுக்கான பட்ஜெட்டோடு ஒப்பிட மிகவும் குறைந்த அளவே ஆகும்.

எனவே புத்தாக்கமான சி.எஸ்.ஆர் செயல்திட்டங்கள் தேவைப்படுகின்றன. பொருளாதார ரீதியில் பொருந்தக் கூடிய, பலன்களை அளவிடக்கூடிய, பிற இடங்களில் அப்படியே செயல்படுத்தக் கூடிய வகையில் செயல்திட்டங்கள் இருக்க வேண்டும். நிறுவனங்கள் சி.எஸ்.ஆர் செயல் திட்டங்களுக்கான நிதியில் சிறிதளவினை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு மாற்றித் தரலாம். சமூகப் பிரிவில் உள்ள அடிப்படைப் பிரச்சினை எதுவெனில் விளைவுகளை அளவிட முடியாது என்பதே ஆகும். இத்தகைய புதுமையான மாதிரிகள் பொதுத்துறைக்கு நீண்டகால விளைவை உண்டாக்கத் தரப்படலாம். இந்த நிலையில் “நிறுவன சமூகப் புத்தாக்கம்'' என்பது ‘‘நிறுவனச் சமூகப் பொறுப்புடைமை'' என்பதோடு கைகோர்த்துச் செல்வதாக இருக்க வேண்டும். புத்தாக்க மாதிரிகளின் ஊடாக பகிரப்படும் விழுமியங்களை உருவாக்குவது ஆழமாக வேரூன்றி சமுதாயத் தாக்கங்களை ஏற்படுத்தும். இதனால் விளம்பு நிலை மக்கள் மைய நீரோட்டத்தில் கலப்பார்கள். நிறுவனம் உருவாக்கும் செல்வவளம் சி.எஸ்.ஆர் பட்ஜெட்டாக மாறுகிறது. அதிகப்படியான மூலவளத் திரட்டலைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் உபாயம்தான் இப்போது தேவைப்படுகிறது.

புத்தாக்கமான மற்றும் பொருத்தமான சி.எஸ்.ஆர் செயல்திட்டங்களை வடிவமைப்பதற்கு நிறுவனத் துறையின் ஒருங்கிணைப்புத் திறனும் தேவைப்படுகின்றது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிச் செயல்நிரல் ஒரு செயலூக்கமான, ஆரோக்கியமான மற்றும் படைப்பாற்றல் நிறைந்த வாழ்வை அனைவரும் மகிழ்ச்சியாக வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்கித் தர வேண்டும் என எதிர்பார்க்கிறது. ஒரு நாட்டின் வளர்ச்சிக் கதையில் மக்களின் பங்கேற்பும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் வளர்ச்சி எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

சிறுபான்மையினர், தலித்துகள், பழங்குடியினர், பெண்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள் போன்ற விளிம்புநிலை மக்களுக்கான சி.எஸ்.ஆர் செயல்திட்டங்கள் அவர்களது சமூக வாழ்வின் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்கப் பங்கைச் செய்ய வேண்டும் என எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

# உங்களுக்குத் தெரியுமா?

## இடவிளக்கவியல்

இடவிளக்கவியல் (டோபோகிரா்ஃபி) என்பது பூமியின் மேற்பரப்பை விளக்கும் விரிவான ஆய்வை விவரிக்க பரவலாகப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இது நிலத்தின் ஒரு பகுதியைப் பற்றிய இயற்கை அம்சங்களைப் பற்றியதாகும். இதில் மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், ஏரிகள், கடல்கள் மற்றும் பெருங்கடல்கள் மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட சாலைகள், பாலங்கள், ரயில்வே தண்டவாளங்கள் மற்றும் நகரங்களைப் பற்றியதாகும்.

இடவிளக்கவியலின் நோக்கம் எந்தவொரு அம்சத்தின் அட்சரேகை, தீர்க்கரேகை மற்றும் உயரம் போன்றவற்றை உறுதிப்படுத்துவதாகும். ஒன்றுடன் மற்றொன்றுக்கு உள்ள நிலைப் புள்ளிகளை உறுதி செய்து பதிவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் ஆய்வுப் பணிகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்டதாகும். இடவிளக்கவியல் வரைபடங்கள் கட்டுமானப் பொறியாளர்கள், சுற்றுச்சூழல் நிர்வாகிகள் மற்றும் நகர்ப்புற திட்டமிடுவோர் மட்டுமின்றி வெளிப்புற ஆர்வலர்கள், அவசர சேவை முகமைகள், மற்றும் வரலாற்று அறிஞர்களால் பயன்படுத்தப்படுகிறது. இடவிளக்கவியல் வரைபடும் என்பது முப்பரிமாண நிலப்பரப்பின் இரு பரிமான பிரதிநிதித்துவமாகும். எல்லைக் கோடுகள், வண்ணங்கள், சின்னங்கள், வில்லைகள் மற்றும் இதர வரைகலை பிரதிநிதித்துவ இணைப்புடன் இடவிளக்கவியல் வரைபடங்கள் பூமியின் மேற்பரப்பில் உள்ள இயற்கையான மற்றும் மனிதரால் உருவாக்கப்பட்ட வடிவங்கள் மற்றும் இடங்களை கொண்டவையாகும்.

இடவிளக்கவியலுக்காக பரவலாகப் பயன்படுத்தப்படும் நுணுக்கம் நேரடி ஆய்வாகும். இந்த நடைமுறையில் தூரம் மற்றும் கோணங்களை அளவிட தியோடோலைட்கள் போன்ற சமன்படுத்தும் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இது டிஜிட்டல் படமெடுக்கும் முறைகள் உள்ளிட்ட அனைத்து இடவிளக்க வரைபடத்திற்கான அடிப்படைத் தகவல்களை உருவாக்குகிறது. ஒரு நிலப்பகுதி அல்லது குறிப்பிட்ட மேற்பரப்பின் முழுமையான படத்தைப் பெற இந்தத் தகவலை வான்வழிப் புகைப்படம் அல்லது செயற்கைக்கோள் புகைப்படம் போன்ற இதர முறைகளுடன் இணைத்து இந்தத் தகவல்களைப் பயன்படுத்தலாம். நீருக்கடியில் உள்ள ஸ்பீக்கரில் இருந்து தண்ணீர் மூலம் சப்தம் அனுப்பப்படும் சோனார் வரைபடம்




மூலம் பெருங்கடல் அளவிடப்படுகிறது. இந்த ஒலி அலைகள் தண்ணீரில் உள்ள ஓஷன் பாட்டம், பவளப் படுகைகள் அல்லது நீர்மூழ்கிகள் போன்ற பொருட்களினால் பிரதிபலிக்கப்படுகிறது. இந்த ஒலிகள் மைக்ரோஃபோன்களால் அளவிடப்படுகிறது. எதிரொலி திரும்புவதற்கு எடுத்துக் கொள்ளும் நேரம் பிரதிபலிக்கும் பொருளின் தூரத்திற்கு விகிதாச்சாரமாக இருக்கும். இந்தத் தகவல்கள் நீருக்கடியில் உள்ள நிலப்பரப்பில் ஏற்படும் மாற்றங்களை அளவிட அனுமதிக்கிறது.

தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக தற்போது ஜி.பி.எஸ். எனப்படும் உலகளாவிய நிலைப்படுத்துதல் முறை வழிகாட்டும் செயற்கைக் கோள்கள் கட்டமைப்பின் ஆதரவுடன் வழக்கமான ஆய்வு நுணுக்கங்கள் சாத்தியமில்லாத மிகவும் பிந்தங்கிய நிலப்பரப்புக்களிலும் கள ஆய்வாளர்கள் கிடைமட்டநிலைகளை துல்லியமாக சில அடிகளில் உறுதிப்படுத்த அனுமதிக்கிறது, 3-டி படங்கள் செயற்கைக் கோள் அல்லது வான்வழிப் படங்களை பயன்படுத்தி கனிணி மென்பொருள் உதவியுடன் முப்பரிமாண மாதிரிகளை உருவாக்குகின்றன. வான்வழி புகைப்படக்கலை மற்றும் ஃபோட்டோகிராமெட்ரி பல்வேறு கோணங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்களை இணைத்து முக்கோண செயல்முறையைப் பயன்படுத்தி உறுப்புகளின் இருப்பிடத்தைக் கணக்கிடுகிறது. பல்வேறு சென்சார்களை சுமந்து செல்லும் இதர செயற்கைக்கோள்கள் விரைவில் வரைபடங்களை உருவாக்க வான்வழிப் புகைப்பட முறைக்கு மாறக்கூடும். இது வரைபடங்களை தயாரிக்கவோ அல்லது மேம்படுத்தவோ தேவைப்படும் நேரத்தை குறிப்பிடத்தக்க அளவு குறைத்து ஒட்டுமொத்த துல்லியத்தையும் மேம்படுத்தும். ●

# புதுச்சேரியில் மோடி ஃபெஸ்ட்




பிரதம மந்திரி திரு.நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மூன்று ஆண்டுகள் ஆட்சியை நிறைவு செய்வதையொட்டி நாடு முழுவதும் 300 இடங்களில் ‘‘வளர்ச்சி பெற்ற இந்தியாவை உருவாக்குதல்‘‘



என்ற மையக் கருத்தில் மோடி ஃபெஸ்ட் (MODI fest) நடத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக புதுச்சேரியிலும் இந்த விழா நடத்தப்பட்டது. புதுச்சேரியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை களவிளம்பர அலுவலகம் ஒருங்கிணைத்து நடத்தியது.

மே 30, 31, ஜூன் 1 ஆகிய மூன்று நாட்கள் முன்னோட்ட பிரச்சார ஊர்தி மூலம் புதுவையின் நகரப் பகுதிகள் மற்றும் கிராமப் பகுதிகளில் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மே 30 அன்று புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் எதிரில் பிரச்சார ஊர்தி தொடக்க விழா நடைபெற்றது. களவிளம்பர உதவி இயக்குனர் முனைவர் தி.சிவக்குமார் தலைமை வகித்தார். அகில இந்திய வானொலியின் பொறியியல் பிரிவு துணை இயக்குனர் ஆ.விஜயகுமார், செய்திப் பிரிவு துணை இயக்குனர் சாபுகுரியன் மற்றும் தொலைக்காட்சி பிரிவு துணை இயக்குனர் எஸ்.சந்திரா ஆகியோர் ஒருங்கிணைந்து கொடியசைத்து பிரச்சார வேனை துவக்கி வைத்தனர்.

ஜூன் 2ஆம் தேதி புதுச்சேரி பழைய துறைமுக வளாகத்தில் மாபெரும் கண்காட்சியைப் புதுச்சேரி துணைநிலை ஆளுனர் டாக்டர் கிரண்பேடி துவக்கி வைத்தார். எந்த அளவிற்குத் திட்டங்களை பற்றித் தெரிந்து கொள்ள முடியுமோ அந்த அளவிற்குப் பயன்களை நாம் பெற முடியும். இருட்டில் இருந்து கொண்டே இருந்தால் வெளிச்சம் கிடைக்காது. வெளியே வந்தால்தான் வெளிச்சம் கிடைக்கும். இதுபோன்ற நிகழ்ச்சிகள் அறியாமை என்னும் இருட்டைப் போக்கி வெளிச்சம் தரும் நிகழ்ச்சிகளாகும் என்று கிரண்பேடி தனது உரையில் தெரிவித்தார்.



தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் சார்பில் புதுச்சேரியில் மத்திய அரசின் நிதியில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்காக இலவச தொலைபேசி எண் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று துணைநிலை ஆளுனர் ஆலோசனை தெரிவித்தார். கண்காட்சியில் களவிளம்பர அலுவலகத்தின் சார்பில் அமைக்கப்பட்டு இருந்த அரங்கைப் பார்வையிட்ட கிரண்பேடி அங்கிருந்த பிரசுரங்கள், பதாகைகள் குறித்து ஆங்கிலத்தில் கேட்டு தெரிந்து கொண்டார். விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் களவிளம்பர அலுவலகத்தின் பங்கினை துணைநிலை ஆளுனர் பாராட்டினார். முன்னதாக களவிளம்பர உதவி இயக்குனர் முனைவர் தி.சிவக்குமார் வரவேற்றார். என்காம்பஸ் ஈவன்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் பிரதிநிதி சி.தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார். சென்னை பத்திரிகை தகவல் அலுவலக உதவி இயக்குனர் ஆர்.சிதம்பரநாதன் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் ஏராளமானோர் கலந்து கொண்டு மோடி கட்அவுட்டுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டனர்.

•


# வளர்ச்சிக்கான செயல்திட்டம்
# இந்தியாவின் மிக நீண்ட பாலம்



அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்ரா ஆற்றின் மீது இந்தியாவின் மிக நீளமான பாலமான தோலா - சாத்யா பாலத்தை 2017, மே 26ஆம் தேதி பிரதமர் திறந்து வைத்தார். 9.15 கிலோ மீட்டர் நீளமும் மூன்றுவழிப்பாதையும் கொண்ட இந்தப் பாலம் பிரம்மபுத்ரா ஆற்றின் கிளை நதியான லோஹிட்டின் மீது தோலா மற்றும் சாதியாவை இணைக்கும் வகையில் அசாமின் மேல் பகுதி மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு பகுதி ஆகியவற்றை வாரத்தின் ஏழு நாட்களிலும் 24 மணி நேரமும் இணைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் கட்டப்பட்டுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் நிலவி வந்த இணைப்பு இடைவெளியை நிரப்புவதாக இந்தப் பாலம் திகழும்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு என்பது மிகவும் முக்கியமானது என்றும், மக்களின் கனவுகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதில் மத்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்றும் கூறினார். இந்தப் பாலம் அசாம் அருணாச்சலப் பிரதேசம் இடையிலான இணைப்பை விரிவுபடுத்துகிறது என்றும் பெரிய அளவிலான பொருளாதார வளர்ச்சிக்கான கதவுகளைத் திறந்து வைத்துள்ளது என்றும் கூறினார். வட கிழக்கு மற்றும் நாட்டின் இதர பகுதிகளுக்கும் இடையிலான இணைப்பை விரிவுபடுத்த மத்திய அரசு முன்னுரிமை அளிக்கிறது என்றும் இது தொடர்பான பணிகள் பெரிய அளவில் விரைவுபடுத்தப்பட்டுள்ளன என்றும் பிரதமர் தெரிவித்தார். வட கிழக்கில் நல்ல இணைப்புகள் உருவாக்கப்படுவது அந்தப் பிராந்தியத்தை தென் கிழக்கு ஆசிய பொருளதாரத்துடன் இணைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். வட கிழக்கில் நிலவும் சுற்றுலா வாய்ப்புகள் பற்றி பேசிய அவர் இந்தப் பாலத்திற்கு பழம்பெரும் இசைக்கலைஞர், கவிஞர் மற்றும் பாடலாசிரியர் பூபென் ஹசாரிகாவின் பெயரைச் சூட்ட அரசு முடிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

முன்பு இந்தப் பகுதியில் பிரம்மபுத்ரா நதியைக் கடக்க வேண்டும் என்றால் படகில் சென்று தான் அதுவும் பகலில் மட்டும் தான் கடந்து செல்ல முடியும். வெள்ளம் ஏற்பட்டால் அதுவும் முடியாது. தேஜ்பூரில் உள்ள காலியா போமோரா பாலம் தான் பிரம்மபுத்ராவின் கடைசி பாலமாக இருந்தது.



தேசிய நெடுஞ்சாலை 37இல் உள்ள அசாமின் ரூபால் மற்றும் தேசிய நெடுஞ்சாலை எண் 52ல் உள்ள அருணாச்சலப் பிரதேசத்தின் மேகாஃரோலிங் இடையிலான தொலைவை இந்தப் பாலம் 165 கிலோ மீட்டர் அளவுக்கு குறைத்துள்ளது. இந்த இரண்டு இடங்களுக்கு இடையிலான பயண நேரம் தற்போதுள்ள 6 மணி நேரத்தில் இருந்து வெறும் ஒரு மணி நேரமாகக் குறைந்து ஐந்து மணி நேரத்தை மிச்சப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக நாளொன்றுக்கு ரூ. 10 இலட்சம் மதிப்பிலான பெட்ரோல் மற்றும் டீசல் மிச்சமாகும்.

இது அருணாச்சலப் பிரதேசத்தின் எல்லைப் பகுதிகளில் நமது நாட்டின் யுக்திபூர்வமான தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன் இந்த மாநிலத்தில் உருவாக்கப்படும் ஏராளமான நீர் மின் திட்டங்களுக்கு வசதியை அளிக்கும். பல்வேறு மின் உற்பத்தி நிறுவனங்கள் விரும்பும் பாதையாகவும் இது திகழ்கிறது.

வட கிழக்கிற்கான சிறப்பு விரைவுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அருணாச்சல் பிரதேச சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக பி.ஓ.டி. முறையில் ரூ. 2,056 கோடி செலவில் இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. ●